



# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 35 கதிர் 194 வைகாசி 28ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 11 ஜூன் 2019 வள்ளுவர் ஆண்டு 2050



Now in JAFFNA
BBA
(Bachelor of Business Administration)
Leading to MBA
BLC CAMPUS
0777 174 443
4th Lane, Brown Road, Jaffna.
T - 021 493 5555, 021 493 6666
E - info@blccampus.edu.lk
www.blccampus.edu.lk


# மைத்திரியை உதாசீனம் செய்து இன்று கூடுகின்றது தெரிவுக்குழு



கொழும்பு, ஜூன் 11

உயிர்த்த ஞாயிறு தினமன்று நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பாக ஆராயும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு இரத்துச் செய்யப்பட வேண்டும் என்ற அரச தலைவரின் மைத்திரிபால சிறிசேனவின் கோரிக்கையை அடியோடு நிராகரித்து இன்று செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத் தெரிவுக் குழு கூடுகின்றது.

19

## பதில் அமைச்சர்களை நியமித்தார் மைத்திரி







கொழும்பு, ஜூன் 11

அரசில் பதவி வகித்த அமைச்சுப் பதவிகளில் இருந்து முஸ்லிம் அரசியல் தலைவர்கள் அண்மையில் கூட்டாக விலகியிருந்த நிலையில் அந்த வெற்றிடங்களுக்குப் புதிய அமைச்சர்கள் தற்காலிகமாக

19

## அமைச்சரவைக் கூட்டத்தை இரத்துச் செய்தார் மைத்திரி?

கொழும்பு, ஜூன் 11

அமைச்சரவை நாளை நடைபெறாது என்று அரச உயர் மட்டத் தகவல்களில் இருந்து அறிய முடிகின்றது.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களை ஆராயும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை இரத்துச் செய்யும் வரையில் அமைச்சரவை கூட்டப்படமாட்டாது என்று கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற சிறப்பு அமைச்சரவைக் கூட்டத்தில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கடுந்தொனியில் குறிப்பிட்டிருந்தார்.

எனினும் அதை உதாசீனப்படுத்தி இன்று தெரிவுக் குழு அமர்வு நடைபெறவுள்ளது. அதனால் இன்று நடைபெறவிருந்த அமைச்சரவைக் கூட்டம்

19

## இந்தியாவின் விருப்பப்படியே நடக்கிறார் விக்கினேஸ்வரன்

கஜேந்திரகுமார் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 11

முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் கட்சியில் இணைவதற்கு நாம் தயாராவே இருக்கின்றோம். ஆனால் அவர் எம்மைச் சேர்க்கின்றார் இல்லை. எங்களைச் சேர்க்க வேண்டாம் என்று அவருக்கு இந்தியா கூறியுள்ளதாம்.

இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்

19

## சு.கவுடன் இணையாது விட்டாலும் வெற்றியே!

லொக்குகே கூறுகின்றார்

கொழும்பு, ஜூன் 11

சுதந்திரக் கட்சியுடன் இணைந்துதான் தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்ற எண்ணம் எமக்கு இல்லை. சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் சார்பில்தான் அரச தலைவர், தலைமை அமைச்சர் ஆகியோர்

19



## நீராவியடிப் பிள்ளையார் விவகாரம்

## நீதிமன்ற உத்தரவை மதிக்குமாறு பிக்கு, பொலிஸாருக்குப் பணிப்பு

இந்து சமய அலுவல்கள் அமைச்சர் நேரில் சென்று நிலமையை ஆராய்ந்தார்

முல்லைத்தீவு, ஜூன் 11

முல்லைத்தீவு, பழைய செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலயம் தொடர்பாக நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பை பௌத்த பிக்குவும், பொலிஸாரும் மதித்து நடக்க வேண்டும்

07

## மைத்திரியுடைய செயற்பாடு கவலையை ஏற்படுத்துகிறது

ஜே.வி.வி. கூறுகின்றது

கொழும்பு, ஜூன் 11

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் பற்றிய விசாரணைகளை மேற்கொள்ளும் தெரிவுக் குழுவில் முன்வைக்கப்பட்ட தன் மீதான குற்றச்சாட்டுக்களை

19

## பெற்றோல் விலையில் அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 11

எரிபொருள் விலைச் சூத்திரத்துக்கு ஏற்ப ஒக்ரோன் 92 ரகப் பெற்றோலின் விலை லீற்றர் ஒன்றுக்கு 3 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. 92 ரக பெற்றோல் ஒரு லீற்றரின் புதிய விலை 138 ரூபாவாக உயர்ந்துள்ளது.

19

## தமிழர்களது பிரச்சினை தீர ஐக்கியத்துடன் செயற்படுக

இரா.சம்பந்தன் தெரிவிப்பு

திருகோணமலை, ஜூன் 11

நீண்ட காலமாக தொடரும் தமிழர்களது பிரச்சினைகள் வெகுவிரைவில் தீர்க்கப்பட வேண்டும். அதற்காக அனைவரும் ஐக்கியத்துடன் செயற்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரி

06

## தமிழகம் சென்று ஸ்டாலினை சந்தித்துப் பேசினார் ஹக்கீம்



கொழும்பு, ஜூன் 11

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம், தமிழ்நாட்டின் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மு.க.ஸ்டாலினை அவரது இல்லத்தில் நேற்றுச் சந்தித்துக் கலந்துரை

19

## அவசரகால சட்ட விதிகளுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூன் 11

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலை அடுத்து நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள அவசரகாலச் சட்டத்தில் உள்ள 6 விதிகளைச் சவாலுக்கு உட்படுத்தி தாக்கல் செய்யப்பட்ட வழக்கு அடுத்த மாதம் 5ஆம் திகதி வரையில் ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் பணிப்பாளர் பாக்கியசோதி சரவணமுத்து இந்த அடிப்படை உரிமை மீறல் மனுவைத் தாக்கல் செய்திருந்தார். அவர் சார்பில் அரச தலைவர் சட்டத்தரணியும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் மன்றில் நேற்று

19

## உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் அறிக்கை நேற்று கையளிப்பு

கொழும்பு, ஜூன் 11

கடந்த ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி நாட்டின் 8 இடங்களில் நடத்தப்பட்ட தாக்குதல்கள் தொடர்பில் ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட மூவரடங்கிய சிறப்பு விசாரணைக் குழுவின்

06



# ADAPT AND EVOLVE MORE EFFICIENTLY WITH SLT

SLT understand that your business is ever expanding, and that through this expansion your business will need to upscale its services. With SLT enterprise, you receive the best in digital infrastructure so that you can manage your services efficientlyand with fluidity.

**The IP VPN** is a Virtual Private Network (VPN) that delivers private network services over the SLT's highperformance network infrastructure through IP/MPLS (Multi-Protocol Label Switching) backbone that utilizes technologies

**SLT's IP VPN Solutions**
- Domestic VPN
- Premium IP VPN
- Value VPN
- Global VPN
- Mobile VPN
- Remote VPN

**The Metro Ethernet** service is a state-of-the-art Ethernet network operated by SLT to deliver high-bandwidth connectivity solutions and is based on the well-known Metro Ethernet standard of Metro Ethernet Forum (MEF).


Sites with high-bandwidth requirements can be connected with Metro Ethernet Service to form their intranets.
In addition, enterprises can use high-speed Ethernet to access Wide Area Network services (IP VPNs).

**Business Internet Line (BIL)** is a dedicated internet connection that offers superfast speeds and unrivalled resilience and reliability for enterprises.

**Enterprise Wi-Fi :** You can buy bulk volume of internet traffic from SLT & offer connectivity to your subscribers. SLT provides a portal which you can create data passes, voucher and manage their subscribers.

**SLT has two types of Packages.**
- Volume Limit Packages
  Top-up facility is available (10 volume packages available)
- Unlimited Volume Packages
  Charge based on bandwidth

**IP Trunk Line (ITL)** Service provides Session Initiation Protocol (SIP) connectivity with set of sessions to enterprise customer's IP-PBX



**Business Trunk Line** Service offers connectivity to intelligent customer end devices such as IP PABXs, IP Phones, PBXs and Key Telephone System(KTS).

SLT offers following Business Trunks to suite the volume of voice traffic flowing from and to the Enterprise customers.
Business Trunk Line Provides dedicated or shared E1 connectivity to your Voice Solutions

**SLT Akaza Cloud** is the next generation cloud platform for all your IT needs. SLT Akaza cloud is on demand self-serve data centre service, including virtual machines, Virtual networks and storage.

**Akaza's technology typically integrates all of its cloud services inclusive of**
- IAAS – (flavors of Windows, Ubuntu, cent OS & RED HAT Linux),
- SAAS – (E-Learning and Bileeta ERP)
- Staas
- CaaS
- PaaS
- DaaS

**SLT's Virtual Private Server (VPS)** is the best solution for you if you require the control of a dedicated server matched with the affordability and simplicity of a traditional shared hosting solution. It is bundled with a powerful set of features in the hosting environment such as operating system, security, data transfer, data backup and storage.

**A hosted call center platform** is deployed on the provider's premises or a third party's hosted site instead of the client's premises.

**SLT's Hosted Call Center Solutions**
- FaceTone HCC
- Avaya HCC

**Integrated Internet Service (IIS)** is a Business Internet service provided through IPVPN network, enabling the branches of the VPN network toaccess internet without going through their head office.

අසීමිත ඔබ
எல்லைகளற்ற நீங்கள்
Limitless you




Sri Lanka Telecom

www.slt.lk | www.mobitel.lk

Follow us on


இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் அதிமேதகு ஜனாதிபதி கௌரவ. மைத்திரிபால சிறிசேன

# SMART இலங்கையை நோக்கிய டிஜிட்டல் பயணம்

## தேசிய டிஜிட்டல் திட்டத்தின் வெளியீடு
## 2019 ஜூன் 11ஆம் திகதி, தாமரைத் தடாக அரங்கு





கௌரவ பிரதமர்
ரணில் விக்ரமசிங்க


கௌரவ. ஹரின் பெர்னான்டோ
தொலைத்தொடர்பாடல்கள், வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர்


கௌரவ. அஜித் பி. பெரேரா
டிஜிட்டல் உட்கட்டமைப்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர்


பி.ஜி. குமாரசிங்க சிறிசேன
குழும தலைவர்
ஸ்ரீ லங்கா ரெலிகொம் பிஎல்சி

SLT Digital Info Services · eChannelling · GSCD · Human Capital Solutions · SLT VisionCom · SLTC · Property · SKYnetwork · Sri Lanka Telecom Mobitel · Sri Lanka Telecom

1212 | www.slt.lk
Follow us on

Watch it LIVE on: PEO TV – The best way to watch TV | Event TV – Your event broadcaster | live.mic.lk

Limitless You
Citizens — Customers — Employees

# தகைமை உண்டு வாய்ப்பு கிட்டவில்லை!

கமலாவின் கவலை

பல்கலைக்கழக பட்டப்படிப்பொன்றை தொடர்வதற்கு அடிப்படைத் தகைமை (A/L Result) இருந்தும் பல்கலைக்கழக அனுமதி கிடைக்கவில்லை.

கமலா (2018 A/L)
நல்லூர்.

பல்கலைக்கழக பட்டமொன்றைப் பெறுவதற்கு வருடாந்தம் இலட்சத்திற்கு மேற்பட்டோர்க்கு தகைமை இருந்தும் வெறும் 25,000 மாணவர்களுக்கே பல்கலைக்கழக அனுமதி கிடைக்கின்றது.

Sri Lanka UGC Recognized

## இப்பொழுது...

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் (U.G.C) அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச பட்டமொன்றை இன்றே தேர்ந்தெடுங்கள்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச பட்டமொன்றை அரச தொழில்வாய்ப்புப் பெற்றுக் கொள்வதற்கும் பயன்படுத்த முடியும்.

**கவலை வேண்டாம்**

நீங்கள் விரும்பிய துறைகளில் உங்கள் எதிர்காலத்தை மாற்றி அமைக்கின்ற ஆயிரக்கணக்கான வெற்றியாளர்களில் நீங்களும் ஒருவர் ஆகுங்கள்.

**உடன் அழையுங்கள்**

**0777174443**



BLC CAMPUS

**4th Lane, Brown Road, Jaffna.**
T - 021 493 5555, 021 437 4443
E - info@blccampus.edu.lk

abe

www.blccampus.edu.lk

## லொறி வாடகைக்கு விடுதல்

மேற்படி எமது சங்கத்துக்குச் சொந்தமான
**கென்டேயினர் NP LH - 9811 இலக்க லொறி**
கூட்டுறவுத்துறையினர் மற்றும் தனியாருக்கு மாதாந்த அல்லது நாளாந்த
அடிப்படையில் வாடகைக்கு வழங்கப்படும்.

◆ **கூட்டுறவுத் துறையினருக்கு முன்னுரிமையளிக்கப்படும்.**

மேலதிக விவரங்கள் அலுவலக நேரத்தில் நேரடியாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

தொலைபேசி இல :- 021 226 0504
தலைவர் :- 077 922 9842
பொதுமுகாமையாளர் :- 076 640 8504

## வைத்திய சேவையும் பராமரிப்பும்

**வயோதிப நோயாளர்களை உங்கள் வீடுகளில் வைத்து பராமரிப்பதில் கஸ்டப் படுகிறீர்களா?**

எங்கள் இடத்தில் அல்லது உங்கள் இடத்தில் உரிய முறையில் பராமரிக்கப்படும்.

**077 873 0129**

## E.S Printers

மக் பிரிண்ட் (MUG) 450/=

357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 492 7471, 021 492 7472
esprintersjaffna@gmail.com

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை திருமதி
நிமலன் உதயேஸ்வரி அவர்களின்
அன்புத் தாயார்

**திருமதி இலட்சுமி தம்பைய**

அவர்கள் 09.06.2019 ஞாயிற்றுக்கிழமை
இறைபதமடைந்தார். அன்னாரின் இழப்பா
துயருற்றுள்ள குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுட
அவரது ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**ஆசிரியர் நல்லுறவுக் கழகம்,**
**யா/புனித சாள்ஸ் மகா வித்தியாலய**

(CS/25801)(11.17)

## பகிரங்க விரிவுரை




**"மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2018 இல் பிரதிபலிக்கப்பட்டவாறு பொருளாதார நிலை"**
**(தமிழ் மொழியில்)**

**2019 யூன் 13 வியாழக்கிழமை**
**பி.ப. 3.00 மணிக்கு (தமிழ்மொழிமூலம்)**

அனுமதி இலவசம்!

**கேட்போர்கூடம்,**
**பொதுநூலகம்,**
**யாழ்ப்பாணம்.**

### பேச்சாளர்

**திரு.பா.சிவதீபன்,**
பிராந்திய முகாமையாளர்,
பிராந்திய அலுவலகம்,
இலங்கை மத்திய வங்கி,
கிளிநொச்சி.

**அனைவரும் வருக !!!**

**பிராந்திய அலுவலகம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**அறிவியல்நகர், கிளிநொச்சி.**

தொலைபேசி : 021 228 5912/4
தொலைநகல் : 021 228 5911
மின்னஞ்சல் : rokn@cbsl.lk

## நெஞ்சை விட்டகலா
## 15 ஆம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில்
08
04
1972

விண்ணில்
11
06
2004

**அமரர் அம்புரோஸ் அலெக்ஸ்புறுஸ்ரன் [ஜெனி]**

அப்பா நீர் இருந்தவரை
தாங்கிப் பிடிக்கவும் தூக்கி நிறுத்தவும்
பலம் தேவையென்றே தெரியவில்லை
இன்று இழுத்து நிறுத்த நீர் இல்லை
நின் வேர் கொண்ட பிடிவாதம்
எங்களுக்கு இல்லை
உறவுகளில் வலுவில்லை
திக்கெதுவும் புரியவேயில்லை....
ஆலமரமாமே குடும்பம் !
இன்று நிற்கிறோம் தான்,
இங்குமங்குமாய் சாய்ந்து
வேரின்றி விழுதுகளாய்
நாங்கள்....

வெற்றிலைக்கேணி,
முள்ளியான்.

நீங்கா நினைவுகளுடன் :
மனைவி, குடும்பத்தினர்

## INVERTER MADE IN Germany / Austria + Tier 1 Panels

MICRO PC SYSTEMS
Micro Power Co Systems

25 YEARS WARRANTY

SMA
Fronius




- செலவை ஏற்படுத்திய மின்சாரம் வருமானத்தைப் பெற்றுத் தரும்
- மின் கட்டணம் இல்லை




| 6kW SYSTEM | 7kW SYSTEM | 8.5kW SYSTEM | 10kW SYSTEM | 12kW SYSTEM | 18kW SYSTEM | 22kW SYSTEM | 33kW SYSTEM | 44kW SYSTEM |
|---|---|---|---|---|---|---|---|---|
| 985,000/= | 1,155,000/= | 1,385,000/= | 1,515,000/= | 1,735,000/= | 2,175,000/= | 2,495,000/= | 3,395,000/= | 4,995,000/= |
| 712 Units | 864 Units | 1030 Units | 1188 Units | 1425 Units | 2138 Units | 2613 Units | 3960 Units | 5306 Units |
| PV.max 7.5kW | PV.max 9kW | PV.max 11.4kW | PV.max 12.3kW | PV.max 15kW | PV.max 22.5kW | PV.max 30kW | PV.max 37.8kW | PV.max 60kW |

### மின்சார தடை இல்லை
### No Power-Cut




### விவசாயிகளுக்கான மின்சாரம்




### SOLAR STREET GARDEN LIGHTS




### TIPS!!!

*Factors affecting performance of a solar PV system*

A) Factors which are under the control of Human effort

1. Solar Panels: Figures given in the datasheet by the panel manufacture and its accuracy of Peak power, Module efficiency, temperature co-efficient.=> So request for Tier 1 brand
2. Installation: Panel's orientation and tilt, System Design, Grid quality =>Select well-trained / Certified Company for the Installation.
3. Inverter: Efficiency =>so select premium brands

B) Factors which are beyond the control of Human effort

1. Solar irradiance (SI) available at the site
2. Ambient temperature
3. Accumulation of Dirt/Smog
4. wind speed etc.

KACO SMA Fronius victron energy REC JinKO Solar YINGLI SOLAR ReneSola

LECO Approved

கொழும்பு - 077 3963281/ 077 3963283 / 071 0356062 / 077 3963278
வவுனியா - 0777 425974 / 0777 763071 / 077 3963273
யாழ்ப்பாணம் - 077 3963280 / 0777 425973 / 0777 425974 / 077 3963284
மட்டக்களப்பு - 071 0356069 / 071 8963280 / 071 0356072 / 077 3963281

மொத்த விற்பனையாளர்கள் தொடர்பு கொள்ளவும் : 0773 076409 / 071 9963275 | E-mail: mail@micropcsystems.com | Web: www.solarpowerlk.com

# பதினைந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 04 . 08 . 1937

மறைவு 11 . 06 . 2004

## அமரர் தில்லையர் குலவீரசிங்கம்

(கிறிக்கட் அங்கிள்)

(ஓய்வு பெற்ற நீதிமன்ற லிகிதர்)



ஆண்டுகள் பதினைந்தென்ன
ஆயிரம் தான் ஆனாலும்
எம் உள்ளக் கோயிலில் வாழும்
தெய்வம் நீங்கள் தான் அப்பா.
இவ் ஊருக்கே ஒளி தந்த சூரியனும்
நீங்கள் தானே அப்பா.
எப்படி உங்கள் நினைவுகள்
மறைந்து போகும்.
என்றும் உங்கள் நினைவுகளோடு
வாழும் உறவுகள் நாங்கள்

(CS 23911D(14.17)

பெரிய மதவடி,
சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.

மனைவி, மகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்,உறவினர்கள்.



# மரண அறிவித்தல்



பிறப்பு 06 . 12 . 1977

இறப்பு 10 . 06 . 2019

## நவரட்ணம் ரகுநாதன்

யாழ் வயாவிளானைப்பிறப்பிடமாகவும் மாரியம்மன் வீதி. திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட நவரட்ணம் ரகுநாதன் நேற்று (10.06.2019) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் நவரட்ணம் - பராசக்தி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வரும் காலஞ்சென்ற கனகசபாபதி மற்றும் பீதாங்கனி அம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் குணேஸ்வரி (முன்னாள் ஆசிரியை - யாழ் இந்து மகளிர் கல்லூரி. ஆசிரிய ஆலோசகர் - யாழ் கல்விவலயம்) அவர்களின் ஆருயிர் கணவரும் அஸ்விதா (யா/வேம்படிமகளிர்கல்லூரி) அஸ்வின், அட்சயன் (யா/யோன்பொஸ்கோ வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கதிர்காமநாதன் (டென்மார்க்), கோடீஸ்வரநாதன் (நெதர்லாந்து), மகேஸ்வரநாதன் (பிரான்ஸ்), ஜெயநாதன் (லண்டன்), ஆகியோரின் அன்புச்சகோதரரும் ஜெயறஞ்சினி, கவிதா, மோகனா, சயந்தினி, ஜெயதீஸ்வரி, காலஞ்சென்ற ரதீஸ்வரி, ஜெய காந்தன், ஜெயசீலன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் வினாயககுமார், சசிகுமார், ஈஸ்வரி, சுகன்யா ஆகியோரின் அன்புச்சகலனும் ஹரிஸ், ஜெனிஸ், அபிநயா, ஜாதவன், ஜனன், தருணீ, உமேஸ், டயானி, கிசோன், பகீன் ஆகியோரின் அன்புச்சித்தப்பாவுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.06.2019) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 38,
மாரியம்மன் கோவில் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்
077 662 2188, 021 222 1979


## தமிழர்களது...

வித்துள்ளார்.

திருகோணமலையில் நேற்று இடம்பெற்ற அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது;

நாட்டில் உறுதித்தன்மையை வலுப்படுத்த அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்பதை நான் வலியுறுத்துகின்றேன். கடந்த 30 ஆண்டுகால ஆயுத போராட்டத்தில் தமிழ் மக்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகினர். அப்படி ஒரு நிலை மீண்டும் ஏற்படக்கூடாது.

தற்போது மக்களின் முக்கியமான பிரச்சினைகளுக்கு இன்னமும் தீர்வு ஒன்று எட்டப்படவில்லை. அதற்கு உரிய தீர்வு வழங்கப்பட வேண்டும். அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்ட வேண்டும் என இங்கு கோரிக்கை விடுக்கின்றேன். இந்தப் பகுதியில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளவும் அனைவரது ஒத்துழைப்பு அவசியம் -என்றார். (எ)

## உயிர்த்த...

இறுதி அறிக்கை அரச தலைவரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. உயர்நீதிமன்ற நீதியரசர் விஜித் மலல்கொடவால் இந்த அறிக்கை நேற்று முற்பகல் அரச தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து கையளிக்கப்பட்டது என்று அரச தலைவர் ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறுத் தினத்தில் நடத்தப்பட்ட தாக்குதலுக்குக் காரணமாக அமைந்த பல விடயங்கள் தொடர்பில் ஆராய்வதற்கு கடந்த ஏப்ரல் 22ஆம் திகதி அரச தலைவரால் மூவரடங்கிய விசேட விசாரணைக் குழு நியமிக்கப்பட்டது.

உயர்நீதிமன்ற நீதியரசர் விஜித் மலல்கொட, அமைச்சின் முன்னாள் செயலர் பத்மசிறி ஜயமான்ன மற்றும் முன்னாள் பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக்கோன் ஆகியோர் இந்த விசாரணைக் குழுவிற்கு நியமிக்கப்பட்டனர். இந்தக் குழுவின் இடைக்கால அறிக்கைகளும் ஏற்கனவே கையளிக்கப்பட்டுள்ள நிலையில், இறுதி அறிக்கை நேற்றுக் கையளிக்கப்பட்டுள்ளது என்று அரச தலைவர் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (எ)


**கார், வான் வாடகைக்கு தேவை**

கார்கள், வான்கள் மாதாந்த குத்தகை அடிப்படையில் சாரதி அல்லாமல் நீண்டகால குத்தகைக்கு தேவை. 0710938967



ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்

## சின்னத்துரை சுந்தரலிங்கம் (J.P)

(சங்கானை நிகரை ஞானவைரவர் ஆலயபரிபாலன சபையின் முன்னாள் தலைவரும் பொருளாளரும் வலிகாமத்தின் மூத்த நாடக கலைஞரும் நிகரையம்பாள் சனசமூகநிலைய முன்னாள் தலைவரும் J/179 முதியோர் சங்க முன்னாள் தலைவரும் அகிலஇலங்கை சமாதான நீதவானும் முன்னாள் இலங்கைப் போக்குவரத்துச்சபை நடத்துனரும் வலிமேற்கு வட்டுக்கோட்டை மத்தியஸ்தர்சபை முன்னாள் உறுப்பினரும் ஆவார்)



மண்ணில் 14.07.1934

விண்ணில் 10.06.2019

சங்கானை நிகரை வீதியைப்பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை சுந்தரலிங்கம் நேற்று (10.06.2019) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார்காலஞ்சென்றவர்களானசின்னத்துரை-முத்துதம்பதிகளின் அன்புப் புதல்வரும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - நாகரத்தினம் தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற பவளராணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான புஸ்பரத்தினம், கமலாம்பிகை, (E.S.K) கந்தசாமி மற்றும் மருக்கொழுந்து ஆகியோரின் அருமைச் சகோதரனும் இந்துலோஜினி (கனடா), மேனகா, குகதாசன் (பிரான்ஸ்), ஜெனவராஜா (பிரான்ஸ்), சுடர்சன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் தவயோகராசா (கனடா), ஜெயபாலன் (ஜெயபாலன்நகைத்தொழிலகம்), சுமதி (பிரான்ஸ்), மதிவேணுகா (பிரான்ஸ்), சாந்தி ஆகியோரின் மாமனாரும் மயூரன், அபிரா, சஞ்சைய், விகான், தர்சிகன், தாரணி, காதேவ், காமேஸ், பைரவன், பைரவி, ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.06.2019) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கானை கரைச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நிகரை வீதி, சங்கானை
0775941025, 0774129275

தகவல்: மகன் - சுடர்சன் (சுதன்)
மருமகன் - ஜெயபாலன்

## நீதிமன்ற...

என்று இந்து சமய அலுவல்கள் அமைச்சர் மனோ கணேசன் அறிவுறுத்தியுள்ளார்.

இந்த ஆலயம் தொடர்பாக நிலவி வரும் சர்ச்சைகள் தொடர்பான கலந்துரையாடல் நேற்று முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. அதிலேயே அமைச்சர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

நேற்று கன்னியா வெந்நீர் ஊற்று விநாயகர் ஆலய விவகாரம் தொடர்பாக ஆராய்வதற்காக திருகோணமலை சென்றிருந்த அமைச்சர் மனோ கணேசன் தலைமையிலான குழுவினர் அதன்பின்னர் முல்லைத்தீவுக்குச் சென்றனர். பழைய செம்மலைப் பகுதியில் அமைந்துள்ள நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்துக்கு அவர்கள் நேரில் சென்றனர்.

அந்த ஆலயத்துக்கு அருகில் பௌத்த பிக்கு ஒருவர் அடாத்தாக விகாரை ஒன்றை அமைத்து பெரிய புத்தர் சிலை ஒன்றையும் அமைத்துள்ளார். இந்த விவகாரம் தொடர்பான வழக்கு கடந்த சில மாதங்களாக முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த நிலையில் கடந்த மே மாதம் 6ஆம் திகதி இந்த வழக்கின் மீதான தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது.

"அடாத்தாக பௌத்த பிக்குவால் விகாரை அமைக்கப்பட்டுள்ள பிரதேசத்தில் ஒரு பிள்ளையார் ஆலயம் மிக நீண்டகாலமாக இருந்துள்ளமை உறுதிசெய்யப்பட்டுள்ளது. அந்தப் பிள்ளையார் ஆலயத்தில் தடைகள் எதுவும் அற்ற நிலையில் வழிபாடுகளை மேற்கொள்ளவும் அபிவிருத்திகளை உரிய உள்ளூராட்சி திணைக்களங்களின் அனுமதிகளுடன் மேற்கொள்ளவும் நீதிமன்றம் அனுமதியளிக்கின்றது" என்று 'தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது.

ஆனால் அதன்பின்னரும், பிள்ளையார் ஆலயத்துக்கு வழிபடச் சென்ற மக்களுக்கு பிக்குவாலும், பொலிஸாராலும் இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

இந்தநிலையில், இந்துசமய அலுவல்கள் அமைச்சர் மனோ கணேசன் தலைமையிலான குழுவினர் மற்றும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன், கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் உள்ளிட்டோர் நீராவியடிப் பிள்ளையார் ஆலய நிர்வாகத்தினருடன் இணைந்து ஆலயத்தை இன்று பார்வையிட்டனர். அதன்பின்னர் நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தில் குருகந்த ரஜமஹா விகாரை என்ற பெயரில் விகாரை அமைத்துள்ள பிக்குவுடன் பேச்சு நடத்தினர்.

தொடர்ந்து ஆலய விவகாரம் தொடர்பில் அமைச்சர் மனோ கணேசனின் தலைமையில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் கலந்துரையாடல் நடைபெற்றது. முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான வேலுகுமார், சி.சிறீதரன், சிவசக்தி ஆனந்தன், சார்ள்ஸ் நிர்மலநாதன் மற்றும் நீராவியடிப் பிள்ளையார் ஆலய நிர்வாகத்தினர், குருகந்த ரஜமஹா விகாரை ஆலயப் பிக்கு, விகாரை சார்பில் நீதிமன்றத்தில் முன்னிலையாகும் சட்டத்தரணி, பொலிஸ் அதிகாரிகள் ஆகியோர் அதில் கலந்துகொண்டனர்.

நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தின் தொன்மை பற்றி விளக்கமளித்த பிள்ளையார் ஆலய நிர்வாகத்தினர், ஆலயம் தமக்கே உரியது என ஆவணங்களைச் சமர்ப்பித்தனர். பௌத்த பிக்குகளின் அடாத்தான நடவடிக்கைகள், பிக்குகளுக்குச் சார்பான பொலிஸாரின் நடவடிக்கைகள் ஆகியவற்றை அவர்கள் புட்டுபுட்டு வைத்தனர். தமது முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்படாதமையையும் அவர்கள் விலாவாரியாக எடுத்துரைத்தனர்.

புத்தசாசன அமைச்சால் ஆலயத்தின் இடம் குறித்து விளக்கம் கோரப்பட்டதையும், பிரதேச சபை அங்கு விகாரை இருக்கவில்லை என்று குறிப்பிட்டதையும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

பிக்குகள் சார்பு சட்டத்தரணி இதைக் கடுமையாக மறுத்தார். 2013ஆம் ஆண்டு, 80166 இலக்க வர்த்தமானியின் மூலம், அந்த இடத்தை தொல்பொருள் திணைக்களம் பொறுப்பேற்றது. தொல்பொருள் திணைக்களத்துக்குரிய நிலம் என்று அவர் தெரிவித்தார். விகாரை சார்பில் வந்த பௌத்த பிக்கு, ஆக்ரோசமாகவும், விடாப்பிடியாகவும் அது தமது பூர்வீக நிலம் என வாதிட்டார்.

பிள்ளையார் ஆலயக் கட்டுமானத்துக்குப் பொலிஸார் தடை விதிப்பதை ஆலய நிர்வாகம் சுட்டிக்காட்டியது. அதே நேரம் நீதிமன்றத் தடை இருக்கும்போதே விகாரை கட்டுமானம் நடந்ததையும் சுட்டிக்காட்டினார்.

ஆலய நிர்வாகம் நீதிமன்ற உத்தரவுப்படி உரிய திணைக்கள அனுமதிகளைப் பெற்று வந்தால் குறித்த இடத்தை அனுமதியளிக்கத் தயாராக உள்ளோம் என்று அப்போது பொலிஸார் கூறினர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற சிவசக்தி ஆனந்தன், "வனவளத் திணைக்களம், தொல்பொருள் திணைக்களத்தின் நடவடிக்கைகள் தொடர்பாகத் தொடர்ந்து பேசி வருகின்றோம். ஆனால், எந்த முடிவும் எட்டப்படவில்லை. காலம்தான் வீணாகிக் கொண்டிருக்கின்றது. மனோ கணேசனால்கூட அதைச் செய்ய முடியவில்லை. இலங்கை அரசு இதைத் திட்டமிட்டு செய்கின்றது" என்றார்.

அங்கு நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் கருத்துத் தெரிவித்தபோது, "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் அமைச்சுப் பதவியை ஏற்கும்படி வலியுறுத்துகின்றார்கள். ஆனால், நாளைக்கே, தமிழ் அமைச்சர்கள் பதவி விலகும்படி பௌத்த பிக்குகள் உண்ணாவிரதம் இருந்தால் என்ன செய்வது? இங்கு தமிழர்களின் பாரம்பரிய நிலத்தில் பிக்குகள் கோயில் அமைக்க விடுகின்றார்கள் இல்லை. அமைச்சர் மனோ கணேசனாலும் அந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியவில்லை. உங்கள் கதையைப் பொலிஸாரே கேட்கின்றார்கள் இல்லை" என்று குறிப்பிட்டார்.

இவற்றையெல்லாம் கேட்ட அமைச்சர் மனோ கணேசன், "முல்லைத்தீவு மாவட்ட மக்கள் போரால் சொல்லொணாத் துயரங்களைச் சந்தித்த மக்கள். இந்த மக்களை மீண்டும் மீண்டும் துன்பப்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபட வேண்டாம். பிரிவினையை ஏற்படுத்த வேண்டாம்" என்று பிக்கு மற்றும் பொலிஸார் ஆகியோரிடம் கேட்டுக்கொண்டார்.

"நீதிமன்றத்தால் ஏற்கனவே வழங்கப்பட்டிருக்கின்ற தீர்ப்பை இரண்டு தரப்பும் மதித்துச் செயற்பட வேண்டும். நீதிமன்றத் தீர்ப்புக்கு அமைவாக வேலை செய்பவர்களைப் பொலிஸார் இடையூறு செய்யக்கூடாது. அதேபோன்று நீதிமன்றத் தீர்ப்பை மதிக்காது அனுமதிகள் எதுவும் பெற்றுக்கொள்ளாது அபிருத்தி வேலை செய்கின்ற பிக்கு தரப்பினரோ அல்லது பிள்ளையார் ஆலய தரப்பினரோ இருந்தால் அவர்கள் மீது பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும். பொலிஸார் பக்கச்சார்பாக இந்த விடயத்திலே செயற்படாது நீதியை நிலைநாட்ட வேண்டும்" எனவும் அமைச்சர் அறிவுறுத்தல் வழங்கினார். "முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர், பொலிஸார், பிரதேச செயலகம், பிரதேச சபை ஆகியன இணைந்து தற்போது வரை நீராவியடிப் பிள்ளையார் ஆலயப் பகுதியில் நடைபெற்று வருகின்ற வேலைகள் தொடர்பாகவும், தற்போது வரை எவ்வாறான கட்டடங்கள், எவ்வாறான நிர்மாணங்கள் இடம்பெற்றிருக்கின்றன என்பவை தொடர்பாகவும் ஒரு காணொளிப் பதிவு ஒன்றைப் பதிந்து ஆவணமாக வைத்துக் கொள்ள வேண்டும். அத்துடன், அறிக்கை ஒன்றையும் தயார்படுத்தி வைத்துக்கொள்ள வேண்டும்" எனவும் அமைச்சர் பணித்தார்.

தற்போது இந்த ஆலய விவகாரம் தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றால் வழங்கப்பட்டுள்ள தீர்ப்புக்கு எதிராக மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டால், இந்தப் பிள்ளையார் ஆலய விவகாரம் தொடர்பான ஆவணங்கள் ஆராயப்பட்டு அதில் உள்ள உண்மை நிலமைகளின்படி எமது அமைச்சு நீதிமன்றத்தில் தமது நியாயத்தைத் தெரிவிக்கும் எனவும் அவர் தெரிவித்தார். பிள்ளையார் ஆலயத் தரப்பினர் உரிய திணைக்களங்களின் அனுமதிகளோடு பிள்ளையார் ஆலயப் பகுதியில் கட்டுமானங்களை மேற்கொள்ளும்போது எமது அமைச்சும் அதற்கான நிதி உதவிகளை வழங்கும் எனவும் அமைச்சர் கூறினார்.

(எ-22)

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1576 சீட்டிழுப்பு திகதி 10.06.2019
வெற்றி இலக்கங்கள்
31 51 53 61 G
அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட் ரூ.32,277,764/=

சீட்டிழுப்பு வாரம்: 453 சீட்டிழுப்பு திகதி: 2019.06.09
வர்ணம்: பச்சை ஞாயிற்றுக்கிழமை
V 09 16 56 78
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 127,150,518/-

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 3194 திகதி: 2019.06.10
திங்கட்கிழமை
நீலம்
18 49 65 73 M 21
46,385,580/-

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 635
வர்ணம்: சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2019.06.10
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 58,849,395/-
வெற்றி இலக்கங்கள்
42 44 61 67 D

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 985
சீட்டிழுப்பு திகதி 2019.06.09 ஞாயிற்றுக்கிழமை
D 07 48 53 57
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
மஞ்சள், பச்சை, நீலம், சிவப்பு நிற டிக்கட்டுகள் முறையே திங்கட்கிழமை, வியாழக்கிழமை, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

## மரண அறிவித்தல்

### திருமதி பத்மாவதி நடராஜா (குஞ்சக்கா)



பிறப்பு 28.01.1940 இறப்பு 08.06.2019

பழைய வீதி, கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்மாவதி நடராஜா 08.06.2019 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராசா-சின்னத்தங்கச்சி தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராசா நடராஜாவின் (ஓய்வுபெற்ற தபாலதிபர்) பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான இரத்தினாபரணம், கமலபூபதி மற்றும் பாலசுப்பிரமணியம் (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும்; சுகிர்தராஜ் (இணைப்பாளர், யாழ்.சமூகசெயற்பாட்டு மையம் - JSAC) துஷ்யந்தி (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தாயாரும், அனுஷாந்தி (ஆசிரியை, யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்), கிரிதரன் (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மாமியாரும், சுஹந்தர்யா, ஆத்மீஹா (மாணவிகள், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), நிதிலா (அமெரிக்கா), நிர்ஷாந் (அமெரிக்கா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 13.06.2019 வியாழக்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இருபாலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பழைய வீதி,**
**கோப்பாய் தெற்கு, கோப்பாய்.**

**தகவல்: ந.சுகிர்தராஜ் (மகன்)**

**0763481862**

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**
**திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்**
**வெளிவாரிப் பரீட்சைகள்**

## கலைமாணி (வெளிவாரி)

### முதலாம் வருட இரண்டாம் அரையாண்டு பரீட்சை - 2014

மேற்படி பரீட்சையை 09.07.2019 (செவ்வாய்க்கிழமை) தொடக்கம் 16.07.2019 (செவ்வாய்க்கிழமை) வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தொடர் மதிப்பீட்டு புள்ளியினை அடிப்படையாகக் கொண்ட பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகுதியினை அறிந்து பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பிப்பதற்காக 14.06.2019 (வெள்ளிக்கிழமை), 15.06.2019 (சனிக்கிழமை), 16.06.2019 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய தினங்களில் மாணவர் பதிவேட்டு புத்தகத்துடன் நேரடியாக திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையத்திற்கு சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

மேலதிக விவரங்களுக்கு **021-222-3612** என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்

**ப்திவாளர்**
**யாழ்.பல்கலைக்கழகம்**
**10.06.2019**

## கண்ணீர் அஞ்சலி

வளலாய் அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் இந்தியாவை வசிப்பிடமாகவும் கொண்ட

சற்குணராஜா விமலாதேவி அவர்களின் அன்பு மகன்

### றஜனிகுமார் ( ரஷி)

**(S.R. கிராப்பிக்ஸ் ஸ்ரூடியோ உரிமையாளர்)**



அவர்கள் கடந்த 06.06.2019 வியாழக்கிழமை அகாலமரணமடைந்துள்ளார். இவரின் மரணச்செய்தி அறிந்து ஆழ்ந்த துயரடைகின்றோம். அவரின் இழப்பால் கலங்கி நிற்கும் அவரின் மனைவி, மகள், பெற்றோர், சகோதரர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**சித்தப்பா குடும்பம்**
**(திரு.திருமதி ஞா.பெ.ஜெபரட்ணம் - GS**
**இந்திராணி ஜெபரட்ணம்)**
**ஆக்லேன், உடுவில், சுன்னாகம்.**
**077 749 8483**

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# மோடிவருகைஏற்படுத்தும் அரசியல் சலசலப்புக்கள்

இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி தனது இரண்டாவதுபதவிக்காலத்தின்முதலாவது அயலுறவுப் பயணமாக கொழும்பு வந்து திரும்பியிருக்கிறார். மிகக் குறுகிய நேரம் கொண்டதாக இந்தப் பயணம் வடிவமைக்கப்பட்டிருந்தது. இதற்கிடையில்தலைமைஅமைச்சர், அரசதலைவர், எதிர்க்கட்சித் தலைவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஆகியோருடன்குறுகிய நேரச்சந்திப்புக்களையும்அவர்நடத்தியிருந்தார்.

உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டு வெடிப்புக்கள் மற்றும் படுகொலைகளால்பாதிக்கப்பட்ட இலங்கைக்குத்தனதுதார்மீக ஆதரவைத் தெரிவிக்கும் விதத்திலேயே இந்தப் பயணம் திட்டமிடப்பட்டது என்று இந்தியத் தரப்புக்கள் தெரிவித்திருந்தன. அதனாலேயே தலைவர்களுடன் விரிவான சந்திப்புக்களுக்கு வாய்ப்பு இருக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. அதை நிரூபிக்கும் வகையில் உயிர்த்த ஞாயிறு தினத்தில் தற்கொலைக் குண்டுதாரி வெடித்துச் சிதறிய கொழும்பு கொச்சிக்கடை அந்தோனியார் தேவாலயத்துக்கும் இந்தியத் தலைமை அமைச்சர் நேரில் சென்று பார்வையிட்டார்.

முஸ்லிம் தீவிரவாதத்தால் அதிகம் பாதிக்கப்படுவதாக கடந்த பல தசாப்தங்களாகவே இந்தியா குமுறி வருகின்றது. பாகிஸ்தானில் இருந்தே இந்தத் தீவிரவாதம் இந்தியாவுக்குள் இறக்குமதியாவதாகவும்அது குற்றஞ்சாட்டி வருகின்றது. அண்மையில் கூட, இந்தியக் கட்டுப்பாட்டுக் காஷ்மீர் பகுதியான புல்வாமாவில் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 40 இந்தியப்படையினர்கொல்லப்பட்டனர். இதனைபாகிஸ்தான் ஆதரவு முஸ்லிம்தீவிரவாத இயக்கமேசெய்தது என்று இந்தியா தொடர்ச்சியாகக்குற்றஞ்சாட்டி வருகின்றது. இந்தத்தாக்குதலுக்குப் பதிலடியாக பாகிஸ்தான் வான் பரப்புக்குள் நுழைந்து வானூர்திக் குண்டுத் தாக்குதல்களையும் நடத்தியது இந்தியா. இதில் இந்திய விமானம் ஒன்றை பாகிஸ்தான் சுட்டுவீழ்த்தி அதிலிருந்த விமானியை உயிருடன் பிடித்துப் பின்னர் விடுவித்தது என்கிற கதையும் நடந்தது ஒருபுறம்.

இவ்வாறு முஸ்லீம் தீவிரவாதத்தால் இந்தியா பாதிக்கப்படுவதாகக் கூறும் இந்தியாவின் தற்போதைய ஆட்சியாளர்கள் இந்துத்துவக் கட்டும்போக்கு வலதுசாரிகள் என்று கணிக்கப்படுபவர்கள். இலங்கையில் நடந்த தற்கொலைத் தாக்குதல்களில் தொடர்புபட்டுள்ளவர்கள்அனைவருமே முஸ்லிம்கள்என்கிற நிலையிலும் அவர்களின் பின்னணியில் இஸ்லாமிய அரசு என அழைக்கப்படும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு இருக்கின்றதாகத் தகவல்கள் வெளியான நிலையிலும் இந்தியாவின் இந்துக் கடும்போக்கு ஆட்சியாளர்கள்அல்லது முஸ்லிம்எதிர்ப்புணர்வு அதிகமுள்ள ஆட்சியாளர்கள்இலங்கையில்நடந்த முஸ்லிம்கள் தொடர்புபட்ட தாக்குதல்களைத் தொடர்ந்து தமது தார்மீக ஆதரவை பௌத்த, சிங்கள தேசியத்தால் மட்டுமே வழிநடத்தப்படும் ஆட்சியாளர்களுக்குத் தெரியப்படுத்தியிருக்கிறார்கள்.

இதுநிகழ்ந்தகையோடுநடந்திருக்கக்கூடிய மற்றொருஅரசியல் நகர்வு மோடியின் பயணத்தையும் இந்தப் பிராந்தியத்தின் பூகோள அரசியல் மற்றும் மதச் சிக்கலையும் கூர்ந்து கவனிக்க வேண்டிய அவசியத்தைத் தமிழர்களுக்கு ஏற்படுத்துகின்றது. நடந்திருக்கக்கூடிய அந்த அரசியல் நகர்வு, தமிழகம் சென்ற முஸ்லிம்காங்கிரஸ்தலைவர் ரவூப் ஹக்கீம்திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.க.ஸ்ராலினைச் சந்தித்துப் பேசியிருக்கிறார் என்பதுதான்.

இந்தியாவில்நடந்துமுடிந்தநாடாளுமன்றத் தேர்தலில் ஆளும் பாரதீய ஜனதாக் கட்சி படுதோல்வியைத் தழுவிய மாநிலங்களில் ஒன்று தமிழ்நாடு. தி.மு.க.தான் அங்கு பெரு வெற்றி பெற்றது. அதாவது இந்துத்துவாவுக்கு எதிரான சக்தியாகத் தி.மு.கவின் வெற்றி இந்தியா முழுவதும் பார்க்கப்படும் நிலையில் ஹக்கீம் அந்தத்தரப்போடு சந்திக்கிறார். அதேநேரம் கொழும்பு வந்த மோடியின் சந்திப்பு நிகழ்ச்சி நிரலில் முஸ்லிம் தலைவர்களைச் சந்திப்பதற்கான நேர ஒதுக்கீடு இல்லை.

அரசியலில் இவை அனைத்தையும் தற்செயல்கள் என்று புறமொதுக்கிவிட முடியாது. காஷ்மீர் பிரச்சினை ,நில உரிமை சம்பந்தப்பட்ட பிரச்சினைஎன்கிறநிலையில் இருந்து முஸ்லிம் இந்துப் பிரச்சினையாக இந்தியாவுக்குள் பரிணாம வளர்ச்சி பெற்றுவரும்நிலையில் மோடியின் வருகையும் அவரது ஆட்சி கொழும்புக்குநீட்டும்தார்மீக ஆதரவுக்கரமும் இந்த மோதலின் நீட்சியாக இலங்கையையும் மாற்றும் ஆபத்தைக் கொண்டிருக்குமா என்பது குறித்து தமிழர்கள் அவதானமாக இருப்பது அவசியம்.

# அரசதலைவர் வசம் நாட்டின் தலைவிதி!

> உயிர்த்தஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற குண்டுவெடிப்புக்கள் தொடர்பாக நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு முன்னால் அளிக்கப்பட்ட சாட்சியங்களின் அடிப்படையில் விசாரணைகள் இடம்பெறுமானால் அரச தலைவரும் பதிலளிக்க நேரிடும் என்பதை மறுத்துரைக்க முடியாது. நாடு இன்றுள்ள சூழ்நிலையில் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டிய முழுப் பொறுப்பும் அரச தலைவர் வசமே உள்ளது.

இந்துமதி



இந்தியத் தலைநகரான புதுடில்லியில் வைத்து இலங்கையின் அரச தலைவர் தெரிவித்த சில கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளத் தக்கனவாகக் காணப்படவில்லை. குறிப்பாக அரசமைப்பில் மேற்கொள்ளப்பட்ட 13ஆவது திருத்தம் சரிவர நடைமுறைப்படுத்தப்பட்டாலே போதுமானது. மேலதிக அதிகாரப் பகிர்வு எதுவுமே வடக்குக்குத் தேவையில்லையென அவர் அங்கு வைத்துத் தெரிவித்துள்ளமை இங்கு வாழ்கின்ற தமிழ் மக்களுக்கு நிச்சயமாக அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கும்.

### 13ஆம் திருத்தம் பயனேதுமற்றது

1987ஆம் ஆண்டு இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட 13ஆவது அரசமைப்புத் திருத்தத்தால் தமிழர்களுக்கு எவ்வித பயனும் கிடைக்கவில்லை. இந்தத் திருத்தத்தின் பிரகாரம் உருவிக்கப்பட்ட மாகாண சபைகளால் எதையுமே சாதிக்க முடியவில்லை. முக்கியமான அதிகாரங்களைக் கொண்டிராத காரணத்தினால் மாகாண சபைகள் வெறும் பெயருக்கு மட்டுமே இயங்கி வருவதையும்காண முடிகின்றது. அதுமட்டுமல்லாது இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் இணைக்கப்பட்ட வடக்குக் கிழக்கு மாகாணங்கள் ஒரு நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் முன்னர் போன்று பிரிக்கப்பட்ட நிலையிலேயே காணப்படுகின்றன.

புதிய அரசமைப்பின் உருவாக்கம் தொடர்பாகத் தமிழர்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் இந்த வேளையில் 13க்கும் அப்பால் எதுவுமே கிடைக்காதென அரச தலைவர் கூறியுள்ளமை இந்த அரசின் மீது வெறுப்பையே ஏற்படுத்தியுள்ளது. அது மட்டுமல்லாது அரச தலைவரின் அண்மைக் கால நடவடிக்கைகள் தொடர்பாக எவருமே திருப்தி அடைந்துவிட முடியாது.

### அரச தலைவர் குற்றவாளியா?

உயிர்த்தஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பாக விசாரிப்பதற்கென அமைக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் முன்பாகச் சாட்சியமளித்தவர்கள் அரச தலைவர் மீது அடுக்களுக்காக குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியுள்ளமை நாட்டில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்திவிட்டது. இதனால் சினம் கொண்ட அரச தலைவர் தெரிவுக்குழுவின் விசாரணைகளுக்கு முட்டுக்கட்டை இடுகின்ற செயற்பாடுகளில் ஈடுபட்டார். தெரிவுக்குழு விசாரணைகளை நிறுத்தும் வரைவில் அமைச்சரவைக் கூட்டம் பெறாதென அவர் தெரிவித்ததாகவும் அறிய முடிகின்றது. ஆனால் எதுவுமே இடம்பெற்றதாகத் தெரியவில்லை.

அரச தலைவரைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் விரைவில் இடம்பெறவுள்ள நிலையில் அரச தலைவரின் செயற்பாடுகள் நாட்டைக் குழப்பத்தில் ஆழ்த்தும் விதமாகவே அமைந்துள்ளன. இதை மகிந்த தரப்பினர் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கின்றனர். அவர்களுக்கு நாட்டைப் பற்றியோ அல்லது மக்களைப் பற்றியோ அக்கறையில்லை. அடுத்து ஆட்சியை அமைக்க வேண்டும் என்பதுதான் அவர்களது குறிக்கோளாகவுள்ளது. இதையெல்லாம் தெரிந்திருந்தும் அரச தலைவர் மகிந்த தரப்புடன் கூட்டணி அமைப்பதற்கான முயற்சிகளில் இரகசியமாக ஈடுபடுகின்றார்.


### தேரர்களுக்கு பாரபட்சமா?

மதத் தலைவர்களின் ஒற்றுமையீனமே நாட்டின் ஒற்றுமைக்கு குந்தகமாக உள்ளதாகத் தெரிவித்திருக்கும் அரச தலைவர் பௌத்த தேரர்களின் செயல்களையெல்லாம் அனுமதித்துக் கொண்டிருப்பது எந்த வகையில் நியாயமானது என்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. இந்த நாட்டின் ஆட்சியைத் தமது கட்டுப்பாட்டினுள் பௌத்த தேரர்கள் கொண்டிருப்பது காலம் காலமாகவே நிரூபிக்கப்பட்டு வருகின்றது. அசாத் சாலி, ஹிஸ்புல்லா, றிசாத் பதியுதீன் ஆகியோருக்கு எதிராக பௌத்த பிக்கு ஒருவர் உணவு ஒறுப்புப் போராட்டத்தை நடத்தியபோது சிங்கள, பௌத்த தேசிய வாதத்தைக் கொண்டிருந்தவர்கள் கிளர்ந்தெழுந்தனர். இவர்களை அடக்குவதற்கு அரசால் முடியவில்லை. இறுதியில் அவர்களுக்கு அடிபணியவேண்டியதாயிற்று. முஸ்லிம் அமைச்சர்கள் கூண்டோடு பதவி விலகித் தமது ஒற்றுமையை வெளிப்படுத்தினார். ஆனால் இது நீடிக்குமா? என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

ரணில் விக்கிரமசிங்க மீதான வெறுப்பை அரச தலைவர் பகிரங்கமாகவே காட்ட ஆரம்பித்து விட்டார். ஐக்கிய தேசியக் கட்சியைப் பிளவுபடுத்துகின்ற வேலைகளிலும் அவர் ஈடுபட்டுள்ளதைக் காண முடிகின்றது. சஜித் பிரேமதாசவுக்கான அவரது ஆதரவு இதையே நோக்கமாகக் கொண்டது என்பதை எவருமே புரிந்து கொள்வார்கள். நாட்டில் தலைக்கு மேல் பிரச்சினைகள் குவிந்து கிடக்கும் போது சில்லறை அரசியல் விளையாட்டுக்களில் அவர் ஈடுபடுவதை மக்கள் ஒருபோதுமே ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

உயிர்த்தஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற குண்டுவெடிப்புக்கள் தொடர்பாக நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு முன்னால் அளிக்கப்பட்ட சாட்சியங்களின் அடிப்படையில் விசாரணைகள் இடம்பெறுமானால் அரச தலைவரும் பதிலளிக்க நேரிடும் என்பதை மறுத்துரைக்க முடியாது. நாடு இன்றுள்ள சூழ்நிலையில் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டிய முழுப் பொறுப்பும் அரச தலைவர் வசமே உள்ளது. ஒரு நாட்டின் தலைவர் என்ற வகையில் தமது பொறுப்புக்களைத் தட்டிக் கழிப்பதற்கு அவரால் ஒருபோதுமே முடியாது. இதை அவர் முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM



## ஊடகக் கற்கைத் துறையின் ஆரம்ப நிகழ்வுகள் நேற்று

யாழ்ப்பாணம், ஜூன் 11

யாழ்ப்பாண பல்கலைக் கழக ஊடகக் கற்கை நெறி அலகு தனியான துறையாக மாற்றப்பட்ட நிலையில் அதன் ஆரம்ப நிகழ்வு நேற்று நடைபெற்றது. நிகழ்வில் பெயர்ப்பலகை திரைநீக்கம் செய்யப்பட்டது. பல்கலைக்கழக தகுதி வாய்ந்த அதிகாரி பேராசிரியர் க. கந்தசாமியால் பெயர்ப்பலகைதிரைநீக்கம் செய்யப்பட்டது. இந்த நிகழ்வில் விரிவுரையாளர்கள் மாணவர்கள் ஊடகவியலாளர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாண பல்கலைக் கழக ஊடக கற்கை நெறி அலகு அண்மையில் ஊடகக் கற்கைத் துறையாக தரமுயர்த்தப்பட்டது. 2008 ஆம் ஆண்டு யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் ஒரு அலகாக ஊடகக் கற்கை நெறி ஆரம்பிக்கப்பட்டது. ஊடக கற்கையை மாணவர்கள் தெரிவு செய்வதில் ஆர்வம் காட்டினர். துறை சார்ந்த விரிவுரையாளர்கள் அதை வளர்ச்சிப் பாதைக்கு கொண்டு செல்லப் பல்வேறு முயற்சிகளை எடுத்திருந்தனர்.

தற்போது ஊடக கற்கை நெறி அலகு பல்கலைக்கழக நியதிகளுக்கு அமைவாக ஊடகத் துறையாக மாற்றம் பெற்றுள்ளது. அதற்கான அரசிதழ் அறிவித்தல் கடந்த மாதம் 27 ஆம் திகதி வெளியிடப்பட்டது. அதன் ஆரம்ப நிகழ்வுகள் நேற்று நடைபெற்றன.

(எ-7)

## தேர்தல்கள் தொடர்பாக ஆணைக்குழு ஆராய்வு

*கொழும்பு, ஜூன் 11*

*எதிர்காலத்தில் இடம்பெறவுள்ள தேர்தல்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக அரசியல் கட்சிகளின் செயலர்கள் அழைக்கப்பட்டுள்ளனர் என்றும், இந்தக் கலந்துரையாடல் இன்று நடைபெறவுள்ளது என்றும் தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.*

இந்தக் கலந்துரையாடலில் நடைபெறவுள்ள அரச தலைவர் தேர்தல் தொடர்பாவும், பிற்போடப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தல் என்பவற்றை நடத்துவது தொடர்பில் காணப்படும் சட்ட சிக்கல்கள் தொடர்பாகவும் இதில் கலந்துரையாடப்படவுள்ளது என்றும், ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்களும் இந்த கலந்துரையாடலில் பங்கேற்கவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த கலந்துரையாடலில் வாக்காளர் பெயர்ப்பட்டியல் மீள்திருத்தம் தொடர்பிலும் கட்சி செயலர்களுடன் கலந்துரையாடப்படவுள்ளது. கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் தேர்தல் நடத்தப்படாத எல்பிடிய பிரதேச சபைக்கான தேர்தல் தொடர்பிலும் இந்தக் கலந்துரையாடலில் அவதானம் செலுத்தப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை, 18 வயதை பூர்த்திசெய்த இலங்கையர்களுக்கு வாக்காளர்களாக பதிவு செய்து கொள்ளுமாறு அறிவுறுத்தி குறுந்தகவல்களை அனுப்புவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது. 15 வயதை பூர்த்தி செய்த இளைஞர்களின் பட்டியல் இதற்கென தயாரிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் குறித்த குறுந்தகவல் பரிமாற்றம் இடம்பெறவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

(எ)

## சடலம் மீட்பு

கொழும்பு, ஜூன் 11

முல்லைத்தீவு மாங்குளம், முறிகண்டி பிள்ளையார் ஆலய வளாகத்திலுள்ள கடையொன்றின் உரிமையாளர் சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மாங்குளம் பொலிஸாருக்கு அந்தப் பிரதேச மக்கள் வழங்கிய தகவலுக்கமையவே நேற்று முன்தினம் இரவு 55 வயது மதிக்கத்தக்க ஆணொருவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

உயிரிழப்புக்கான காரணம் கண்டறியப்படாத நிலையில், மாங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணையை ஆரம்பித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(எ-222)

## அபிவிருத்தித் திட்டங்கள் அனைவருக்குமானவை

### *அமைச்சர் மங்கள தெரிவிப்பு*

கொழும்பு, ஜூன் 11

அபிவிருத்தி திட்டங்கள் என்பது ஒரே ஒரு இனம் அல்லது மதத்துக்கு உரித்தானதல்ல என நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டை ஒன்றிணைக்க அனைத்து மதங்களும் இனங்களும் இணைய வேண்டும் . பருத்தித்துறையில் இருந்து மாத்தறை வரை பல்வேறு மத நடைமுறைகளை கடைபிடிக்கும் அனைவரும் ஒரு புதிய நாட்டை அமைப்பதற்கு ஐக்கியப்பட வேண்டும்.

மிகப்பெரிய கிராமிய அபிவிருத்தித் திட்டம் தற்போது நாட்டில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது - என்றார்.

(எ)

## பால்நிலை சமத்துவத்தை கற்பிக்க தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்

### *த. தே. ம. முன்னணியின் மகளிர் அணி கோரிக்கை*

யாழ்ப்பாணம், ஜூன் 11

தமிழ்த் தேசத்தில் உள்ள அனைத்துப் பிரதேச சபைகளின் ஊடாகவும், பால் நிலை சமத்துவம் என்பதை பாடசாலைகள் அனைத்திலும், கற்கை நெறியாகக் கொண்டு வரப்படவேண்டும் என்கின்ற ஒரு தீர்மானத்தைக் கொண்டுவர முனைகின்றோம். அதைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்று கட்சி சார்பாகப் பார்க்காமல், அனைவரும் அதற்கு ஆதரவு தரவேண்டும்.

இவ்வாறு தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் மகளிர் அணி நேற்று கோரிக்கை ஒன்றை முன்வைத்தது.

கொக்குவில் பகுதியில் உள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நேற்று ஊடக சந்திப்பு ஒன்று நடத்தப்பட்டது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே மகளிர் அணியின் தலைவி வாசுகி சுதாகரன் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

பால்நிலை சமத்துவத்தை மக்கள் மத்தியில் கொண்டு செல்லத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மகளிர் அமைப்பு முன்வந்துள்ளது. பால் நிலை சமத்துவம் என்பதை எங்கள் தேசத்து பெண்கள் மட்டுமல்ல ஆண்களும் அதை பரிபூரணமாக விளங்கிக் கொள்வதற்கான செயற்பாட்டை இன்றிலிருந்து நாங்கள் வடக்கு, கிழக்கில் செயற்படுத்த முனைகிறோம். பெண்களாகிய நாங்கள் பரம்பரை பரம்பரையாக அந்தக் காலம் தொட்டு வன்முறைக்கு உள்ளாக்கப்படுகிறோம் என்றால் ஆணாதிக்கத்தனம் மட்டுமல்ல பாரம்பரிய எமது சமுதாயக் கட்டுப்பாடுகளும் காரணம். அதுதான் எங்களைப் பெண் அடிமைத்தனத்துக்கு கொண்டுவந்துள்ளது.

ஆண்களை விட பெண்கள் கீழானவர்கள் என்ற பாரம்பரிய மனப்பாங்குதான் பெண்களைப் பாதுகின்றோம் என்ற போர்வையில் பெண் வன்முறைகளை உருவாக்குகிறது. உலகளாவிய ரீதியில் ஐ.நா பாதுகாப்புச் சபை, ஐநா மனித உரிமைகள் சபை எல்லாம் பெண்களுக்கான பாதுகாப்பை சட்ரீதியாக உருவாக்கிக் கூட இன்றுவரை பெண்களுக்கான வன்முறைகள், பாலியல் துர்நடத்தைகள் நடந்து கொண்டே இருக்கிறன. 2014ஆம் ஆண்டே உலகளாவிய ரீதியில் பால் நிலைச் சமத்துவம் தொடர்பான சட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. ஆனால் இன்று வரை அதற்கான செயற்பாடுகள் எமது சமூகத்திலோ, உலகத்திலோ நடக்கவில்லை. எங்களைப் போன்ற நாடுகளிலே மிகமோசமாக இந்தப் பால்நிலைசமத்துவம் என்ற கருப்பொருளே பாவிக்கப்படாமல் இருக்கிறது.

பால்நிலை சமத்துவம் என்பது பெண்களுக்கான உரிமையைப் பெற்றுக் கொள்வதற்கும், வன்முறைகளில் இருந்து பெண்களைப் பாதுகாப்பதற்கும் உரிய வழி என்று நாங்கள் நம்புகிறோம். அந்த வகையில் எங்களுடைய சமுதாயத்தில் இந்த பால்நிலை சமத்துவம் என்கின்ற கல்வியைக் கட்டாயமாக நாங்கள் கொண்டுவர வேண்டும். முற்போக்கான சிந்தனையாகிய பால்நிலை சமத்துவத்தை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மகளிர் அணியாகிய நாங்கள் எங்களுடைய தமிழ்த் தேசத்தில் வளர்க்க, கால்பதிக்க முனைகின்றோம். .என்றார்.

(எ-21.26)

## யானை வேலியைச் சீர்செய்து மின் வழங்கி பாதுகாருங்கள்

### *கிழக்கின் உன்னிச்சை மக்கள் கோரிக்கை*



மட்டக்களப்பு, ஜூன் 11

யானை வேலியைச் சீர் செய்து மின்சாரம் வழங்கி காட்டு யானைகளிடமிருந்து தமது உயிரைப் பாதுகாக்க உதவுமாறு உன்னிச்சை கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்றுமுன்தினமிரவு சில காட்டுயானைகள் வந்து தமது பயிர்களையும் பாதுகாப்பு வேலியையும் சேதப்படுத்திச் சென்றுள்ளன என்று உன்னிச்சை மாவளையாறு கிராம விவசாயிகள் தெரிவித்தனர்.

உன்னிச்சைபிள்ளையாரடி இராசதுரைக் கிராமம், மாவளையாறு போன்ற கிராமங்களைச் சேர்ந்த மக்கள் காட்டு யானைகளின் அட்டகாசத்தால் பெரும் பாதிப்புக்களை நாளாந்தம் எதிர்நோக்கி வருகின்றனர். இந்தப் பகுதியை அண்மித்த காட்டோரத்தில் அரசு யானை தடுப்பு வேலிகள் அமைத்திருந்தாலும் அதற்கு மின்சாரம் வழங்கப்படுவதில்லை. அதனால் யானைகள் தமது விவசாயப் பயிர் நிலங்களையும், வீடுகளையும் சேதப்படுத்தி அழித்து வருகின்றன என்று அங்குள்ளவர்கள் தெரிவிக்கின்றனர்.

தாம் மேற்கொண்ட பயிர்களை யானை சேதப்படுத்துவதால் விளைச்சலுக்கு முன்னரே அறுவடை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் தமக்குப் போதிய இலாபம் கிடைக்கவில்லை எனவும் அந்த விவசாயிகள் தெரிவிக்கின்றனர். மாலை 7மணியானால் எப்போது யானை வரும் என்ற அச்சத்தில், கல்விகற்கும் தமது பிள்ளைகள் பயந்த நிலையிலுள்ளனர்.

சம்மந்தப்பட்ட அமைச்சர்கள் அரச அதிகாரிகள் கவனம் செலுத்தி யானை வேலியினை சீர்செய்து அதற்கு மின்சாரம் வழங்கி இந்த காட்டுயானைகளிடமிருந்து தமது பயிரையும் உயிரையும் பாதுகாக்க உதவுமாறு அந்தப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

(த)

## சித்திவிநாயகர் குடமுழுக்கு கிரியைகள் நாளை

யாழ்ப்பாணம், ஜூன் 11

பருத்தித்துறை சித்தா யாத்திரை சித்திவிநாயகர் (சின்னப்பிள்ளையார்) குடமுழுக்கு கிரியைகள் நாளை புதன்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகின்றது.

பக்தர்கள் எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு 13 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணிமுதல் மாலை 5 மணிவரை இடம்பெறும்.

நீர்வேலி அரசடிப்பிள்ளையார் ஆலய தலைமைக் குரு கிரியா சிரோன்மணி சிவசிறி சாம்பசிவ சோமதேவ குருக்கள் ஆலய குருக்கள் சிவஸ்ரீ பா.பாலசதீஸ்வரக்குருக்களின் அனுசரணையுடன் பிரதிஷ்டா முதன்மைக் குருவாக குடமுழுக்கை நடத்தி வைப்பர்.

புனராவர்த்தன அஷ்டபந்தன பஞ்ச குண்டபக்ச பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிமுதல் 8.05 மணிவரை நடைபெறவுள்ளது.

(த)

### யாழ்ப்பாண மாவட்டத்தில் நிரந்தர வீடுகளின்றியிருக்கும்

# 14 ஆயிரம் பேருக்குக் காணிகளை கொடையாக வழங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 11

யாழ்ப்பாண மாவட்டத்தில் காணிகள் அற்ற நிலையில் 14 ஆயிரம் பேர் இருக்கின்றனர். இவர்களுக்கான காணிகளைப் பெற்றுக்கொடுக்க நாங்களும் ஏதும் செய்யமுடியாத நிலையில் இருக்கின்றோம். எனவே காணியற்றவர்களுக்கு யாரேனும் காணிகளைப் பெற்றுக் கொடுக்க முனைந்தால் அதனை நாங்கள் வரவேற்போம்.

இவ்வாறு யாழ்ப்பாண மாவட்டச்செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

உலகத் தமிழ் பண்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் தெரிவு செய்யப்பட்ட 57 மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள்வழங்கும்நிகழ்வு தெல்லிப்பழை பொதுநூலகக் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

நிகழ்வில்முதன்மைவிருந்தினராகக்கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

போரால் இடம்பெயர்ந்த மக்கள் இங்கு மீளக் குடியமர்ந்து வருகின்றனர். இன்னும் பலர் மீளக் குடியமரவேண்டி இருக்கின்றனர். ஆகவே இங்கு பல உதவிகள் வழங்கவேண்டிய தேவைகள் இருக்கின்றன. அதற்கமைய எங்களால் முடிந்த உதவிகளை நாங்கள் வழங்கி வருகின்றோம். போரால் பொருளாதார ரீதியிலும், கல்வியிலும் எமது மக்கள் பல்வேறு பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளனர். இந்தத் தாக்கத்திலிருந்து அவர்களை மீட்டெடுக்க வேண்டும்.

இதேவேளை எமது மாவட்டத்தில் பலர் பல பிரச்சினைகளுடன் இருக்கின்றனர். குறிப்பாக வீட்டுத் தேவைகள், கல்விக்கான தேவைகள், வாழ்வாதார தேவைகள் எனப் பல இருக்கின்றன.

அதிலும் மாவட்டத்தில் 14 ஆயிரம் பேர் காணிகளில்லாமல் இருக்கின்றனர். அவர்களுக்கு வீட்டுத் திட்டங்கள் வழங்குவதற்கான சந்தர்ப்பங்கள் இருந்தும் காணி இல்லாததால் அவற்றை வழங்கமுடியாமல் உள்ளது.

காணி இல்லாதவர்களுக்கு எங்களால் எந்த விதமான வசதிகளையும் செய்துகொடுக்க முடியாத துர்ப்பாக்கிய நிலைமையில் நாங்கள் இருக்கிறோம். ஆகவே இங்கு காணி இல்லாதவர்களுக்கு காணிகளை வழங்குவதற்கு யாரும் முன்வந்தால் அதனை நாங்கள் வரவேற்போம்-என்றார். நிகழ்வில் தெல்லிப்பழை பிரதேச செயலர், உலகத் தமிழக பண்பாட்டுமையத்தின் தலைவர் உள்ளிட்ட உறுப்பினர்கள், வலி. வடக்குப்பிரதேச சபை தவிசாளர் உட்படப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (ஐ-ரி1,50)



## கிளாலி - எழுதுமட்டுவாழ் வீதிச் சீரமைப்பு ஆரம்பம்

கிளிநொச்சி, ஜூன் 11

கிளாலி-எழுதுமட்டுவாழ் முதன்மை வீதி 81 மில்லியன் ரூபாவில் சீரமைக்கப்படவுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் நிதி ஒதுக்கீட்டில் வீதி சீரமைக்கப்படவுள்ளது.

சீரமைப்புப் பணிகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினருடன் மீள்குடியேற்ற, வடக்கு அபிவிருத்தி அமைச்சின் செயலர் சிவஞானசோதி, யாழ்ப்பாண மாவட்டச்செயலர் நா.வேதநாயகன், கிளிநொச்சி மாவட்ட மேலதிக செயலர் சத்தியசீலன், பச்சிலைப்பள்ளி, சாவகச்சேரி பிரதேச சபைகளின் தவிசாளர்கள், பச்சிலைப்பள்ளி, சாவகச்சேரி பிரதேச செயலகங்களின் செயலர்கள், மக்கள் பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் தலைவர்கள், பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர். (கு-222)

## தண்ணீர்த் தாங்கிகள் திறப்பு

சாவகச்சேரி, ஜூன் 11

சாவகச்சேரி, கோயிற்குடியிருப்பு பிரிவில் மகிழங்கேணி, உதயசூரியன் கிராமங்கள் மற்றும் பொது விளையாட்டு மைதானம் ஆகியவற்றில் அமைக்கப்பட்ட ஆழ்துளைக் கிணறுகளுடன் இணைந்த தண்ணீர்த் தாங்கிகள் நேற்று திறந்து வைக்கப்பட்டன.

யாழ்ப்பாண மாவட்டப் பாதுகாப்பு படைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்சன ஹெட்டியாராச்சியின் ஏற்பாட்டில் 51ஆவது படையணியின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் றொசான் செனிவிரத்ன, சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் ஆகியோரால் கூட்டாகத் திறந்து வைக்கப்பட்டன. (ஐ-9)



## மண்டைதீவு படுகொலை 33ஆவது நினைவுதினம்

யாழ்ப்பாணம், ஜூன் 11

மண்டைதீவில் படுகொலை செய்யப்பட்ட மீனவர்களின் 33ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு குருநகரில் அமைந்துள்ள நினைவுத்தூபியில் நேற்றுக் காலை இடம்பெற்றது. 1986 ஆண்டு மண்டைதீவு கடற்பரப்பில் கடற்படையினரால் 31 மீனவர்கள் படுகொலைசெய்யப்பட்டனர்.

குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் சங்கத்தின் தலைவர் ஜூலியன் சகாயராஜா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் படுகொலை செய்யப்பட்ட 31 மீனவர்களின் உறவினர்கள் சுடர் ஏற்றிவைத்தனர். தொடர்ந்து முதன்மைச் சுடரை யாழ்ப்பாண மாநகர சபை



முதல்வர் இ.ஆனல்ட் ஏற்றிவைத்தார். நிகழ்வில் யாழ்ப்பாணப் பிரதேச செயலர் சுதர்சன், கிராம அலுவலகர், அருட்தந்தையர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-23,106)



## பொதுக்கூட்டம்

தென்மராட்சி, ஜூன் 11

தென்மராட்சி தெற்கு மறவன்புலவு கமக்கார அமைப்பின் பொதுக்கூட்டம் நாளைமறுதினம் வியாழக்கிழமை நடைபெறும். மறவன்புலவு ஆரம்ப சுகாதார நிலைய மண்டபத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெறுமென அமைப்பின் தலைவர் சி.திருஞானசம்பந்தர் அறிவித்துள்ளார். (ஐ-9)

## விழிப்புணர்வு கருத்தரங்கு

சாவகச்சேரி, ஜூன் 11

பாரம்பரிய உணவு முறைகள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியக மண்டபத்தில் நாளை மறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.

தென்மராட்சி பிரதேச செயலக கலாசாரப் பிரிவினரும் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தினரும் இணைந்து நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளனர்.

"எமது ஆரோக்கியத்துக்கான பல உணவு முறைகள் எம்மிடமிருந்து விலகிச் சென்றுள்ளதால் அவற்றை மீண்டும் பயன்படுத்தி ஆரோக்கியத்துடன் வாழ்வோம்" என்னும் தலைப்பில் கருத்தரங்கு இடம்பெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

## விளையாட்டு உபகரணங்கள் வழங்கிவைப்பு

அளவெட்டி, ஜூன் 11

யாழ்ப்பாணம், தெல்லிப்பழை கிழானை கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு விளையாட்டு உபகரணங்கள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன.

வலி.வடக்குப் பிரதேச சபை உறுப்பினர் எஸ்.விஜயராஜ் தனது நிதியில் இருந்து விளையாட்டு உபகரணங்களை வழங்கியுள்ளார்.

நிகழ்வில் வலி. வடக்குப் பிரதேசசபைத் தவிசாளர் சோ.சுகிர்தன் கலந்து கொண்டார். (ஐ-63)

## காங்கேசன் சிறுவர் பூங்கா இராணுவத்தால் விடுவிப்பு


யாழ்ப்பாணம், ஜூன் 11

காங்கேசன்துறை மத்தி கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள சிறுவர் பூங்கா இராணுவத்தினரால் உத்தியோக பூர்வமாக நேற்று விடுவிக்கப்பட்டது.

காங்கேசன்துறை வெளிச்ச வீட்டுக்கு அருகில் அமைந்துள்ள குறித்த சிறுவர் பூங்கா கடந்த காலங்களில் இராணுவத்தின் கட்டுபாட்டுக்குள் இருந்து வந்தது. இராணுவத்தினரால் காணிகள் படிப் படியாக விடுவிக்கப்பட்டு வரும் நிலையில் சுமார் 12 அரைப் பரப்பில் அமைந்துள்ள குறித்த சிறுவர் பூங்காவும் விடுவிக்கப்பட்டுள்ளது.

பூங்கா விடுப்பு தொடர்பான சான்றிதழைப் பாதுகாப்புத் தரப்பின் அதிகாரி தெல்லிப்பழை பிரதேச செயலரிடம் உத்தியோகபூர்வமாகக் கையளித்தார். குறித்த பூங்கா கிராம எழுச்சித் திட்டத்தில் உள்ள வாங்கப்பட்டு ரூ. 3 மில்லியனில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)





சுதுமலை தெற்கு அம்பாள் சனசமூக நிலையம், விளையாட்டுக் கழகம் ஆகியவற்றின் 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வட்டுக்கோட்டை சவாரித் திடலில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாட்டு வண்டிச் சவாரி இடம்பெற்றது. (ம-23)

# வீட்டுத் திட்டத்தில் உள்ளீர்க்குமாறு வவுனியாவில் மக்கள் போராட்டம்

வவுனியா, ஜூன் 11

வீட்டுத்திட்டத்தில்தங்களைஉள்ளீர்க்குமாறுகோரி வவுனியா, கணேசபுரம், சமயபுரம் கிராமங்களின் 20க்கும் மேற்பட்டகுடும்பங்களைச்சேர்ந்தவர்கள் வவுனியா மாவட்ட தேசிய வீடமைப்பு அதிகார சபையின் அலுவலகத்துக்கு முன்பாக நேற்றுக் காலை போராட்டத்தில் ஈடுபட்டனர்.



நீண்டகாலமாக வீட்டுத்திட்டத்துக்குள் தாம் உள்வாங்கப்படவில்லை. பிரதேச செயலர் பரிந்துரை வழங்கினாலும் மாவட்ட வீடமைப்பு அதிகார சபையின் முகாமையாளர் நிராகரிக்கிறார். வீட்டுத் திட்டத்துக்குள் உள்வாங்குவதாக 2 வருடங்களாகத் தெரிவித்து வருகின்றனரேயன்றி இதுவரை தாம் உள்ளீர்க்கப்படவில்லை.



எமது கிராமத்தில் சிலருக்கு வீட்டுத்திட்டத்துக்கான அடிக்கல் நேற்று (நேற்றுமுன்தினம்) நடுகை செய்யப்பட்டது. தங்களை வீட்டுத்திட்டத்துக்குள்எதற்காகஉள்வாங்கவில்லை?என்றுகேள்வியெழுப்பி, தற்போது தாம் குடியிருக்கும் வீட்டில் ஒளிப்படங்களைத்தாங்கியவாறுபோராட்டத்தில் ஈடுபட்டனர்.

சற்று நேரத்தில் அங்கு சென்ற வன்னித்தேர்தல்மாவட்டநாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான்மக்களுடன்பேசினார். தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட முகாமையாளருடன் அலைபேசியில் நிலமையைக் கேட்டறிந்து, கட்சி பேதம் இன்றி பாதிக்கப்பட்ட மக்களை வீட்டுத்திட்டத்துக்குள் உள்ளீர்க்குமாறு கோரிக்கை விடுத்தார். மாவட்டச் செயலருடனும் அலைபேசியில் பேசினார். மாவட்ட திட்டப் பணிப்பாளர் உள்ளிட்ட அலுவலர்கள் போராட்ட இடத்துக்குச் சென்று மக்களுடன் கலந்துரையாடினர். வீட்டுத் திட்டத்தில் அவர்களை உள்வாங்க நடவடிக்கை எடுப்பதாகப் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களிடம் தெரிவித்தனர். அதன்பின்னர் போராட்டத்தை நிறைவுசெய்து மக்கள் கலைந்து சென்றனர். (த)

## தவறுகளைத் திருத்தியமைக்க பொதுநூலக நினைவுக் கல்லை மாநகர சபையினர் அகற்றினர்

யாழ்ப்பாணம், ஜூன் 11

யாழ்ப்பாணப்பொதுநூலகத்தில் தகவல்கள்பொறிக்கப்பட்டிருந்த நினைவுக் கல் நேற்று அகற்றப்பட்டது. யாழ்ப்பாணப் பொது நூலகம் திறக்கும் கால கட்டத்தில் அதற்குரிய நினைவுக் கல் சுவரில் பொறிக்கப்பட்டது. அதில் பொறிக்கப்பட்ட வரலாற்றுத் தகவல்கள் தவறாகவுள்ளன என்று யாழ்ப்பாண மாநகர சபை அமர்வில் கலந்துரையாடல் ஒன்றில் தெரிவிக்கப்பட்டது. அதன் உண்மைத்தன்மையும் சபைக்குச்சுட்டிக் காட்டப்பட்டது.

ஆகவே பிழையான வரலாற்றைப் பிரதிபலிக்கும் அந்தப் பெயர் கல்லை அகற்றி நூலகம் திறப்பு மற்றும்அதற்குக்காரணமானவர்கள், அதற்கு உழைத்தவர்கள் யார்? என்ற உண்மையான விவரங்கள் அதில் பொறிக்கப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. அதற்கு அமைவாக நேற்று மாநகர சபையினர் நினைவு கல்லை அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். (த-7)



## கருத்தமர்வு

தென்மராட்சி, ஜூன் 11

கிராம சக்தி திட்டத்தின் கீழ் கொடிகாமம் வடக்கு கிராம அலுவலர் பிரிவில் மேற்கொள்ளப்படவேண்டிய கிராம அபிவிருத்தித் திட்டம் தயாரித்தல் தொடர்பான கருத்தமர்வு நாளைமறுதினம் வியாழக்கிழமை முற்பகல்9மணிக்குப்பிரிவுபொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கருத்தமர்வில் பிரதேச செயலக அதிகாரிகள்கலந்துகொள்ளவிருப்பதால்கிராமத்தில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான ஆலோசனைகளை வழங்க பிரிவுமக்களைக் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

## இராஜகோபுரத்துக்கான அடிக்கல்நடுகைநிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 11

நல்லூர் வடக்கு சிறி சந்திரசேகரப்பிள்ளையார் ஆலய பஞ்சதள இராஜகோபுரத்துக்கான அடிக்கல் நடுகை செய்யும் நிகழ்வு நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளது. முற்பகல் 10.54 மணி தொடக்கம் 11.38 மணிவரையுள்ளசுபவேளையில்கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், ஸ்நப அபிஷேகம், பஞ்சமுக அர்ச்சனை போன்ற சிறப்புவழிபாடுகளுடன்இராஜகோபுரத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# அராலி நன்னீர் கிணற்றில் ஒயில் ஊற்றிய விசமிகள்

### நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 11

யாழ்ப்பாணம் அராலித் துறைப் பகுதியில் உள்ள குடிதண்ணீர்க் கிணற்றில் ஒயில் ஊற்றப்பட்டுள்ளதால் அந்தக் கிணற்றை நம்பியுள்ள சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

அராலிதுறை, ஜே/162கிராமஅலுவலர் பிரிவில் உள்ள பொதுக் கிணறு ஒன்றிலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது. தனியார் ஒருவருக்குச் சொந்தமான அந்தக்கிணறுஅரசநிதியில்சீரமைப்புச் செய்யப்பட்டு அந்தப் பகுதி மக்களின் குடிதண்ணீர்த் தேவையை நிறைவேற்றுவதற்காகஅமைக்கப்பட்டது. அந்தக் கிணற்றிலேயேகடந்தபலகாலமாகமக்கள் தங்களுக்கான குடிதண்ணீரைப் பெற்றுவருகின்றனர். கடற்கரைபிரதேசத்தை அண்டிவாழும் மக்களுக்கு குடிதண்ணீர் கிடைப்பது அரிது. ஆனால் இந்தக்கிணறுசீரமைக்கப்பட்டுமக்கள் அதனைத் தண்ணீர் தேவைக்குப் பயன்படுத்தி வந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு ஒயில் ஊற்றப்பட்டுள்ளது இது மக்கள் மத்தியில் மிகுந்த கவலையை ஏற்படுத்தியுள்ளது.

நேற்றுக்காலைகுடிதண்ணீரைப்பெற்றுக்கொள்ளக் கிணற்றுக்குச் சென்ற மக்கள் தண்ணீரில் ஒயில் ஊற்றப்பட்டதைக்கண்டுவியந்துள்ளனர். தண்ணீர் அள்ள முடியாது ஏமாற்றத்துடன் திரும்பினர். அதன் பின்னர் நீண்ட தூரம் சென்றே தண்ணீரைப் பெற்றுவர வேண்டிய நிலை மக்களுக்கு ஏற்பட்டிருந்தது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த விசமத் தனமான செயலைச் செய்தவர்கள் அடையாளப் படுத்தப்பட வேண்டும், வறட்சிநிலவும்காலம்என்று பாராது கிணற்றுக்கு ஒயில் ஊற்றுவதற்கு யாருக்கு மனம் வரும். உடனடியாகவே கிணறு சுத்தம் செய்யப்பட்டு மீண்டும் மக்கள் பயன்படுத்துவதற்கு உரியவர்கள்ஆவணசெய்யவேண்டும் என்று அந்தப் பகுதியில் உள்ள வேலவன் சன சமூக நிலையத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர். இதுதொடர்பாகவலிகாமம் மேற்குப் பிரதேச சபை, வட்டுக்கோட்டைப் பொலிஸார் மற்றும் அந்தப் பகுதி கிராம, அபிவிருத்திஅலுவலகர்களிடம் முறையிடப்பட்டுள்ளது என்றும் வேலவன் சனசமூகநிலைய நிர்வாகிகள் தெரிவித்தனர். (ஐ-21,7)

## 97 கிலோ மாட்டிறைச்சியை அழிக்க நீதிமன்று உத்தரவு

யாழ்ப்பாணம், ஜூன் 11

அனுமதி பெறப்படாமல் மாட்டிறைச்சி வெட்டியமை மற்றும் அதனை விற்பனைக்கு வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவருக்குப் பிணை வழங்கப்பட்டது. சந்தேகநபரிடம் மீட்கப்பட்ட 97 கிலோ கிராம் இறைச்சியைத் தீயிட்டு அழிக்குமாறு உத்தரவிடப்பட்டது.

யாழ்ப்பாணம், குருநகர் பகுதியில் முச்சக்கர வண்டியில் மாட்டிறைச்சியைக் கொண்டு சென்ற நாவாந்துறையைச் சேர்ந்த ஒருவர் யாழ்ப்பாணம் மாநகர சபை பொதுச் சுகாதாரப் பிரிவால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து 80 ஆயிரம் ரூபா பெறுமதியான 97 கிலோ கிராம் மாட்டிறைச்சிகைப்பற்றப்பட்டது. சுகாதாரப் பிரிவினரின் அனுமதி பெறப்படாமல் மாட்டை வெட்டி அதன் இறைச்சியை விற்பனைக்காக எடுத்துச் சென்ற குற்றச்சாட்டிலேயே அவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபர், யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் காயத்திரி சைலவன் முன்னிலையில் முற்படுத்தப்பட்டார். வழக்கை விசாரித்த மேலதிக நீதிவான், சந்தேகநபரை 50 ஆயிரம் ரூபா ஆள் பிணையில் விடுக்க உத்தரவிட்டார். அத்துடன், முச்சக்கர வண்டியைத் தடுத்துவைக்க உத்தரவிட்ட நீதிவான், சந்தேகநபரிடம் மீட்கப்பட்ட 97 கிலோ கிராம் மாட்டிறைச்சியையும் தீயிட்டு எரித்து அழிக்கப் பொதுச் சுகாதாரப் பிரிவினருக்கு உத்தரவிட்டார். (ஐ-37,115)

# பேருந்துகளில் திரைப்படம், பாடல்கள் ஒளி, ஒலி பரப்புவது சரியா, தவறா?

*ஆய்வு செய்யவேண்டும் என்கின்றனர் பயணிகள்*

யாழ்ப்பாணம், ஜூன் 11

அரச, தனியார் பயணிகள் பேருந்துகளில் திரைப்படங்கள் ஒளிபரப்புவதும் சினிமாப் பாடல்களை ஒலிபரப்புவதும் சரியா, தவறா? என்பதை ஆய்வுக்கு உட்படுத்த வேண்டுமென்று பயணிகள் பலர் கருத்துத் தெரிவித்தனர். பிற மாகாணங்களுக்குச் செல்லும் பேருந்துகளில் திரைப்படங்கள் ஒளிபரப்பப்படுகின்றன. அல்லது திரைப்படப் பாடல்கள் ஒலிபரப்பப்படுகின்றன.

இது பயணிகள் மத்தியில் ஆதரவையும் எதிர்ப்பையும் பிரதி பலிக்கச் செய்துள்ளன என்று பயணிகள் கூறுகின்றனர். தற்போது அலைபேசி இல்லாத நபர் எவரும் இல்லையென்ற நிலையே காணப்படுகின்றது. பேருந்துகளில் பயணிக்கும் பயணிகள் பேருந்தினுள் பாடல்கள் ஒலிபரப்பாகும்போது கிடைக்கும் அலைபேசி அழைப்புகளுக்குப் பதிலளிக்க முடியாமல் திணறுகின்றனர். வெளியிலிருந்து வரும் அலைபேசி அழைப்பில் கதைப்பது கேட்காததால் அடுத்தவருக்கு இடைஞ்சல் விளைவிக்கும் வகையில் சத்தமாக உரையாடுவதையும் காணமுடிகிறது. பேருந்தில் பாடல்கள் ஒலிபரப்பாகும்போது அலைபேசி அழைப்பின் சத்தம் கேட்காததால் பலர் பதிலளிக்க முடியாத நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

விழாக்கள் மற்றும் நிகழ்வுகளில் இரவு நித்திரை விழித்திருந்து காலையில் பேருந்தில் பயணிக்கும்போது நித்திரை கொள்ளலாமென்று வருவோர் பேருந்தில் ஒலிபரப்பாகும் பாடல்களால் நித்திரை கொள்ளமுடியாமல் உள்ளனர் என்று பல தரபபினரும் பல கருத்துக்களைத் தெரிவிக்கின்றனர்.

இதனால் அரச, தனியார் பேருந்துகளில் திரைப்படப் பாடல்கள் ஒலிபரப்புவதும் திரைப்படங்கள் ஒளிபரப்புவதும் சரியா அல்லது பிழையா என்று ஆய்வுக்கு உட்படுத்தவேண்டுமென்று பயணிகள் தெரிவித்தனர்.

தூர இடங்களிலிருந்து வருவோர்களைப் புத் தெரியாமல் இருப்பதற்காக திரைப்படங்களை, திரைப்படப் பாடல்களை ஒளிபரப்புச் செய்யப்படும்போது அவர்கள் களைப்பின்றி அதனைப் பார்வையிடுகின்றனர், கேட்கின்றனர். அவை சிறந்த பொழுதுபோக்காகவும் உள்ளது. பேருந்துகளில் பயணிக்கும் போது பாடல்களைக் கேட்டுக் கொண்டும் பார்த்துக் கொண்டும் செல்வதால் தாம் செல்லும் பயண தூரத்தின் அளவு தெரிவதில்லையென்றும் இதனாலேயே பாடல்கள் ஒலிபரப்பாத பேருந்துகளில் தாம் பயணிப்பதில்லையென்றும் இன்னொரு சாரார் தெரிவிக்கின்றனர். ஆதரவு தெரிவிப்பவர்களில் இளையோரும் அடங்குகின்றனர். (த-9)

---

## திறன் வகுப்பறை இன்று திறப்பு

தென்மராட்சி, ஜூன் 11

தென்மராட்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட திறன் வகுப்பறை இன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

அதிபர் க.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராகத் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ச.சுந்தரசிவம் கலந்து கொண்டு வகுப்பறையைத் திறந்து வைக்கவுள்ளார். (ஜ-9)

---

## க.மு.தர்மராசா நினைவு பகிர்வு

யாழ்ப்பாணம், ஜூன் 11

நண்பர்கள் வட்டம் ஒழுங்கு செய்துள்ள மறைந்த சட்ட ஆலோசகர் க.மு.தர்மராசா நினைவுப் பகிர்வு கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் வரும் சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.

சட்டத்தரணி ந.காண்டீபன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் மூத்த சட்டத்தரணி ஜி.இராஜகுலேந்திரா, அரசகருமமொழிகள் திணைக்களத் தலைவர் பேராசிரியர் சோ.சந்திரசேகரன், அரசதலைவர் சட்டத்தரணி கனகஈஸ்வரன், ஊடகவியலாளர் ஆர்.பாரதி, வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், நாடாளுமன்றமுன்னாள் உறுப்பினர்பொ.கஜேந்திரகுமார் ஆகியோர் நினைவலைகளைப் பகிர்வர். (த)

---

# பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு கோவில்கள் உதவவேண்டும்

*கைதடி முதியோர் இல்ல அத்தியட்சகர் கோரிக்கை*

யாழ்ப்பாணம், ஜூன் 11

தற்போதைய நிலையில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டோருக்கு உதவும் நிறுவனங்களுக்கு அறக்கொடை, உதவிகளை வழங்க கோவில்கள் முன்வர வேண்டும். திருவிழாக் காலங்களில் ஆடம்பரத்தைத் தவிர்த்து உதவிகள் வழங்குவது காலத்தின் தேவையாகவுள்ளது.

இவ்வாறு கைதடி அரச முதியோர் இல்ல அத்தியட்சகர் வ.செல்வம் கோரிக்கை விடுத்தார்.

தென்மராட்சி சுட்டிபுரம் கண்ணகை அம்மன் ஆலய திருவிழா அண்மையில் நடைபெற்றது. கோவில் திருவிழா உபயகாரர்கள் கைதடி முதியோர் இல்லத்துக்கு அறக்கொடையாக ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பிளாஸ்ரிக் கதிரைகளை அன்றையதினம் வழங்கினர். அவற்றை வழங்கும் நிகழ்வு முதியோர் இல்லத்தில் நடைபெற்றது. அதில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இவ்வாறான உதவிகளை ஏனைய கோவில்களின் நிர்வாகத்தினரும் பின்பற்றுவது சிறந்தது. கோவில் திருவிழா உபயகாரர்கள் இப்படியான கருணை உள்ளம் கொண்டு அறக்கொடை உதவிகளை வருடம் தோறும் வழங்கி வருகின்றனர், பாராட்டுக்குரியது.

இந்தச் செயற்பாடுகளை ஏனைய கோவில்களும் முன்னுதாரணமாகச் செயற்பட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு அறக்கொடை உதவிகளை வழங்குவதற்கு முன்வர வேண்டும். ஆடம்பரம் இன்றி அமைதியான முறையில் திருவிழாக்களை நடத்துவதன் மூலம் இந்த அறக்கொடை உதவி வழங்கலைச் சகலரும் பின்பற்றுவதே காலத்தின் சிறந்த தேவை என்று அத்தியட்சகர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, கொழும்புத்துறை மேற்கு விநாயகர் கோவிலில் அண்மையில் தேர்த் திருவிழா நடைபெற்றது.

அதில், போரால் பாதிக்கப்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மூன்று மாணவர்களுக்குக் கற்றல் செயற்பாட்டுக்கான அறக்கொடை நிதி உதவிகளை கோவில் நிர்வாகத்தினர் வழங்கினர். (த-17)

---

## அச்சுவேலி மீனாட்சிக்கு குடமுழுக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 11

அச்சுவேலி தெற்கு மீனாட்சி அம்மன் ஆலயக் குடமுழுக்கு நாளை புதன்கிழமை முற்பகல் 10.54 மணி தொடக்கம் 11.48 மணிக்கு இடைப்பட்ட சுப முகூர்த்த வேளையில் நடைபெறவுள்ளது.

எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை இடம்பெறவுள்ளது. குடமுழுக்கைத் தொடர்ந்து பன்னிரு நாள்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஜ)

---

## நாகர்கோவில் பிள்ளையாருக்கு குடமுழுக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 11

நாகர்கோவில் சுடலைப்பிட்டி பிள்ளையார் கோவில் குடமுழுக்கு நாளைமறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 10.22 மணிதொடக்கம் 12.22 மணிவரையுள்ள நேரத்தில் நடைபெறும்.

நாளை புதன்கிழமை மாலை 3.52 மணிமுதல் 4.52 மணிக்குள் குருஹோரையில் கர்மாராம்பம், கணபதி பூசை, பிரதிஷ்டா சிங்கல்பம், திரவியபாகம், கணபதி ஹோமம், நவக்கிரக மகம் ஆகியன இடம்பெறும்.

மாலை 6 மணி முதல் இரவு 8 மணிக்குள் ஸ்தூபி, தீபயந்திர, பிம்பஸ்தானங்கள், சிவச்சார்ய பூஜயனம் என்பன இடம்பெற்று வியாழக்கிழமை (13) அதிகாலை ஒரு மணிக்கு எண்ணைக்காப்பு சாத்துதல் இடம்பெறும். குடமுழுக்கு கிரியைகளை பிரதிஷ்டா தலைமைக்குரு சிவஸ்ரீ. சிவசண்முகக் குருக்கள் நடத்தி வைப்பார். (த)

---

## கருவி நிலையத்தின் ஆண்டு விழா நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 11

யாழ்ப்பாணம் கருவி மாற்றுத் திறனாளிகளின் சமூகவள நிலையத்தின் ஆண்டு விழா நாளை நிலையத்தில் முற்பகல் 10.45 மணிக்கு தலைவர் க.தர்மசேகரம் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சுற்றுலாத்துறை தலைவர் பேராசிரியர் த.தேவராஜா, சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாண மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்கள பொறியியலாளர் ஞ.சர்வராஜா, கோண்டாவில் இராமகிருஷ்ணா வித்தியாலய ஓய்வு பெற்ற அதிபர் எஸ்.வாமதேவன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஜ)

---

# தொண்டராசிரியர் நேர்முகத்தேர்வில் புதியவர்களும் தோற்றுகின்றனரா?

*கண்டறிந்தால் நீக்கப்படுவர் என்கிறார் செயலர்*

யாழ்ப்பாணம், ஜூன் 11

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் பல வருடங்களாகத் தொண்டராசிரியர்களாகப் பணியாற்றியவர்களை நிரந்தர ஆசிரிய சேவையில் உள்ளீர்ப்பதற்கான நேர்முகத் தேர்வுகளில் புதியவர்களும் தோற்றுகின்றனர் என்று தொண்டராசிரியர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

2015ஆம் ஆண்டுக்கு முன்னர் 3 ஆண்டுகள் வடக்கில் பணியாற்றிய 546 பேர் மட்டுமே உள்ளனர் என்று அமைச்சரவை அனுமதி பெறப்பட்ட நிலையில் அவ்வாறு அழைக்கப்பட்ட பலர் நேர்முகத் தேர்வில் பங்குகொள்ளவில்லை.

இதனால் குறித்த இடங்களுக்குப் புதியவர்கள் சமூகமளிக்கின்றனர் என்று குற்றச்சாட்டுக்கள் எழுப்பப்படுகின்றன.

இவ்வாறு அனுமதிக்கப்பட்ட ஆளணியாக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கீழ் தற்போதுள்ள வெற்றிடத்தை நிரப்ப 546 பேருக்கே சந்தர்ப்பம் உள்ளது. அவற்றை மட்டுமே நிரப்ப முடியும். அவ்வாறு நிரப்புவதற்காகக் குறித்த எண்ணிக்கையைவிடவும் அதிகமானோர் தோற்றும் சந்தர்ப்பத்தில் நீண்டகாலம் பணியாற்றியவர்கள் புறக்கணிக்கும் நிலமை ஏற்பட்டால் அதற்குக் கல்வி அதிகாரிகளே பதிலளிக்க வேண்டும்.

இவ்வாறான செயல் ஒரு கரத்தால் கொடுத்து மறு கரத்தால் பிடுங்கும் செயலுக்கு ஒப்பானது. முறைகேடுகளுக்கு அரசியல் செல்வாக்குள்ள சிலரின் பரிந்துரை கருத்தில் கொள்ளப்படுவதாகவே கூறப்படுகின்றது என்றும் தொண்டராசிரியர்கள் கூறுகின்றனர். இது குறித்து வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலரிடம் கேட்டபோது,

2015ஆம் ஆண்டு நியமனத்தில் தவறவிடப்பட்டவர்களுக்கே இந்தச் சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டது.

அதனால் இந்தமுறை நியமனம் வழங்கப்படுபவர்கள் அனைவரும் 2015ஆம் ஆண்டு நேர்முகத் தேர்வுக்குத் தோற்றியவர்கள் பட்டியலில் பெயர் இருந்தால் மட்டுமே நியமனம் வழங்கப்படும்.

2015ஆம் ஆண்டு நேர்முகத் தேர்வுக்குத் தோற்றி நியமனம் கிடைக்காதோரின் பெயர்ப் பட்டியல் பகிரங்கப்படுத்தப்படவுள்ளது. அதில் பெயரின்றி நியமனம் கிடைத்தால் எவரும் முறையிட முடியும்.

அவ்வாறு கிடைக்கப்பெறும் பெயர் 2015 ஆம் ஆண்டின் நேர்முகத் தேர்வில் பங்கு கொள்ளவில்லை எனக் கண்டறிந்தால் உடனடியாகப் பதவி நீக்க முடியும் - என்றார். (த-105)

# சமுர்த்தி முறைகேட்டைத் தவிர்க்க தரவுகள் கணினிமயப்படுத்தப்படும்

## அமைச்சர் தயா கமகே தெரிவித்தார்

மன்னார், ஜூன் 11

சமுர்த்தியில் முறைகேடுகள் செய்வதைத் தடுப்பதற்காகப் பதிவுகள் அனைத்தும் எதிர்காலத்தில் கணினி மயப்படுத்தப்படவுள்ளன என்று சமுர்த்தி அமைச்சர் தயா கமகே தெரிவித்தார். மன்னாரில் தெரிவு செய்யப்பட்ட 10 ஆயிரத்து 103 சமுர்த்திப் பயனாளிகளில் 5 ஆயிரம் பேருக்கு உரித்துப்படிவம் வழங்கும் நிகழ்வு மன்னார் நகர சபை மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.



"புத்தளத்தில் முன்னரே சமுர்த்தி உதவி பெறுபவர்கள் மன்னாரிலும் பெறுகின்றனர்" என்று மக்கள் பிரதிநிதிகள் இந்த நிகழ்வில் அமைச்சர் முன்னிலையில் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர்.

அதன் பின்னர் அமைச்சர் உரையாற்றுகையிலேயே கணினி மயப்படுத்தப்படும் என்ற தகவலைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

புத்தளத்தில் இருந்தாலும் சரி மன்னாரில் இருந்தாலும் சரி சமுர்த்தி உதவி பெறத் தகுதியுடையவர்களாக இருப்பவர்களுக்குச் சமுர்த்தி உதவிகளை வழங்குங்கள் என்று நான் கூறி இருக்கின்றேன். ஆனால் அவர்கள் இரண்டு இடங்களில் சமுர்த்தி உதவி பெறமுடியாது. ஏதாவது ஒரு மாவட்டத்தில் தான் பெற முடியும். இரண்டு மாவட்டங்களிலும் சமுர்த்தி உதவிகள் பெறுவதைத் தடுக்கும் நோக்கில் இனி வரும் காலங்களில் சமுர்த்தி உதவி தொடர்பான ஆவணங்களையும் அடையாள அட்டைகளையும் கணினி மயப்படுத்தி யார்? எங்கு சமுர்த்தி நிவாரணங்கள் பெற்றுள்ளார்கள் என்று அடையாளப்படுத்தவுள்ளோம் என்று அமைச்சர் தயா கமகே தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் சமுர்த்தி அதிகாரிகள், முன்னாள் அமைச்சர் ரிசாத் பதியுதீன், நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன், மன்னார் மாவட்டச் செயலர் சி.ஏ.மோகன்றாஸ், மாவட்ட மேலதிக செயலர் சி.குணபாலன், மன்னார் மாவட்டத்திலுள்ள பிரதேச சபைகளின் தவிசாளர்கள், ஐந்து பிரதேச செயலர்கள், சமுர்த்தி அலுவலர்கள் மற்றும் சமுர்த்திப் பயனாளிகளும் கலந்து கொண்டனர்.



இதேவேளை, இந்த நிகழ்வு முற்பகல் 11 மணிக்கு நடைபெறும் என்று கூறப்பட்டு சமுர்த்திப் பயனாளிகள் அழைக்கப்பட்டிருந்தனர். எனினும், அமைச்சர் மாலை 4.40 மணிக்குப் பின்னரே நிகழ்வில் கலந்துகொண்டிருந்தார். அதனால் பயனாளிகளும் சமுர்த்தி அலுவலர்களும் மணித்தியாலக் கணக்கில் அங்கு காத்திருக்கவேண்டிய நிலை ஏற்பட்டது.

பயனாளிகளை வீடுகளுக்குச் சென்று மதியம் 12 மணிக்கு வருமாறு அலுவலர்கள் கூறி அனுப்பியிருந்தனர். 12.30 மணிக்கு பயனாளிகள் வந்தனர். எனினும் அமைச்சர் வந்திருக்கவில்லை. 3 மணிக்குப் பின்னர் வந்து நிகழ்வை ஆரம்பித்திருந்தார். இந்திய தலைமைஅமைச்சர் நரேந்திரமோடி இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார்.

அந்த நிகழ்வில் கலந்துகொண்டிருந்தபடியால் அமைச்சர் குறித்த நேரத்துக்கு நிகழ்வில் கலந்துகொள்ளமுடியவில்லை என்று மாவட்டச் செயலகத் தரப்பினர் தெரிவித்தனர்.

இதேவேளை, குறித்த நிகழ்வில் மின்குமிழ்கள் பொருத்தப்பட்டிருந்த கம்பம் ஒன்று சரிந்து வீழ்ந்ததில் நிகழ்வில் கலந்துகொண்டிருந்த பயனாளிகள் மூவர் காயமடைந்தனர். அவர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றனர்.

(த-213)

# மன்னார், புத்தள வறுமை மக்களை சமுர்த்திக்குள் அதிகம் உள்ளீர்க்கவும்

## அமைச்சரிடம் ரிசாத் எம்.பி. கோரிக்கை

மன்னார், ஜூன் 11

மன்னார் மற்றும் புத்தளம் மாவட்டங்களில் இருக்கின்ற வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களை சமுர்த்தி உதவி வழங்கும் திட்டத்தில் அதிகளவில் உள்வாங்கி அவர்களின் வாழ்வாதாரத்துக்கு வழிவகுக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் ரிசாத் பதியுதீன் அமைச்சர் தயா கமகேயிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் புதிதாக சமுர்த்திப் பயனாளிகளாக இணைக்கப்பட்டவர்களுக்கு உரித்துப்படிவம் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டது. அதில் உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:

வன்னி மாவட்டத்துக்கு முதன் முதல் சமுர்த்தியைப் பெற்றுக் கொடுத்ததையிட்டு மனம் நிறைவடைகின்றேன். சமுர்த்தி அதிகாரிகள் புதிதாக இணைக்கப்பட்டுள்ள சமுர்த்திப் பயனாளிகளுக்குக் கனிவான சேவை வழங்கவேண்டும் என்று தெரிவித்தார். அதுமட்டுமன்றி, புத்தளம், மன்னார் மாவட்டங்களில் வறுமைநிலை மக்களை சமுர்த்தியில் அதிகம் உள்வாங்கவேண்டும் என்று அமைச்சர் தயா கமகேயிடம் கோரிக்கை விடுத்தார். அதற்கு பதிலளித்த அமைச்சர் தயாகமகே, "சமுர்த்திக் கொடுப்பனவு பெறத்தகுதியான பயனாளிகள் இந்தமாதம் 30க்கு முன்னர் தங்களது விண்ணப்பங்களை பூர்த்திசெய்து உரிய அதிகாரிகளிடம் கையளிக்கவேண்டும் என்று தெரிவித்தார். (த-213)





# உலக மது போதை தின கருத்தமர்வு நடைபெற்றது

கொடிகாமம், ஜூன் 10

உலக மது போதை தினத்தையொட்டியும் தேசிய மது ஒழிப்பு, மதுபோதை உதவி வாரத்தையொட்டியும் நடைபெறும் வேலைத் திட்டங்கள் தொடர்பான கருத்தரங்கு யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் முற்பகல் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் தல்துவ, யாழ்ப்பாணப் பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் கமகே, சாவகச்சேரி கொடிகாமம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ரஞ்சித் தசநாயக, யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனை மனோதத்துவ மருத்துவர் ம.சுரேந்திரன் மற்றும் பிரதேச பொலிஸ் பொறுப்பதிகாரிகள் பொலிஸ் அலுவலர்கள், தெரிவு செய்யப்பட்ட திட்ட விளக்கவுரையாளர்கள், யாழ்ப்பாணப் பிரதேச செயலக அலுவலர்கள், கிராம மட்ட பிரநிதிகள் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, வட்டுக்கோட்டை, கோப்பாய், மானிப்பாய், சாவகச்சேரி, கொடிகாமம், சுன்னாகம் ஆகிய 9 பொலிஸ் பிரிவுகளிலிருந்து இந்த வேலைத் திட்டங்களை மேற்கொள்வதற்குத் தெரிவு செய்யப்பட்ட திட்டச் செயற்பாட்டாளர்களுக்கான கருத்தமர்வும் நடைபெற்றது. (த-159)



கொடிகாமம் மத்தி மற்றும் ஐயனார் கோவில் பகுதிகளில் கடந்த வெள்ளிக்கிழமை மின் விளக்குகள் பொருத்தப்பட்டன. சாவகச்சேரி பிரதேச சபையின் உறுப்பினர்களுக்கு இந்த வருட வரவு - செலவுத் திட்ட நிதியிலிருந்து தலா 4 லட்சம் ஒதுக்கப்பட்டது.

அதில் 2 லட்சம் ரூபா பெறுமதியான மின் விளக்குகள் பொருத்தப்பட்டன என்று ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் உறுப்பினர் வை.ஜெகதாஸ் தெரிவித்தார். (ஐ-159)

# சமுர்த்தி வழங்கல் முறைகேடு குறித்து சார்ள்ஸ் எம்.பி. சாடல்

மன்னார், ஜூன் 11

மன்னார் மாவட்டத்தில் தற்போது புதிதாக அனுமதிக்கப்பட்ட சமுர்த்திப் பயனாளிகள் பட்டியலில் புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்தோரும் உள்ளடங்குகின்றனர். ஆனால் மன்னார் மக்கள் பலருக்கு அது வழங்கப்படவில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் குற்றம் சாட்டினார்.

நாடு முழுவதும் புதிதாக 6 லட்சம் பேர் சமுர்த்தி உதவி வழங்கும் திட்டத்தில் உள்வாங்கப்பட்டனர். மன்னார் மாவட்டத்தில் 10 ஆயிரத்து 110 பேர் உள்வாங்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு சமுர்த்தி உரிமம் வழங்கும் நிகழ்வு மன்னாரில் நேற்றுமுன்தினம் சமுர்த்தி அமைச்சர் தயா கமகே தலைமையில் இடம்பெற்றது. இதில் உரையாற்றும் போது மேலும் தெரிவித்ததாவது:

ஒக்ரோபர் புரட்சியின்போது இந்த அரசு எமக்கு ஆதரவு வழங்குமாறு விடுத்த கோரிக்கையின்போது நாம் எமது கோரிக்கையாக 10 நிபந்தனைகளை எழுத்தில் முன்வைத்தோம். புதிதாக 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு மன்னாரில் புதிதாகச் சமுர்த்தி வழங்கப்படுவது மகிழ்ச்சியான விடயம். இருப்பினும் உப்புக்குளத்தில் தனித்து வாழும் ஒரு தாய்க்கு இந்தச் சந்தர்ப்பம் மறுக்கப்படும் அதேநேரம் இந்த மாவட்டத்தில் வசிக்காத 120 குடும்பங்களுக்கு அதே கிராமத்தில் சமுர்த்தி வழங்கப்படுவதாகவும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

மன்னாரில் வசிக்காத மக்களுக்கு சமுர்த்தி உதவி வழங்கி மன்னாரில் வாழும் மக்களுக்கு சமுர்த்தி உதவி கிடைப்பதைத் தடுத்து மக்களுக்குத் துரோகம் இழைக்காதீர்கள் என்றார். (த-105)

# தே.அ.அட்டை கிடைக்காதவர்கள் கிராம அலுவலரை நாடவும்

யாழ்ப்பாணம், ஜூன் 11

நடமாடும் சேவையில் விண்ணப்பித்து இதுவரை தேசிய அடையாள அட்டை கிடைக்காதவர்கள் பகுதி கிராம அலுவலகரை தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை பிரதேச செயலகத்தால் கடந்த வருடம் 10 ஆம் மாதம் வட இந்து மகளிர் கல்லூரியில் நடமாடும் சேவை நடத்தப்பட்டது.

அதில் 422 பொதுமக்கள் தேசிய அடையாள அட்டை பெறுவதற்கு விண்ணப் பித்தனர். அதில் 11 பேர் புதிதாகத் தேசிய அடையாள அட்டை பெறுவதற்கும், 72 பேர் தொலைந்த அடையாள அட்டையைப் பெறுவதற்கும், 339 பேர் அடையாள அட்டையைத் திருத்துவதற்கும் விண்ணப்பித்திருந்தனர்.

அவ்வாறு விண்ணப்பித்தவர்களில் இதுவரை தேசிய அடையாள அட்டை கிடைக்கப் பெறாதவர்கள் உடனடியாகத் தங்கள் கிராம அலுவலரைத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொண்டுள்ளார். (ஐ)





# சுதந்திரபுரம் படுகொலையின் 21ஆம் ஆண்டு நினைவேந்தல்

முல்லைத்தீவு, ஜூன் 11

முல்லைத்தீவு மாவட்டம், புதுக்குடியிருப்பு, சுதந்திரபுரம் பகுதியில் 1998 ஆம் ஆண்டு அரச படையினர் மேற்கொண்ட எறிகணைத்தாக்குதல் மற்றும் வானூர்திப் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் உயிரிழந்த 33 பொதுமக்களின் 21ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்று நடைபெற்றது.

படுகொலையின்போது தனது நான்கு பிள்ளைகளையும் பறிகொடுத்த பெற்றோரான புஸ்பநாதன் இந்திராணி பொதுச்சுடரை ஏற்றிவைத்தார்.

பொது திருவுருவப்படத்துக்கான ஈகச் சுடரை புதுக்குடியிருப்புப் பிரதேச சபைத் தவிசாளர் செ.பிறேமகாந் ஏற்றி வைத்தார். சுதந்திரபுரத்தில் இதற்கெனத் தயார் செய்யப்பட்ட இடத்தில் இந்த நினைவேந்தல் நிகழ்வு இடம் பெற்றது.

உயிரிழந்த 33 பொதுமக்கள் நினைவாக சுடர் ஏற்றப்பட்டு மலர்வணக்கம் செலுத்தப்பட்டு நினைவுரைகள் இடம் பெற்றன.

நினைவுரைகளை வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஆ.புவனேஸ்வரன், புதுக்குடியிருப்புப் பிரதேச சபைத் தவிசாளர் செ.பிறேமகாந் மற்றும் வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகனின் இணைப்பாளர் றூபன் ஆகியோர் நிகழ்த்தினர்.

வன்னிக்குறோஸ் நினைவேந்தல் அமைப்பின் ஏற்பாட்டில் முல்லை ஈசன் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது. (த-ரி3)

# ஐந்து மழலைகளைக் கொடுத்துவிட்டு இன்று வாழ்ந்து கொண்டிருக்கின்றேன்

## சுதந்திரபுரம் படுகொலையின் சாட்சியின் கண்ணீர்க் கதை





முல்லைத்தீவு, ஜூன் 11

நான்கு முனைகளிலிருந்து நடத்தப்பட்ட தாக்குதல்களில் சிக்கி எனது நான்கு பிள்ளைகளும் கொல்லப்பட்டனர். எஞ்சிய ஒரு மகன் போரின் இறுதியில் காணாமல்போய் விட்டார். இன்றுவரை அவர் எங்கிருக்கிறார் என்று தெரியவில்லை. ஐந்து மலையான மலைகளைக்கொடுத்துவிட்டு இன்று வாழ்ந்து கொண்டிக்கின்றேன்.

இவ்வாறு சுதந்திரபுரம் படுகொலையில் அதிக உயிர்களைப் பறிகொடுத்த தாயான புஸ்பநாதன் இந்திராணி தெரிவித்தார்.

1998 ஆம் ஆண்டு ஜூன் 10 ஆம் திகதி சுதந்திரபுரம் பகுதியில் படையினரால் மேற்கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதல் மற்றும் வானூர்தித் தாக்குதலில் 33 பேர் கொல்லப்பட்டனர். அந்த நினைவேந்தல் நேற்று நடைபெற்றது. நினைவேந்தலின் பின்னர் இந்திராணி மேலும் தெரிவித்ததாவது:

"குண்டு வீச்சால் ஒரே புகை மண்டலமாகக் காட்சியளித்தது. என்ன செய்வது எங்கு போவது என்று தெரியாத நிலையில் தவித்தேன். அன்றைய கிராம அலுவலர் வந்து ஆறுதல் கூறினார். ஆள்களை கொண்டுவந்து எனது நான்கு பிள்ளைகளையும் அடக்கம் செய்தார்கள். சதீஸ்குமார், சத்தியசீலன், கலைச்செல்வி, தேவநந்தினி ஆகியோரே கொல்லப்பட்டனர்.

அதில் காயமடைந்த எனது மூத்த மகன் றமேஸ்குமார் பின்னர் சுகமடைந்திருந்தார். எனினும் 2009ஆம் ஆண்டு இறுதிப்போரின் போது காணாமல் போயுள்ளார்.

இன்றுவரை அவர் எங்கு இருக்கின்றார் என்று தெரியவில்லை.

ஐந்து மலையான மலைகளைக் கொடுத்துவிட்டு இன்று வாழ்ந்து கொண்டிக்கின்றேன்" என்றார்.

### குருதி வெள்ளத்தில் பிள்ளைகள் கிடந்தனர்

தந்தை புஸ்பநாதன் கண்ணீருடன் நினைவுகளைப் பகிர்ந்துகொண்டார்.

"மண்கிண்டிமலை, அம்பகாம், ஆனையிறவு போன்ற பகுதிகளிலிருந்து படையினரின் எறிகணைகள் சுதந்திரபுரம் பகுதியில் வீழ்ந்து வெடிக்கத்தொடங்கின. அதே வேளை வானூர்திகளும் குண்டு மழை பொழிந்தன. நாங்கள் வசித்த வீட்க்கொட்டில் மீதும் குண்டுகள் வீழ்ந்து வெடித்தன. அதன்போது எனது பிள்ளைகள் அனைவரும் குருதி வெள்ளத்தில் கிடப்பதைக் கண்டேன். எனது மனைவி பதைபதைத்து என் செய்வது என்று தெரியாத நிலையில் தலையில் அடித்து குளறியவாறு இருந்தார் - என்றார்.

அந்தப் படுகொலையில் சாட்சிகளாக இன்றுள்ளவர்களில் புஸ்பநாதனும் அவரது மனைவி இந்திராணியும் குறிப்பிட்டுக்கூறத்தக்கவர்களாகவுள்ளனர். (த-ரி3)

# பொதுமக்கள் தினம்

யாழ்ப்பாணம், ஜூன் 11

வடக்கு மாகாண ஆளுநரின் பொதுமக்கள் தினம் கைதடியில் அமைந்துள்ள முதலமைச்சர் செயலகத்தில் நாளை புதன்கிழமை நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

நிகழ்வு வடக்கு மாகாண சபை அமைச்சுக்களின் செயலர்கள் மற்றும் திணைக்களங்களின் தலைவர்களின் பங்குபற்றுதலுடன் இடம்பெறும் என்று ஆளுநரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஜ-7)

# தொழிற்பயிற்சி நிலையம் கிளிநொச்சியில் திறப்பு

கிளிநொச்சி, ஜூன் 11

போரால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு இலவச தொழிற்பயிற்சி நிலையத் திறப்பு நிகழ்வு நாளை புதன்கிழமை கிளிநொச்சி பாரதிபுரம் புதிய வாழ்வு நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

புதிய வாழ்வு நிறுவன இயக்குநர் றொபேட் கிளின்ரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தமிழ் மக்கள் கூட்டணியின் செயலர் நாயகம் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரனும், சிறப்பு விருந்தினராக விவசாயத் திணைக்களப் பிரதி மாகாணப் பணிப்பாளர் திருமதி ஷகீலா பானுவும் கலந்து கொள்ளவுள்ளனர். (த-422)

# சவேரியார் பாடசாலையின் 150ஆவது ஆண்டு விழா





தலைமன்னார், ஜூன் 11

மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையின் 150ஆவது ஆண்டு ஆரம்ப விழா பாடசாலையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

பாடசாலை அதிபர் அருட்சகோதரர் றெஜினோல்ட் தலைமையில் நடைபெற்ற விழாவில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் ஆண்டகை முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு கூட்டுத் திருப்பலியுடன் விழாவை ஆரம்பித்து வைத்தார்.

விழாவில் சிறப்பு அதிதிகளாக அருட் தந்தையர்கள், மன்னார் மாவட்டச் செயலர் சீ.ஏ.மோகன்ராஸ் மற்றும் மன்னார் கல்விப் பணிப்பாளர் கே.ஜே.பிறட்லி ஆகியோர் கலந்து கொண்டனர். (த-60)

# குளத்தைச் சீரமைத்துத் தாருங்கள் யானைகளின் வரவைத் தடுக்கலாம்

## விவசாயச் சம்மேளனம் இப்படிக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 11

தண்ணீரைத் தேடியும் யானைகள் கிளிநொச்சி மாவட்டத்தின் இராமநாதபுரம், புதுக்காடு, அழகாபுரிப் பகுதிகளுக்குள் வருகின்றன.

அவற்றைக் கட்டுப்படுத்த அதன் அருகிலுள்ள பாழடைந்த குளத்தைச் சீரமைத்துத் தருமாறு இரணைமடு விவசாய சம்மேளனச் செயலர் மு.சிவமோகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கல்மடுக் குளத்தை அண்டிய காட்டுப் பகுதியில் கடந்த மாதம் 20 ஆம் திகதி தொடக்கம் 25ஆம் திகதி வரை தொடர்ச்சியாகக் குடியிருப்புப் பகுதிகளுக்குள்ளும் வயல் பகுதிகளுக்குள்ளும் ஊடுருவின. அவற்றைக் கலைத்தாலும் அவை நகர மறுக்கின்றன. அதனால் கிராம மக்கள் அச்சத்தில் உள்ளனர். இரவில் அவர்கள் விழித்திருந்து தம்மைப் பாதுகாக்க வேண்டிய நிலையிலுள்ளனர்.

யானைகளை வனஜீவராசித் திணைக்கள அதிகாரிகள் பிடிப்பதற்குரிய பணிகளை மேற்கொண்டு மக்களைப் பாதுகாக்க முன்வர வேண்டும். தவறினால் பெரும் இடர் ஏற்படும். இடருக்கான முழுப் பொறுப்பையும் குறித்த திணைக்களமே ஏற்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தோம் அவற்றுக்கும் தீர்வு கிட்டவில்லை.

யானை மற்றும் குரங்குகள் தண்ணீருக்காக இந்தப் பகுதிக்கு வருகின்றன. குளத்தில் தண்ணீர் இல்லாததால் கிராமத்துக்குள் நுழைகின்றன. தண்ணீர் இன்மை காரணமாகவே யானைகள் கிரா்மத்துக்குள் ஊடுருவுகின்றன என்று நாம் நம்புகிறோம்.

குறித்த 'குளத்தைச் சீரமைக்குமாறு நீண்டகாலமாகவே கோரிக்கை விடுத்த போதிலும் குளம் தமது ஆளுகைப் பகுதியில் இருப்பதாகக் கூறி வனவளத் திணைக்களத்தினர் குளத்தைச் சீரமைக்க அனுமதி மறுக்கின்றனர்.

வனவளத் திணைக்களமே தடையாகவுள்ளது. இதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் - என்றார். (த-105)

# சுகாதாரத் தொண்டர் நியமனம் இழுபறிப்பட வாய்ப்புள்ளதா?

*யாழ்ப்பாணம், ஜூன் 11*

*வடக்கு மாகாண மருத்துவமனைகளில் சிற்றூழியர்கள் வெற்றிடத்தை நிரப்பும் நோக்கில் தற்போது இடம்பெறும் நேர்முகத் தேர்வின் மூலம் நியமனம் கிடைக்குமா என்பதில் சந்தேகம் வெளியிடப்படுகின்றது.*

வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் ஏற்பாட்டில் தற்போது இடம்பெறும் நேர்முகத் தேர்வில் எதிர்பார்க்கப்பட்ட அளவைவிடவும் அதிகமானோர் நேர்முகத் தேர்வில் பங்குபற்றுகின்றனர் என்று எழுப்பப்படும் குற்றச் சாட்டுக்கள் தொடர்பில் மூத்த அதிகாரி ஒருவரைத் தொடர்பு கொண்டு கேட்டபோதே கூறப்பட்ட பதில் ஊடாக நியமனத்தில் சந்தேகமிருப்பது தெரிகிறது.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கில் 826பேர் மட்டுமே உள்ளனர் என்று கூறப்பட்ட நிலையில் 2 ஆயிரம் பேர் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுகின்றனர். அனுமதிக்கப்பட்ட ஆளணியாக அதாவது வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் கீழ் தற்போதுள்ள வெற்றிடங்களை நிரப்ப 454 பேருக்கே சந்தர்ப்பம் உள்ளது. அவ்வாறு காணப்படும் 454 வெற்றிடங்களை மட்டுமே தற்போது நிரப்ப முடியும். அவ்வாறு நிரப்பும்போதும் குறித்த எண்ணிக்கையில் 30 வீதம் ஆண்களாக இருக்க வேண்டும் என்பதும் கட்டாயம். தகவலின்படி ஆண்களின் எண்ணிக்கை சுமார் 100 அளவிலேயே உள்ளது. அதனால் ஆண்கள் அனைவருக்கும் அதிக சந்தர்ப்பம் உள்ளது. அதாவது 454 பேரில் 30 வீதம் எனில் 134 பேர் ஆண்களாகவும் 320 பேரே பெண்களாகவும் இருக்க முடியும்.

தற்போது இடம்பெறும் நேர்முகத் தேர்வில் பட்டியல் நீண்டு செல்லும் நிலையில் 320 பேரை மட்டும் தேர்வு என்பதும் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தும். இதனால் சிலர் மனவிரக்தியில் முறையீடு செய்யலாம். அதன் விசாரணை, அதன் பின்பு தேர்தல் காலங்கள் என்று இந்த நியமனம் இழுத்தடிப்பதாகவே அமையும் சூழல் காணப்படுவது மன வேதனை அளிக்கின்றது என்று பெயர் குறிப்பிட விரும்பாத அந்த அதிகாரி கூறுகிறார். (த-105)

## வாக்காளர் படிவங்கள் விநியோகம்

கொடிகாமம், ஜூன் 11

2019 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பதிவு செய்வது தொடர்பாக படிவங்கள் கிராம அலுவலகர் பிரிவு ரீதியாக விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் தென்மராட்சி பிரதேசத்துக்குட்பட்டவர்கள் தத்தமது பிரிவு கிராம அலுவலருடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு பிரதேச செயலகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-159)

## மண்டலாய் பிள்ளையாருக்கு குடமுழுக்கு

வடமராட்சி கிழக்கு அருள்மிகு மண்டலாய்ப் பிள்ளையார் ஆலய குடமுழுக்கு எதிர்வரும் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.22 மணி தொடக்கம் 10.34 மணி வரையுள்ள சுப நேரத்தில் நடைபெறவுள்ளது.

எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு நாளைமறுதினம் வியாழக்கிழமை காலை 7 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை நடைபெறும்.

எதிர்வரும் 15 ஆம் திகதி மண்டலாபிஷேகம் ஆரம்பமாகி நடைபெறும். மண்டலாபிஷேக நிறைவின்போது விநாயகப் பெருமானுக்கு ஆயிரத்து 8 சங்காபிஷேகமும், வைரவப் பெருமானுக்கு 108 சங்காபிஷேகமும் நடைபெறும் என்று ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ஐ)

## குடமுழுக்கு

யாழ்ப்பாணம் தென்மராட்சி கச்சாய் தெற்கு திருவருள்மிகு பாதாள வைரவர் ஆலய குடமுழுக்கு நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளது. முற்பகல் 10.54 மணி தொடக்கம் 11.48 மணி வரையுள்ள சுபநேரத்தில் குடமுழுக்கு இடம்பெறும் என்று ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ஐ)



## சுற்றுச் சூழல் தினம்

யாழ்ப்பாணம், ஜூன் 11

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சாரணர்துருப்பு மற்றும் இயற்கை வலுவூட்டல் கழகம் இணைந்து சுற்றுச் சூழல் தினத்தை நடத்தியது.

கல்லூரியின் சபாலிங்கம் அரங்கில் கடந்த வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண முன்னாள் விவசாய அமைச்சரும் தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவருமான பொ.ஜங்கரநேசன் கலந்துகொண்டார். (ஐ)

## போதைக்கு அடிமையானோர் விவரங்களை எமக்குத் தரவும்

*தென்மராட்சி பிரதேச உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு*

தென்மராட்சி, ஜூன் 11

மது, போதை பாவனைக்கு அடிமையானவர்கள் இருந்தால் அவர்களின் விவரத்தை தாருங்கள். நாம் அவர்களை கைது செய்வதற்காக இல்லை போதையால் ஏற்படும் பாதிப்பு தொடர்பில் அவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கே.

இவ்வாறு தென்மராட்சி பிரதேச உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ரஞ்சித் தசநாயக்க தெரிவித்தார்.

போதை பொருள் பாவனையிலிருந்து மீட்டெடுப்பது தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தமர்வு நேற்றுமுன்தினம் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் பொறுப்பதிகாரி எதிரிசிங்க தலைமையில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

போதைக்கு அடிமையானவர்களை எப்படி மீட்டெடுப்பது என முடிவு எடுக்க வேண்டும்.

கஞ்சா, ஹெரோய்ன் கூடுதலாகலாக பாவிப்பவர்களை இனங்கண்டு பாவனையைநிறுத்தவேண்டும். இதற்கான முழுப் பொறுப்பும் எங்களிடம் உள்ளது. பிரதேசத்தில் உள்ள வயது குறைந்த இளைஞர்கள் கூடுதலாக மது போதைக்கு அடிமையாகியுள்ளனர். இவர்களை இதிலிருந்து மீட்பதற்கு கிராம அலுவலர்கள், சமுர்த்தி அலுவலர்கள் பொருளாதார அபிவிருத்தி அலுவலர்கள், பிரதேச செயலக அரச அலுவலர்கள் எமக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் -என்றார். (ஐ-159)

# சுற்றுலாவிகளின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரிக்கின்றது!

*சுற்றுலா மேம்பாட்டுப் பணியகம் தகவல்*

கொழும்பு, ஜூன் 11

உயிர்த்தஞாயிறு தாக்குதல் சம்பவத்தின் பின்னர் பெரியளவில் குறைந்திருந்த இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வருகிறது என்று சுற்றுலா மேம்பாட்டுப் பணியகத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

ஈஸ்டர் தாக்குதலை அடுத்து இலங்கைக்கு செல்வதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு பெரும்பாலான நாடுகள் தத்தம் மக்களுக்கு பயண எச்சரிக்கையை விடுத்திருந்தன.

இதனால் இலங்கையின் சுற்றுலாத்துறையில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டது.



இதையடுத்து மேற்கொள்ளப்பட்ட பாதுகாப்பு நடைமுறைகளால் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை மீண்டும் தற்போது படிப்படியாக அதிகரித்து வருகின்றது. இலங்கை தொடர்பில் விடுக்கப்பட்டிருந்த பயண எச்சரிக்கைகளை உலக நாடுகள் தற்போது படிப்படியாக நீக்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

## மாகாண மூத்த டி.ஐ.ஜீ. மன்னாருக்குப்பயணம்

மன்னார், ஜூன் 11

வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவி விஜய குணவர்த்தன நேற்று மன்னாருக்குப் பயணம் மேற்கொண்டார்.



மன்னார் மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் அவருக்கு பொலிஸ் அணி வகுப்பு மரியாதை வழங்கப்பட்டது.

மன்னார் மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் பந்துல வீரசிங்க தலைமையில் அணிவகுப்பு இடம்பெற்றது. தொடர்ந்து மன்னார்மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் மரக்கன்று நட்டார்.

பின்னர் மன்னார் மாவட்டத்திலுள்ள அனைத்துப் பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளையும் சந்தித்து உரையாடினார். இரண்டு வாரங்களுக்கு முன்னர் இவர் வடக்குமாகாணத்துக்கு டி.ஐ.ஜி யாக நியமிக்கப்பட்டார். (த-56)

## கலை இலக்கிய போட்டிகளுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம், ஜூன் 11

கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் வருடாந்தம் நடத்தப்படும் தேசிய கலை இலக்கியப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. பாலர் பிரிவு, சிறுவர் பிரிவு, கனிஷ்ட பிரிவு, திறந்த பிரிவு (18 வயதுக்கு மேல்) ஆகிய பிரிவுகளின் கீழ் போட்டிகள் நடத்தப்படவுள்ளதாக பருத்தித்துறை பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை சிறி தெரிவித்தார்.

இதில் கையெழுத்துப்போட்டி, கவிதை பாடல் போட்டி, கட்டுரை போட்டி, பாடல் நயத்தல் போட்டி, நாடகப் பிரதி எழுதுதல் போட்டி, பாடலாக்கப் போட்டி, நாட்டார் கலை கற்றல் போட்டி, இலக்கிய விபரணப் போட்டி, சிறுகதை போட்டி, சிறுவர் கதை போட்டி முதலான போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இந்தப் போட்டிகள் தொடர்பான விவரங்களையும் நிபந்தனைகளையும் பிரதேச செயலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். ஆர்வமுடையவர்கள் எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு முன்னர் ஆக்கங்களை சமர்பித்து மேற்படி போட்டிகளில் பங்குபற்றுமாறு பிரதேச செயலர் கேட்டுக்கொண்டுள்ளார். (ஐ)

## இரு விபத்துக்களில் மாணவன் உட்பட மூவருக்கு காயம்

சாவகச்சேரி, ஜூன் 11

இரு வெவ்வேறு விபத்துக்களில் மூவர் காயமடைந்து சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

வாழைக்குலை ஏற்றிச் சென்ற ஈருருளியை உந்துருளி மோதியதில் ஈருருளியில் பயணித்தவர் காயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு மீசாலை வடக்கு வேம்பிராய் வீதியில் இடம்பெற்றது. காயமடைந்த நீர்வேலி அச்செழுவைச் சேர்ந்த 67 வயது முதியவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இதேவேளை பாடசாலைக்கு ஈருருளியில் சென்ற 14 வயது மாணவனை ஏ 32 வீதியில் பயணித்த உந்துருளி மோதியது. இதனால் மாணவனும் உந்துருளியைச் செலுத்தி வந்தவரும் காயமடைந்தனர்

இந்த விபத்து தனன்களப்புப் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்றது. இதே இடத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவனான கிருஷ்ண பிள்ளை பிரியதர்சன் (வயது-14), உந்துருளியைச் செலுத்தி வந்த கீரிமலையைச் சேர்ந்த தேவரஞ்சன் சூசைதாசன் (வயது-41) ஆகியோரும் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். (ஐ-9)

# கன்னியாவில் விகாரை கட்டமாட்டோம்; அமைச்சர் மனோவிடம் தேரர்கள் உறுதி

திருகோணமலை, ஜூன் 11

திருகோணமலை கன்னியா வெந்நீர் ஊற்று விநாயகர் ஆலயத்தின் அத்திவாரம் பௌத்த பிக்கு ஒருவரின் தலைமையில் இடிக்கப்பட்டமை தொடர்பில் சர்ச்சை நிலவியது. இது தொடர்பில் இந்து சமய அலுவல்கள் அமைச்சர் மனோ கணேசன் நேற்று கன்னியாவுக்கு விஜயம் செய்து சந்திப்பு நடத்தியதில் வெந்நீர் ஊற்று விநாயகர் ஆலயம் இருந்த இடத்தில் பௌத்த விகாரை கட்ட மாட்டோம் எனவும், தமிழ் பௌத்த வரலாறு இருப்பதை ஏற்றுக்கொள்கிறோம் எனவும் கன்னியா விகாரை தேரர்கள் உடன்பட்டனர்.



புராதன சிதைவுகளுக்கு சேதம் ஏற்படாத முறையில் கன்னியா வளவுக்குள் வெந்நீர் ஊற்று விநாயகர் ஆலயம் அமைக்கவும், வெந்நீர் ஊற்று சிவன் ஆலயத்தையும் புனரமைக்கவும் உடன்பாடு காணப்பட்டது. இது தொடர்பான அடுத்தகட்ட கலந்துரையாடலை கொழும்பில் அரச தலைவர், தலைமை அமைச்சர் இந்து சமய, பௌத்த மத விவகார அமைச்சர்கள் கலந்துகொள்ளும் மட்டத்தில் நடத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

கன்னியா விநாயகர், சிவன் ஆலய கட்டுமானங்களுக்கான நிதி ஒதுக்கீடுகளை தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு, இந்து சமய அலுவல்கள் அமைச்சு வழங்கும் என அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

அமைச்சர் மனோ கணேசனுடன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சீ.யோகேஸ்வரன், வேலுகுமார், சுசந்த புச்சிநிலமே ஆகியோரும், ஜனநாயக மக்கள் முன்னணியின் செயலாளர் ஜனகன், திருகோணமலை மாவட்ட செயலர் புஷ்பகுமார, கன்னியா விநாயகர் ஆலயம் சார்பாக கணேஷ் கோகிலரமணி, கன்னியா விகாரை தேரர்கள், ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரசார செயலாளர் பரணிதரன் ஆகியோர் திருகோணமலை மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

கலந்துரையாடலின் பின்னர் அமைச்சர் மனோ கணேசன் தலைமையிலான குழுவினர் கன்னியா வெந்நீர் ஊற்று வளவுக்குச் சென்று நேரடியாக ஸ்தலத்தைப் பார்வையிட்டு, சிவன் கோவிலில் ஏற்பாடு செய்யப்பட்ட பூஜையிலும் கலந்து கொண்டனர். இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனும் இணைந்து கொண்டார். அவ்விடத்தில் அமைந்துள்ள பௌத்த விகாரைக்கும் அமைச்சர் மனோ கணேசன் சென்று வழிபாட்டில் ஈடுபட்டார். (ம-22)

## வெல்லம்பிட்டிய தொழிற்சாலை சந்தேக நபருக்கு மறியல் நீடிப்பு

வெல்லம்பிட்டிய செப்புத் தொழிற்சாலை சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 10ஆவது சந்தேக நபரை எதிர்வரும் 24ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தர விடப்பட்டுள்ளது.

கருப்பையா ராஜேந்திரன் எனும் சந்தேகநபரையே இவ்வாறு விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதிவான் பிரியந்த லியனகே உத்தரவிட்டுள்ளார். குறித்த சம்பவம் தொடர்பில் தொடர்ந்தும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக குறிப்பிட்டுள்ள பயங்கரவாத விசாரணைப் பிரிவு, ஏனைய சந்தேகநபர்கள் தொடர்பில் விசாரணைகள் மற்றும் வாக்குமூலங்கள் பெறப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டுள்ளது. (ம)

# பிக்குகளுக்கு உறுதுணையாக எம்மால் நாடகமாட முடியாது

### முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் இப்படித் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 11

தலதா மாளிகைக்கு முன்னால் ஒரு புத்தபிக்கு நடகமாடுகின்றார் என்பதற்காக, அவர் போன்றவர்களுக்கு உறுதுணையாக நாங்கள் நாடகமாடக் கூடாது என்று தெரிவித்தார் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் கிராமஎழுச்சிவேலைத் திட்டத்தினூடாக மேற்கொண்ட மூன்று வீதிகளைத் திறந்துவைக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார் . அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்றுவரை இந்த புத்த பிக்குகள் என்ன செய்துகொண்டிருக்கின்றார்கள்; முல்லைத்தீவு நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தில் புத்தர் சிலை வைத்து விகாரை அமைப்பதற்கும் ஒரு புத்த பிக்கு முயற்சிக்கின்றார், அதுபோல் திருகோணமலை கன்னியா வென்னீர் ஊற்றுப் பகுதியில் பிள்ளையார் சிலையை உடைத்து விட்டு புத்தர் சிலை வைப்பதற்கு இன்னுமொரு பிக்கு முயற்சித்துக் கொண்டிருக்கின்றார். மட்டக்களப்பு மங்களராமய புத்த பிக்கு கெவுளியாமடு கிராமத்தில் கிராம சேவகர் ஒருவரை கெட்ட வார்த்தைகள் கூறி அவதூறு செய்தார், அதே பிக்கு மட்டக்களப்பு பிள்ளையாரடியிலே புத்தர் சிலை வைக்க முயற்சி செய்தார், தலதா மாளிகைக்கு முன்னால் ஒரு புத்தபிக்கு நாடகமாடுகின்றார் என்பதற்காக, அவருக்க உறுதுணையாக நாங்கள் நடகமாடக் கூடாது.

பிக்குமாரை தமிழ் மக்கள் நன்கு அறிவார்கள். இந்த நாட்டிலே ஏற்பட்ட அழிவுகள் அனைத்துக்கும் காரணமானவர்கள் பித்தம் பிடித்த புத்த பிக்குகள்தான் என்பதை நாங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். - என்றார். (ம)





### உயிர்த்த ஞாயிறு தின

# தாக்குதலில் இறந்தோருக்கு ஹட்டனில் சிறப்புத்திருப்பலி

கொழும்பு, ஜூன் 11

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் கொல்லப்பட்டோரின் ஆத்ம சாந்தியை வேண்டியும், காயமடைந்தோர் உடல் நலம்பெற வேண்டியும் ஹட்டனில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை சிறப்புத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

ஹட்டன் திருச்சிலுவை ஆலயத்தில் பங்குத்தந்தை அருட்திரு நியூமன் பீரிஸ் அடிகளாரின் ஏற்பாட்டில் திருப்பலி இடம்பெற்றது. மத்திய மாகாண ஆயர் பிரான்சிஸ் வியாணி பர்ணான்டோ அடிகளார் திருப்பலிக்குத் தலைமையேற்றார். (ம)

## கட்டுநாயக்கவின் பார்வையாளர் பகுதி மீண்டும் திறப்பு

கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தின் பார்வையாளர்கள் பகுதி நேற்றுமுதல் மீண்டும் திறக்கப்பட்டுள்ளது. குறித்த அறிவிப்பை சிவில் வானூர்திச் சேவை அதிகார சபையின் தலைவர் தம்மிக ரணதுங்க தெரிவித்துள்ளார். அதனடிப்படையில் நேற்று மதியம் 12 மணிமுதல் பயணி ஒருவர், இருவரை பார்வையாளர் மண்டபத்துக்கு அழைத்து வர முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த உயிர்த்த ஞாயிறு தாக்குதலை அடுத்து பாதுகாப்பு காரணங்களுக்காக பார்வையாளர் மண்டபத்தை மூட சிவில் வானூர்தி சேவை அதிகார சபை தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

### ஈஸ்டர் தாக்குதல்

# விசாரணை பற்றி கேள்வி எழுப்ப தயாராகின்றது சிவில் அமைப்பு

கொழும்பு, ஜூன் 11

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் நியமிக்கப்பட்ட தெரிவுக்குழுவின் அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவரும் விதம் தொடர்பில் கண்டறிவதற்கு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் சபாநாயகர் கருஜயசூரிய ஆகியோரைச் சந்திக்கவுள்ளதாக சிவில் சங்கங்கள் மற்றும் தொழிற்சங்கள் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

அடுத்த வாரத்துக்குள் இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளதாக சிவில் சங்கங்கள் மற்றும் தொழிற்சங்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் சமன் ரத்னப்பிரிய நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அறிவித்துள்ளார்.

கடந்த பயங்கரவாத தாக்குதல் சம்பவம் தொடர்பில் தகவல்கள் வெளிவந்து கொண்டிருக்கையில் சிலர் அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பது தொடர்பில் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் என்ற வகையில் நாம் கவலையடைகிறோம்.

இந்தத் தெரிவுக்குழுவின் விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்சவிடமும் வேண்டுகோள் விடுக்கிறோம் என்று சமன் ரத்னப்பிரிய மேலும் குறிப்பிட்டார்.

இந்த விசாரணைகளுக்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன முழு எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றார். தெரிவுக்குழுவின் கருத்துக்களால் நாட்டின் புலனாய்வுத் தகவல்கள் வெளியில் வருகின்றன. பதவியில் இருக்கும் எவரையும் சாட்சியமளிப்பதற்கு நான் இடமளியேன் என்று அவர் அண்மையில் இடம்பெற்ற சிறப்பு அமைச்சரவைக் கூட்டத்தில் குறிப்பிட்டிருந்தார். (ம)

### ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பான

# விசாரணைகள் குறித்து கர்தினாலுக்கு சந்தேகம்



கொழும்பு, ஜூன் 11

உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல் தொடர்பான விசாரணைகள் குறித்து ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாடுகளால், தாக்குதலுக்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்கள்தொடர்பில் உரியமுறையில்தகவல்கள் வெளிப்படுத்தப்படுமா? என்ற சந்தேகம் எழுகின்றது என பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார். அக்மீமனை பகுதியில்நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'இந்தத் தாக்குதல் பல ஆண்டுகளாகத் திட்டமிடப் பட்ட ஒரு வேலைத்திட்டத்தின் பிரதிபலனாகும். இது இலங்கையில் திட்டமிடப்பட்ட செயற்பாடா? அல்லது வெளி நாட்டில் திட்டமிடப்பட்டதா? என்பது தொடர்பில் விசாரணைகள் முடியும்வரை தெரிவிக்க முடியாது. இதே வேளை ஊழல் இல்லாத இடமே இலங்கையில் இல்லை என்றே கூற வேண்டும்அதாவது சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் சட்டத் திட்டங்களை மீறிச் செயற்படுவதற்குப் பழகியுள்ளனர்.

சுதந்திரத்தின் பின்னரான இலங்கை குருதி தோய்ந்த பூமியாகவே மாறியுள்ளது - என்றார். (ம)

# ஐ.எஸ்ஸுக்கு அழைப்பெடுத்த 5 இலக்கங்கள் இலங்கையிடம்!

## இந்தியப் புலனாய்வுத்துறை வழங்கியது

கொழும்பு, ஜூன் 11

ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகளுடன் இலங்கையிலிருந்து பேசியுள்ள ஐந்து தொலைபேசி இலக்கங்கள் குறித்த தகவல் வெளியாகியுள்ளது. குறித்த தொலைபேசி இலக்கங்களை இந்திய புலனாய்வாளர்கள் இலங்கைக்கு வழங்கியுள்ளனர் என்று இந்தியன் எக்ஸ்பிரஸ் ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.



இவ்வாறு வெளியிடப்பட்டுள்ள செய்தியில், உயிர்த்த ஞாயிறு தற்கொலையாளிகள் இருவருடன் தொடர்பில் இருந்த சில இந்தியர்கள் பற்றிய தகவல்களையும், இந்தியா பகிர்ந்துள்ளது. இந்தியாவின் தேசிய புலனாய்வு நிறுவன அதிகாரிகள் இலங்கைக்கு நேரடியாக வந்து உயிர்த்த ஞாயிறு விசாரணைகளில் உதவிபுரிந்தனர்.

இலங்கை ஐ.எஸ்.ஐ.எஸ். வலையமைப்புடன் தென்னிந்தியாவைச் சேர்ந்தவர்களும் நெருக்கமான தொடர்பைப் பேணியதால், இலங்கைத் தாக்குதல் விவரத்தை இந்தியா ஆரம்பத்திலேயே கண்டறிந்திருந்தது.

இந்த விசாரணைகளில், இந்தியாவிலிருந்து இரண்டு ஐ.எஸ் அமைப்பின் தொடர்பிடங்களிலிருந்து இலங்கையுடன் தொடர்பு கொண்டது கண்டறியப்பட்டுள்ளது. தொலைபேசி வழியாகவோ, சமூக ஊடகங்கள் வழியாகவே இந்தியாவிலிருந்து தொடர்பு கொள்ளப்பட்ட 4 அல்லது 5 இலங்கை தொலைபேசி இலக்கங்கள் அடையாளம் காணப்பட்டு, அது குறித்த தகவல்கள் இலங்கை புலனாய்வுத் துறைக்கு வழங்கப்பட்டுள்ளன.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலை தொடர்ந்து, இந்தியாவிலுள்ள சில சந்தேகத்துக்கு இடமான ஐ.எஸ் வலையமைப்புக்களின் வெளிநாட்டு அழைப்புக்களை என்.ஐ.ஏ ஆய்விற்குட்படுத்தியபோது, கோயம்புத்தூரில் சந்தேகநபர் ஒருவர் அடையாளம் காணப்பட்டார்.

பின்னர் கேரளாவில் ஒருவர் அடையாளம் காணப்பட்டார். ரியாஸ் அபூபக்கர் என்ற அந்த நபர், சஹ்ரானின் பேச்சுக்களைக் கேட்டு, தற்கொலைத் தாக்குதல் நடத்தத் தயாராக இருந்தது விசாரணை களில் தெரிய வந்திருந்தது. இதேவேளை, தற்கொலைதாரிகளான இன்சாப், இல்ஹாம் சகோதரர்களுடன் நெருக்கமான தொடர்பில் இருந்த சில சந்தேகநபர்களின் விபரங்களையும் என்.ஐ.ஏ அதிகாரிகள் கண்டறிந்துள்ளனர்.

வர்த்தகர் இப்ராஹிமின் மகன்களான அவர்களுடன்,

இந்த இந்தியர்கள் எப்படியான தொடர்பை வைத்திருந்தார்கள் என்பது இன்னும் உறுதியாகவில்லை. ஏனெனில், ஹாஜியாரின் குடும்பம் இந்தியாவில் கணிசமான வர்த்தக தொடர்பையும் பேணியுள்ளது. ஹாஜியார் தற்போது விசாரணையில் உள்ளதால், அந்தத் தொடர்பு வர்த்தக நோக்கமுடையதா அல்லது ஐ.எஸ் தொடர்பா என்ற விசாரணைகள் நடந்து வருகின்றன. (ம)

# பெரமுனவின் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்சவே

## மறுபேச்சுக்கு இடமில்லை என்று தெரிவிக்கிறார் ரஞ்ஜித் சொய்சா

கொழும்பு, ஜூன் 11



சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்சவே. இதில் கலந்துரையாடல்களுக்கு இடமில்லை என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்ஜித் சொய்சா.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் சார்பில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணிக்கும் இடையில் ஐந்தாவது கட்டப் பேச்சும் நிறைவடைந்து, அடுத்த கட்டப் பேச்சு எதிர்வரும் 17ஆம் திகதி நடைபெறவுள்ளது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலர் தயாசிறி ஜயசேகர தற்போதைய அரச தலைவர் தான் அரச தலைவர் வேட்பாளர் எனவும், எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச தலைமை அமைச்சர் எனவும் கட்சியின் கருத்தைக் அண்மையில் கூறியிருந்தார். (ம)

# அடுத்தசில நாள்களுக்கு கடும் காற்றுத் தொடரும்

கொழும்பு, ஜூன் 11



நாடு முழுவதும் தற்போது காணப்படும் காற்றுடன் கூடிய காலநிலை அடுத்த சில நாள்களுக்கும் மேலும் தொடரும் என எதிர்பார்க்கப்படுகின்றது என்று வளிமண்டலவியல் திணைக்களம் நேற்றுக் காலை வெளியிட்டுள்ள வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேல், தென், மத்திய, சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களில் அவ்வப்போது மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. சில இடங்களில் 75 மி.மீ அளவான ஓரளவு பலத்த மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. அனுராதபுரம் மற்றும் மன்னார் மாவட்டங்களில் பல தடவைகள் சிறிதளவான மழை பெய்யக் கூடும். நாடு முழுவதும் மணித்தியாலத்துக்கு 50 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அந்தப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக் கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை நர்ட்டின் வடக்கு, தெற்கு மற்றும் தென்மேற்கு கடற்பரப்புகளில் காணப்படும் காற்றுடன் கூடிய நிலைமை மேலும் தொடரும் என எதிர்பார்க்கப்படுகின்றது - என்று அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளது. (ம)


# மரபணுச் சோதனையில் மட்டு. தற்கொலைதாரி விவரம் உறுதி

மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் இடம் பெற்ற தற்கொலை குண்டுத்தாக்குதலில் கண்டெடுக்கப்பட்ட தலை மற்றும் சிதறுண்ட உடல் பாகங்கள் தற்கொலை குண்டுதாரி முகமது நாசார் முகமது ஆசாத் என்பவருடையது என மரபணு சோதனையில் தெரிவந்துள்ளது.

கடந்த 21ஆம் திகதி மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் இடம்பெற்ற தற்கொலை குண்டுத்தாக்குதலில் பக்கத்து வீட்டின் கூரையின் மேல் இருந்து தலையொன்றும் மற்றும் இரண்டு கால்கள் கொண்ட உடல் பாகங்களும் மீட்கப்பட்டன. இந்த நிலையில் அடையாளம் காணாத நிலையில் மீட்கப்பட்ட தலை மற்றும் உடற்பாகங்கள் தொடர்ந்தும் மட்டு. போதனா வைத்தியசாலை உடற்கூற்று அறையில் வைக்கப்பட்டிருந்த நிலையில் இந்தத் தற்கொலைத் தாக்குதலை மேற்கொண்டவர் காத்தான்குடியைச் சேர்ந்த தற்கொலையாளியான 34 வயதுடைய முகமது நாசார் முகமது ஆசாத் என தெரியவந்தது

இதனையடுத்து இவரின் தாயாரான 54 வயதுடைய அலியார் லதீபர் பீவி விசாரணைக்காக அழைக்கப்பட்ட நிலையில் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிவானுக்கு முன்னால் குறித்த சடலத்தை தனது மகன் என அடையாளம் காட்டியதையடுத்து உயிரிழந்தவரின் தாயாரின் குருதியைப்பெற்று மரபணு பரிசோதனைக்கு உட்படுத்துமாறு நீதிவான் உத்தர விட்டிருந்தார். மரபணுச் சோதனையின்படி தாக்குதல்தாரி முகமது நாசார் முகமது ஆசாத் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)



## கொழும்பில் அடைமழை

கொழும்பில் நேற்றுமுன்தினம் மாலைமுதல் பெய்த அடைமழையால், பல வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. கொழும்பு உட்பட பல பகுதிகளில் இன்றும் மழை தொடரும் என வளிமண்டவியல் திணைக்களம் நேற்று திங்கட்கிழமை அறிவித்தது. காற்றால் மரங்கள் முறிந்து சில வீதிகள் தடைப்பட்டுள்ளன என்றும் தெரியவருகிறது. (ம)

# இஸ்லாமிய அடிப்படைவாதத்தை தோற்கடிப்பதற்காகப் புதிய சட்டம்

## விரைவில் வேண்டும் என்கிறார் அமைச்சர் சம்பிக்க ரணவக்க

கொழும்பு, ஜூன் 11

இஸ்லாமிய அடிப்படைவாதத்தைத் தோற்கடிப்பதற்கு நாட்டுக்குப் புதிய சட்டம் ஒன்று அவசியமானது என அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போதே அமைச்சர் சம்பிக்க ரணவக்க இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பயங்கரவாதம் தொடர்பான பழைய சட்டங்களின் மூலமாக புதிய பயங்கரவாதத்தை தோற்கடிக்க முடியாது.

வெளிநாட்டு இராணுவம் இலங்கைக்கு வரவுள்ளதாக ஓர் அச்சம் பரப்பப்படுகிறது.

ஆனால், அவ்வாறு எந்த ஒரு நிலையும் இல்லை என நான் பொறுப்புடன் கூறிக்கொள்கின்றேன்.



இந்தப் பயங்கரவாதமானது, 50, 60 நாடுகளுடன் பரவியுள்ளது என்பதனால், வெளிநாட்டுப் புலனாய்வுத் துறையுடனான தொடர்பு அவசியமாகிறது. எவ்வாறிருப்பினும் இலங்கையின் இறைமையை காட்டிக் கொடுத்து அந்த நடவடிக்கையை மேற்கொள்ளத் தயாரில்லை - என்றார். (ம)

# மைத்திரி - ரணிலை விமர்சிப்பது கூட்டமைப்பின் தேர்தல் நாடகம்

## முன்னணியின் க.குமார் விமர்சனம்

யாழ்ப்பாணம், ஜூன் 11

மைத்திரிரணில் அரசை இதுவரை காலமும் பாதுகாத்து தாம் பெற வேண்டியதையும் பெற்றுக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், தற்போது மைத்திரி - ரணில் அரசை விமர்சிப்பது வேடிக்கையானது. இது தேர்தல்கள் நெருங்கும் நேரத்தில் திட்டமிட்டு அரங்கேற்றப்படும் நாடகமென்பதை அனைவரும் விளங்கிக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்களுக்கான கலந்துரையாடலொன்று யாழ்ப்பாணம் வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்றது.

கலந்துரையாடல் முடிவடைந்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே கஜேந்திரகுமார் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அண்மைய நாள்களாகக் கூட்டமைப்பினர் அரசதலைவர் மற்றும் தலைமை அமைச்சர் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைத்து விமர்சனம் செய்து வருகின்றனர். அரசதலைவர் தொடர்பில் பல்வேறு கருத்துக்களைக் கூறி வருகின்றனர்.

எம்மைப் பொறுத்தவரையில் தேர்தல்கள் வரவிருப்பதால் தான் இத்தகைய செயற்பாடுகளை திட்டமிட்ட வகையில் மேற்கொள்கின்றனர்.

ஏனெனில் மைத்திரி - ரணில் அரசின் மீது நம்பிக்கையில்லை. இவர்கள் தமிழர்களுக்கு எதனையும் பெற்றுத் தர மாட்டார்கள். அவர்கள் தங்கள் பதவிக



ளுக்காகப் பயன்படுத்த முனைகின்றனர் ஆகவே நாம் எமது பிரச்சினைகள் தொடர்பில் உரிய தீர்வை அடைவதற்குரிய வழிமுறைகளை முன்னெடுக்க வேண்டும். இதனை விடுத்து வெறுமனே ஆதரவு வழங்குவதில் தமிழ் மக்களுக்கு எந்த பிரயோசனமும் இல்லை என்பதை தெட்டத் தெளிவாக சொல்லி வந்திருக்கிறோம்.

ஆனால் இந்த அரசைப் பாதுகாப்பதனையே நோக்கமாகக் கொண்டு கூட்டமைப்பினர் செயற்பட்டு வந்தனர். இதற்காக அரசு பல உதவிகளையும் இவர்களுக்குச் செய்திருக்கின்றது. தொடர்ந்தும் இவர்கள் தமக்கு உதவி செய்ய வேண்டு மென்பதற்கான செயற்பாடுகளையும் தற்போது அரசு முன்னெடுத்து வருகிறது.

கூட்டமைப்பினரின் தேர்தல் நாடகங்களை மக்கள் சரியான வகையில் புரிந்து கொண்டு செயற்பட வேண்டும் -என்றார். (த-ரி1)

# அரசுக்கு எதிராக நாளை ஜே.வி.பி. ஆர்ப்பாட்டம்



கொழும்பு, ஜூன் 11

நாட்டின் பாதுகாப்பு விடயத்தில் பொறுப்பற்று செயற்படும் அரசு பதவியில் இருப்பது, ஜனநாயகத்துக்கு ஏற்புடையதல்ல என்று வலியுறுத்தி அரசுக்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணி போராட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளது. குறித்த போராட்டம் நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளது என்று அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தொடர் குண்டுத் தாக்குதல் குறித்து முன்கூட்டியே அறிந்திருந்தும் மக்களை பாதுகாக்கத் தவறிய அரசு, தொடர்ந்து பதவியில் இருப்பது ஜனநாயகத்துக்கு விரோதமான செயற்பாடாகும். அதேபோன்று உரிய காலத்தில் நடத்த வேண்டிய தேர்தலையும் பல்வேறு காரணங்களை சுட்டிக்காட்டி அரசு பிற்போட்டு வருகின்றது. மேலும் வாழ்க்கைச் செலவு, நாளாந்தம் அதிகரித்த வண்ணமே உள்ளது. இவ்வாறு மக்களுக்கு தொடர்ந்து அதிருப்தியை ஏற்படுத்தி வரும் அரசு பதவிவிலக வேண்டுமென நாடாளுமன்றத்திலும் நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வந்தோம். இந்த நிலையில் குறித்த நம்பிக்கையில்லா பிரேரணையை மேலும் வலுவடையச் செய்வதற்காகவே குறித்த போராட்டத்தை நடத்த தீர்மானித்துள்ளோம்' - என்றார். (ம)

# கூட்டுஅரசு அமைப்பதற்கு தற்போது அவசியமில்லை

## எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 11

நாட்டில் தற்பொழுது ஏற்பட்டுள்ள அரசியல் உறுதியற்ற நிலையில் கூட்டு அரசை அமைக்கத் தேவையில்லை என்று முன்னாள் அரசதலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.


கொழும்பு ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் அவர். அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கூட்டு அரசு ஒன்றை முன்னெடுத்துச் செல்லுமாறு எனக்கு யாராவது பரிந்துரை செய்தால், அதனை நான் வன்மையாக எதிர்ப்பேன். கூட்டு



அரசுக்கு மக்கள் வழங்கிய ஆதரவு தொடர்பில் நான் நன்றாக புரிந்து வைத்துள்ளேன்.

தற்பொழுது நாட்டுக்குத் தேவைப்படுவது கூட்டு அரசு அல்ல. பொதுத் தேர்தலே. நாட்டு மக்கள் இன்று அனுபவிக்கும் துன்பத்தைப் போக்க புதிய அரசு தேவை என்பது தெளிவாகத் தெரிகின்றது - என்றார். (ம)



# விகாரைகளை தரிசிக்க தடை விதித்தமை ஏன்?

## இதுவரை தெரியவில்லை என சீண்டுகிறார் அமைச்சர் மங்கள

கொழும்பு, ஜூன் 11

எனக்கு விகாரைகளைத் தரிசிக்க தடை விதிக்கப்பட்டதற்கான தவறு என்னவென்பது தெரியாதுள்ளது. நான் கம்பஹா மாவட்டம் உட்பட நாடு முழுவதும் உள்ள விகாரைகளினதும், சமய நிலையங்களினதும் அபிவிருத்திக்காக பெருமளவிலான நிதியை ஒதுக்கியுள்ளேன் என்று தெரிவித்தார் நிதி அமைச்சர் மங்கள சமரவீர.

மாத்தறை, உயன்வத்தை விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சமுர்த்தி உதவி பெறுவோருக்கான அனுமதி அட்டைகள் விநியோகிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் விகாராதிபதிகள் உட்பட சுமார் 40க்கும் மேற்பட்ட பிக்குகள் கலந்துகொண்டுள்ளனர்.

இருப்பினும், அமைச்சர் மங்கள சமரவீர கலந்து கொண்ட நிகழ்வைப் புறக்கணித்து எந்தவொரு தேரரும் இறுதிவரை எழுந்து செல்லவில்லை.

'பிக்குகள் சிலருக்கு புத்தரின் உண்மையான பாதை தெரியவில்லை' என்று மங்கள அண்மையில் தெரிவித்த கருத்தை அடுத்து அவருக்கு பிக்குகள் பலரும் எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

அமைச்சர் மங்கள சமரவீர கலந்துகொள்ளும் எந்த வித நிகழ்விலும் தாம் கலந்து கொள்ளாதிருக்க தீர்மானித்துள்ளதாகவும், அவ்வாறு நிகழ்வுகளில் அமைச்சர் மங்கள் சமரவீர கலந்துகொண்டால் தாம் அந்த நிகழ்விலிருந்து வெளிநடப்புச் செய்வதாகவும் மாத்தறை விகாரைகளின் விகாராதிபதிகள் சங்கம் அண்மையில் தீர்மானம் நிறைவேற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# கண்டியிலிருந்து வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன

கண்டி, ஜூன் 11

கண்டி - தவுலகல - பங்கலாவத்த பகுதியில் கற்பாறை மீதிருந்து வெடிபொருள்கள் சில மீட்கப்பட்டுள்ளன.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே இவை மீட்கப்பட்டுள்ளன.

இதன்போது 127 டெட்டனேட்டர்கள் உள்ளிட்ட சில வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சம்பவம் குறித்து இதுவரையில் எந்தவொரு சந்தேக நபர்களும் கைது செய்யப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. (ம)



கோப்புப்படம்

# கதிர்காமத்தில் ஞானசாரதேரர்

கொழும்பு, ஜூன் 11

பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலர் கலகொட அத்தே ஞானசாரதேரர் நேற்றுமுன்தினம் கதிர்காமம் சென்று அங்கு வழிபாட்டில் ஈடுபட்டார்.

ஞானசார தேரருடன் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலர் தயாசிறி ஜயசேகரவும் உடன் சென்றார். ஞானசாரதேரரால் வழிபாடு மேற்கொள்ளப்பட்டது. (ம)

# தெரிவுக்குழு சாட்சியங்களிலும் பலத்த சந்தேகம் ஏற்படுகின்றது

## அமீர் அலி எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 11

பயங்கரவாத சம்பவம் தொடர்பாக ஆராய்ந்து வருகின்ற தெரிவுக்குழுவுக்கு வழங்கப்படுகின்ற சாட்சியங்களில் நிறைய மர்மங்கள் காணப்படுகின்றமையினால் வாக்குமூலங்களிலும் பலத்த சந்தேகங்கள் எழுகின்றன என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் அமீர் அலி.

பயங்கரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து நாட்டில் எழுந்துள்ள பிரச்சினைகள் குறித்து நேற்றுமுன்தினம் ஊடகமொன்றுக்கு வழங்கியுள்ள செவ்வியிலேயே அமீர் அலி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:



'ஏதோவொரு தேவைக்காகவே தொடர் குண்டுத் தாக்குதல் விலைகொடுத்து நடத்தப்பட்டுள்ளது. அதனிலும் கிறிஸ்தவ மக்களை ஏன் இலக்கு வைத்தார்கள் என்ற உண்மையான காரணத்தை கண்டறிய வேண்டும். அச்சுறுத்தல் குறித்து புலனாய்வுத் தகவல்களை பாதுகாப்புச் சபையில் தெரிவிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை.

இதேவேளை பயங்கரவாத சம்பவம் தொடர்பாக ஆராய்ந்து வருகின்ற தெரிவுக்குழுவுக்கு வழங்கப்படுகின்ற சாட்சியங்களில் நிறைய மர்மங்கள் காணப்படுகின்றன. வாக்குமூலங்களிலும் பலத்த சந்தேகங்கள் எழுந்துள்ளன. மேலும் தற்கொலை குண்டுத் தாக்குதல் விலைகொடுத்து செய்யப்பட்ட வேலைத்திட்டமாகவே கருதுகிறோம். ஆகவே தாக்குதலின் பின்னணியில் யார் இருந்தார்கள் என்பதை கண்டறிந்தால் பிரச்சினைக்கு இலகுவாக தீர்வைப் பெறமுடியும்' - என்றார். (ம)

## பதில்...

நியமிக்கப்பட்டுள்ளனர்.

பதில் அமைச்சர்கள் மூவர் நேற்று அரச தலைவர் முன்னிலையில் உறுதிமொழி எடுத்து அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக் கொண்டனர். இந்த நிகழ்வு அரச தலைவர் செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

நகர திட்டமிடல், நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர் லகீ ஜயவர்த்தன, நகரத் திட்டமிடல், நீர் வழங்கல், உயர்கல்வி பதில் கடமை புரியும் அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த அமைச்சுப் பதவியை ரவூப் ஹக்கீம் முன்னர் வகித்திருந்தார்.

கைத்தொழில், வர்த்தக அலுவல்கள் பிரதி அமைச்சர் புத்திக பத்திரன கைத்தொழில், வர்த்தக அலுவல்கள், நீண்டகாலம் இடம்பெயர்ந்தவர்களை மீள்குடியேற்றுதல், கூட்டுறவு அபிவிருத்தி, தொழிற்பயிற்சி, திறன் விருத்தி பதில் கடமை புரியும் அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த அமைச்சுப் பதவியை ரிசாத் பதியுதீன் முன்னர் வகித்திருந்தார்.

பெற்றோலிய வள அபிவிருத்தி பிரதி அமைச்சர் அனோமா கமகே, நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி, பெற்றோலிய வள அபிவிருத்தி பதில் கடமை புரியும் அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த அமைச்சுப் பதவியை கபீர் ஹாசீம் முன்னர் வகித்திருந்தார்.

கடந்த ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி நாட்டில் நடைபெற்ற பயங்கவாதத் தாக்குதல்களுடன் முஸ்லிம் தலைவர்கள் சிலருக்குத் தொடர்பு உள்ளது என்று குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. அமைச்சராகப் பதவி வகித்த ரிசாத் பதியுதீனும், ஆளுநர்களாகப் பதவி வகித்த அசாத் சாலி மற்றும் ஹிஸ்புல்லா ஆகியோர் பதவிகளை விட்டு விலக வேண்டும் என்று அழுத்தம் கொடுக்கப்பட்டது. இந்தக் கோரிக்கையை முன்வைத்து நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரெலிய ரத்ன தேரர் கண்டியில் பட்டினிப் போராட்டம் ஒன்றையும் ஆரம்பித்திருந்தார்.

இதனை அடுத்து அரசில் அமைச்சுப் பதவிகளை வகித்த அனைத்து முஸ்லிம் தலைவர்களும் தமது அமைச்சுப் பதவிகளில் இருந்து விலகுகின்றோம் என்று கடந்த 3ஆம் திகதி அறிவித்தனர். அமைச்சர்களான கபீர் ஹாசிம், ரவூப் ஹக்கீம், எம்.எச்.ஏ.ஹலீம், ரிசாட் பதியுதீன் ஆகியோரும், இராஜாங்க அமைச்சர்களான பைஸல் காசிம், எச்.எம்.எம்.ஹரீஸ், அமீர் அலி, அலி ஸாஹிர் மௌலானா ஆகியோரும், பிரதி அமைச்சரான அப்துல்லா மஹரூப்பும் தமது பதவிகளில் இருந்து விலகியிருந்தனர். (எ-22,7)

## அவசரகால...

முன்னிலையாகியிருந்தார்.

இந்த மனு உயர் நீதிமன்ற நீதியரசர்களான எஸ்.பிரசன்ன, ஜயவர்தன, மார்டு என்.பி. பெர்னாண்டோ, எஸ். துரைராஜா ஆகியோர் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

அவசரகாலச் சட்டத்தை முழுமையாக சவாலுக்கு உட்படுத்தவில்லை. அதில் உள்ள 6 விதிகளையே சவாலுக்கு உட்படுத்தியுள்ளோம். குறிப்பாக இறந்த உடல்களை விசாரணைகளின்றி புதைத்தல், ஓராண்டுக்கு நீதிமன்ற மேற்பார்வையின்றி தடுத்து வைத்தல் உள்ளிட்ட விதிகளையே சவாலுக்கு உட்படுத்தியுள்ளோம் என்று மன்றில் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். மேலதிக சொலிசிட்டர் ஜெனரல், இது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலரிடம் ஆலோசனை பெறவேண்டும் என்று தெரிவித்தார்.

இதற்கு அமைவாக வழக்கு அடுத்த மாதம் 5ஆம் திகதி வரையில் ஒத்திவைக்கப்பட்டது.

வெளிநாட்டுத் தூதுவர்களுடனான சந்திப்பில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, அவசரகாலச் சட்டம் நீடிக்கப்பட மாட்டாது என்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

## அமைச்சரவைக்...

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்று கொழும்பு அரசியல் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த நிலமையால் கொழும்பு அரசியலில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. (எ)

## மைத்திரியை...

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் ஏற்கனவே திட்டமிட்டபடி தெரிவுக் குழு அமர்வு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மேல்மாகாண ஆளுநர் அஸாத் சாலி மற்றும் காத்தான்குடி பள்ளிவாசல்களின் சம்மேளனப் பிரதிநிதிகள் ஆகியோர் தெரிவுக்குழு முன்னிலையில் இன்று சாட்சியமளிக்கவுள்ளனர்.

அதேவேளை, பாதுகாப்புத்துறையைச் சேர்ந்த அதிகாரிகள் இருவர் விரைவில் சாட்சியமளிக்கத் தெரிவுக்குழுவால் அழைக்கப்படவுள்ளனர்.

இந்தத் தெரிவுக் குழு தொடர்பாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கடும் அதிருப்தி தெரிவித்திருந்தார். நாடாளுமன்றத் தெரிவுக் குழு மூலம் பாதுகாப்புத் தரப்பின் தகவல்கள் பகிரங்கப்படுத்தப்படுகின்றன என்றும், தவறுகளைத் தன்மீது சுமத்த முயல்கின்றனர் என்றும் அவர் குற்றஞ்சாட்டி வருகின்றார். கடந்த வெள்ளிக்கிழமை இரவு சிறப்பு அமைச்சரவைக் கூட்டத்தைக் கூட்டியிருந்த அரச தலைவர், நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்குப் புலனாய்வுத் துறை மற்றும் பாதுகாப்பு உயர் அதிகாரிகள் இனிச் சாட்சியமளிக்க மாட்டார்கள் என்று தெரிவித்திருந்தார்.

பாதுகாப்பு அதிகாரிகள் எவரையும் இனித் தெரிவுக் குழுவில் முன்னிலையாக வேண்டாம் என்று தான் உத்தரவிட்டுள்ளதாகவும் கூறியிருந்தார்.

தெரிவுக் குழுவை இரத்துச் செய்வதா இல்லையா? என்பதை அமைச்சரவை முடிவு செய்ய வேண்டும் என்றும், தெரிவுக் குழு இரத்துச்செய்யப்படும்வரை அமைச்சரவை கூட்டப்படாது என்று தெரிவித்ததுடன், கோபத்துடன் அமைச்சரவைக் கூட்டத்தில் இருந்து வெளியேறினார் என்றும் அறிய முடிந்தது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் கோரிக்கையைப் புறந்தள்ளி இன்று தெரிவுக் குழு அமர்வுகள் நடைபெறவுள்ளன. இதனால் அரசியல் நெருக்கடி ஏற்படும் நிலமை தோன்றியுள்ளது என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்துள்ளன. (எ-22)

## மைத்திரியுடைய...

ஏற்றுக்கொண்டு அவற்றை திருத்திக் கொள்ள வேண்டிய அரச தலைவரின் தற்போதைய நடவடிக்கைகள் கவலையளிக்கின்றன என்று மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியின் கொழும்பு அலுவலகத்தில் நேற்று நடத்தப்பட்ட ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்த் அந்தக் கட்சியின் பொதுச் செயலர் ரில்வின் சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

தாக்குதல் தொடர்பாக விசாரணை நடத்த நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை நீக்குவதற்கு அரச தலைவர் முயற்சி செய்கிறார்.

பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள தவறியதற்கு யார் பொறுப்பு என்று தெரிந்து கொள்வதற்கு மக்களுக்கு உரிமையுண்டு. அரச தலைவரின் இந்த நடவடிக்கையால் இந்த விடயம் தொடர்பாக தகவலைப் பெற்றுக்கொள்ளும் மக்களின் உரிமை மீறப்பட்டுள்ளது. அவர் செய்ய வேண்டியது என்னவென்றால் அவரின் குறைபாடுகளை ஒப்புக்கொள்வதோடு, அவற்றை திருத்திக் கொள்வதுதாகும். நாடாளுமன்ற தெரிவுக் குழுவில் கலந்துகொள்ளாததன் மூலம் மகிந்த தரப்பினரும் அரச தலைவரின் நடவடிக்கைகளை ஆதரிக்கின்றது என்றே கருத முடிகின்றது. இந்த விடயங்களுக்கு முழுப்பொறுக் கூற வேண்டிய அரச தலைவர் ஊடகங்களுக்கு முன்பாக தகவல்களை வெளிப்படுத்துவதை தடுக்கும் முயற்சியானது கவலையளிக்கின்றது - என்றார். (எ)

## சு.கவுடன்...

களமிறக்கப்படுவார்கள் என்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

நேற்றுக் கொழும்பில் ஊடகங்களுக்குக் கருததுத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

பரந்துப்பட்ட கூட்டணியமைத்தல் தொடர்பில் இரு தரப்பிலும் தொடர்ந்து பேச்சு இடம் பெற்று வருகின்றது. பேச்சில் சுதந்திர கட்சியினர் இணக்கமாகச் செயற்படுகின்றனர். பின்ன பொது இடங்களிலும், ஊடகங்களிலும் முரண்பாடுகளை தோற்றுவிக்கும் கருத்துக்களை தெரிவித்துவருகின்றனர்.

கூட்டணி விவகாரத்தில் இவர்கள் முழு ஒத்துழைப்புடன் செயற்படவில்லை. இரு தலைவர்களின் அரசியல் நோக்கங்களையும் நிறைவேற்றவே நாம் கூட்டணி அமைப்பதற்கு ஆரம்பத்தில் இணக்கம் தெரிவித்தோம். ஆனால் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன ஒருபோதும் எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்சவுடன் இணையப் போவதில்லை என்று குறிப்பிட்டுள்ளமை, அண்மைய கருத்துக்கள் அவர்களின் அரசியல் எதிர்பார்ப்புக்களை தெளிவுப்படுத்தியுள்ளது.

அவர்களின் முடிவு எந்த விதத்திலும் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணிக்குப் பாதிப்பை ஏற்படுத்தாது. நாங்கள் சுதந்திர கட்சியுடன் பரந்துப்பட்ட கூட்டணி அமைத்துத்தான் உத்தேசிக்கப்பட்டுள்ள தேர்தல்களில் வெற்றிபெற வேண்டும் என்ற தேவை எமக்கு கிடையாது - என்றார். (எ)

## பெற்றோல்...

இந்த விலை அதிகரிப்பு நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் என்றும், ஏனைய எரிபொருள்களின் விலைகளில் மாற்றம் இல்லை என்றும் நிதி அமைச்சு அறிவித்துள்ளது. (எ)

## இந்தியாவின்....

திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

கொக்குவிலில் உள்ள அவரது கட்சி அலுவலகத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாங்கள் இணைந்து செயற்படத் தயார். ஆனால் எம்மைச் சேர்க்க வேண்டாம் என்று இந்தியா கூறியுள்ளதாம். எமது கட்சியின் செயலார் செ.கஜேந்திரனிடமும், தேசிய அமைப்பாளர் வி.மணிவண்ணனிடமும் சி.வி.விக்னேஸ்வரன் நேரடியாகவே கேட்டுள்ளார். ஏன் உங்களுடன் இந்தியா கோவிக்கின்றது? எதிரியாகப் பார்க்கின்றது? -என்றார்.

நாம் ஒருநாளும் இந்தியாவை எதிரியாகப் பார்க்கவில்லை. இந்தியா தமிழர் அரசியலை தமது தேவைக்காகப் பயன்படுத்துகின்றது. அது இந்தியாவின் பிழையில்லை. இந்தியா ஒரு வல்லரசு அவ்வாறுதான் நடக்கும். தனது நலன் பற்றியே சிந்திக்கும். எதிர்காலத்தில் தமிழ் தேசம் தனிநாடாகப் போனால் தமிழீழமும் தமிழர் நலன் தொடர்பாகவே சிந்திக்கும்.

இங்கு பிழை என்னவெனில் மக்களின் வாக்குகளைப் பெற்றுச் செல்லும் பிரதிநிதிகள் என்ன செய்கின்றார்கள்? எமக்காக இந்தியாவுடன் பேசுகின்றனரா? அல்லது இந்தியா விரும்புவதை எமது மக்களிடம் ஏமாற்றித் திணிக்கப் போகிறார்கள்? இதுதான் பிரச்சினை.

நாம் இந்தியாவின் எடுபிடிகளாகச் செயற்படுவதற்குத் தயார் இல்லை. எமது மக்களின் நலன்களை மையப்படுத்தி இந்தியாவுடன் பேசி ஒரு புள்ளியில் சந்திக்கவே விரும்புகின்றோம். அது இந்தியாவுக்கு இடையூறாக இருந்திருக்கலாம். ஆனால் விக்னேஸ்வரனுக்கு இருக்க வேண்டிய கேள்வி தனக்கு வாக்களிக்கும் மக்களின் நலன்கள் தொடர்பில் எவ்வாறு செயற்படப் போகின்றார் என்பதே.

விக்னேஸ்வரன் இந்தியாவின் முகவர் என்ற முடிவுக்கு வரவில்லை. ஆனால் அவரைச் சுற்றி இருப்பவர்கள் அவரை முற்றுமுழுதாகப் பிழையான வழியில் நடத்திச் செல்கின்றனர் என்பதில் எமக்கு எந்தச் சந்தேகமும் இல்லை. எம்மைப் பொறுத்தவரையில் இந்தியா விரும்புவோரை சேர்த்துக் கொள்ளும் முடிவுக்கு அவர் வந்துள்ளார் என்றே கருத முடியும்.

### கூட்டமைப்பு மீது குற்றச்சாட்டு

இந்தியாவின் தலைமை அமைச்சருடன் பேசக் கிடைத்த அரிய நிமிடங்களைக் கூட்டமைப்பு வீணடித்துள்ளது. மக்களின் அபிலாசைகளைப் பற்றிப் பேசாது மக்கள் புறக்கணித்த 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து நாம் வெளியேறக் காரணம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு- கிழக்கு தமிழ் தேசத்தின் தனித்துவமான இறைமை, சுயநிர்ணயம் போன்ற அடிப்படைக் கோட்பாடுகள் என்பவற்றைக் கைவிட்டு, ஒற்றை ஆட்சிக்குள் இருக்கக் கூடிய 13ஆம் திருத்தத்தை ஏற்றமையாகும்.

தற்போது 10 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், நேற்றுமுன்தினம் இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி இலங்கை வந்தபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவரைச் சந்தித்தது. இந்தச் சந்திப்புக் குறுகிய நேரமே வழங்கப்பட்டிருந்தது. அந்தக் குறுகிய நேரத்தில் கூட்டமைப்பு என்ன பேசப் போகின்றது என்பது முக்கியமானது. தமிழ் மக்கள் அவர்களுக்கு ஆணை வழங்கியமை தமிழ்த் தேசத்தின் அங்கீகாரம், சுயநிர்ணய அடிப்படையில் கூட்டாட்சித் தீர்வு என்பதே. இந்தியா தமிழர்களைப் பொறுத்தவரையில் முக்கியமான நாடு. அந்த நாட்டின் தலைமை அமைச்சர் இரண்டாவது தேர்தல் வெற்றிக்குப் பின்னர் வருகின்றபோதும் மிகத் தெளிவான செய்தியைக் கூட்டமைப்பு அவருக்கு வழங்கியிருக்க வேண்டும். ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 13ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது.

தமிழ் மக்கள் நிராகரிக்கும் 13ஆவது திருத்தத்தை எமது தலைவர்கள் வெளிநாட்டில் இருந்து வரும் தலைவர் ஒருவரிடம் வலியுறுத்துகின்றார்கள். மக்களை ஏமாற்றவே அவர்கள் கருத்துக்கள் கூறுகின்றனரே தவிர, உண்மையாக நடந்து கொள்ளவில்லை. இந்த விடயத்தை மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். நாம் பழக்கப்பட்ட சின்னங்களுக்காகவோ, தேசியக் தலைவர் காட்டிச் சென்ற அமைப்பு என்பதற்காகவோ ஏமாற்றப்பட்டு, முடக்கப்பட்டு இருக்க முடியாது. மக்கள் நடப்பவற்றை விளங்கிச் செயற்பட வேண்டும்.

### முகவர் அமைப்பாக மாறுகிறது பேரவை

நாம் தமிழ் மக்கள் பேரவையில் இருந்து விலகவில்லை. நாம்தான் அதன் தீர்வுத் திட்டத்தை தயாரித்தோம். நாம் சிரமப்பட்டுச் செய்த விடயங்களைக் கைவிடத் தயாரில்லை. நாங்கள் தமிழ் மக்கள் பேரவையின் கூட்டங்களில் பங்கு கொள்வதையே நிறுத்தியுள்ளோம்.

அதற்குக் காரணம் தமிழ் மக்கள் பேரவை படிப்படியாக முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் அரசியலுக்காக, அவரது கட்சிகான முகவர் அமைப்பாக மாற்றப்பட்டமையே. தமிழ் மக்கள் பேரவையில் மிகச் சிறந்த, மதிக்கப்படுகின்ற பலர் உள்ளனர். தமிழினம் துன்பப்பட்டபோது பாடுபட்ட பலர் உள்ளனர். அவர்களின் பங்களிப்புகளையும், பெயர்களையும் உதாசீனம் செய்யும் வகையிலேயே இந்தச் செயற்பாடுகள் அமைகின்றன.

எமது கட்சி உறுப்பினர்கள் தமது கட்சியில் இணைய வேண்டும் என்று விக்னேஸ்வரன் கேட்டுள்ளார். ஏனையோரைப் பலவீனப்படுத்தி ஏனைய தரப்புக்களை உடைத்து எடுக்கின்ற நடவடிக்கையே இது. இந்தகைய செயற்பாடுகள் ஏற்றுக் கொள்ள முடியாதவை. (எ-21,26)

## தமிழகம்....

யாடியுள்ளார்.

சென்னையில் நிகழ்வொன்றில் கலந்துகொள்ளச் சென்றிருந்த அவர் மு.க.ஸ்டாலினை அவரது இல்லத்தில் சென்று சந்தித்துள்ளார். அண்மையில் நடந்த இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் அமோக வெற்றியீட்டியமைக்கு அவர், மு.க.ஸ்டாலினுக்குத் தனது வாழ்த்தைத் தெரிவித்ததுடன், பொன்னாடை போர்த்தி மதிப்பளித்துள்ளார்.

இலங்கையில் முஸ்லிம் மக்கள் அண்மைக்காலமாக எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சுப் பதவிகளைத் துறந்தமை தொடர்பிலும் ஸ்டாலினிடம் ஹக்கீம் விளக்கியுள்ளார்

சந்திப்பின் பின்னர் அவர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோது தெரிவித்ததாவது;

சட்டத்தை மீறி நடப்பவர்களை இலங்கை அரசு கண்டிக்கத் தவறியதே அண்மையில் நடைபெற்ற குண்டுவெடிப்பு தாக்குதல்களுக்கு காரணம். இந்த ஆண்டு இறுதியில் இலங்கையில் அரச தலைவர் தேர்தல் நடைபெறவுள்ளது. அந்த தேர்தல் மிக முக்கியமான தீர்மானமிக்க தேர்தலாக அமையவுள்ளது. இந்த தேர்தலில் தமிழ் பேசும் மக்கள் எவ்வாறான தீர்மானத்தை எடுக்கப் போகின்றார்கள் என்பதை பொறுத்தே அரச தலைவர் தேர்தல் முடிவுகள் நிச்சயிக்கப்படும் என்னும் நிலமை உள்ளது. இதன் பின்னணியில் அண்மையில் நடைபெற்ற தாக்குதல் சம்பவங்கள் மற்றும் தற்போது இலங்கையில் முன்னெடுக்கப்படுகின்ற பெரும்பான்மை தீவிரவாதம் குறித்துச் சந்திப்பில் கலந்துரையாடினோம். என்றார்.

இதேவேளை, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜாவும் கடந்த வாரம் தி.மு.க. தலைவர் ஸ்டாலினை நேரில் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார். (எ-22)

# சீனாவை எதிர்த்து வீதியில் திரண்டு ஹொங்கொங் மக்கள் பெரும் போராட்டம்






ஹொங்கொங்.ஜூன் 11
சீனாவின் சுயாட்சிப் பிரதேசமான ஹொங்கொங்கில் இருந்து கைதிகளைச் சீனாவுக்கு நாடு கடத்த வகை செய்யும் சட்டத் திருத்தத்துக்கான ஏற்பாடுகள் ஹொங்கொங்கின் நாடாளுமன்றில் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்துப் பல்லாயிரக்கணக்கான மக்கள் ஹொங்கொங் வீதிகளில் திரண்டு பெரும் போராட்டம் நடத்தினர்.
ஹொங்கொங்கில் குற்றவியல் வழக்குகளில் கைதுசெய்யப்படுபவர்களைச் சீனாவுக்கு நாடு கடத்தி, வழக்கு விசாரணையைச் சந்திக்க வைக்க ஏதுவாகக் கைதிகள் பரிமாற்றச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவதற்குக் ஹொங்கொங் நிர்வாகம் முடிவு செய்தது. இது தொடர்பாகக் ஹொங்கொங் நரடாளுமன்றில் கடந்த மாதம் நடந்த விவாதம் வன்முறையில் முடிந்தது.
ஆனால் இந்தச் சட்டத் திருத்தத்துக்கு ஒப்புதல் பெற்று விட வேண்டும் என்பதில் ஹொங்கொங் நிர்வாகத் தலைவர் கேரிலாம் உறுதியாக உள்ளார். நாளை இது வாக்கெடுப்புக்கு விடப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இது வாக்கெடுப்பில் வெற்றிபெறும் பட்சத்தில் சீனாவின் பலத்த குறைபாடுள்ள நீதி அமைப்பின்கீழ் ஹொங்கொங் தள்ளப்படும் நிலை உருவாகும். கூடவே ஹொங்கொங் நீதித் துறையின் சுதந்திரம் மேலும் கெட்டுப்போகும் என்று கூறிக் ஹொங்கொங் மக்களில் பல்லாயிரக்கணக்கானவர்கள் அந்தச் சட்டத் திருத்தத்துக்கு எதிராக வீதிகளில் திரண்டு பெரும் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டத்தல் ஹொங்கொங் முழுதும் முடங்கியது.


**பின்னணி**
சீனா, பிரிட்டனின் பிடிக்குள் சிக்காத நிலையில், பிரிட்டனின் ஆதிக்கத்தில் இருந்தது ஹொங்கொங்.
பிரிட்டனிடமிருந்து விடுபட்டதும், அது 1997ஆம் ஆண்டு சீனாவின் சிறப்பு நிர்வாகப் பகுதிகளில் ஒன்றாக மாறியது. சீனாவின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது.
ஆனாலும் தன்னாட்சிப் பிரதேசமாகவே உள்ளது. இந்த நிலையிலேயே கைதிகள் பரிமாற்ற விடயத்தைச் சீனாவின் அதிகாரத்துக்கு மாற்றுகின்ற சட்டத்திருத்தம் குறித்த பேச்சுக்கள் எழுந்தன.
அதற்குக் ஹொங்கொங் தரப்பில் எதிர்ப்புத் தெரிவிக்கப்படுகிறது.



# அமெரிக்கா - ஈரான் விவகாரம் கைகோர்க்கச் சொல்கிறது கட்டார்



லண்டன். ஜூன் 11
அமெரிக்காவுக்கும், ஈரானுக்கும் இடையிலான முறுகல் நிலை தொடரக்கூடாது என்றும் இந்த இரண்டு நாடுகளும் பேச்சுக்களின் மூலம் தங்கள் பிரச்சினைக்கு முடிவைக் காணவேண்டும் என்றும் கட்டார் நாட்டின் அயலுறவு அமைச்சர் சேக் மொகமட் பின் அப்துல்ரகுமான் அல்தாலி கூறினார்.
பிரிட்டனின் தலைநகர் லண்டனில் கடந்த ஞாயிறு நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். கட்டார் மட்டுமல்ல ஓமான், ஈராக், ஜப்பான் ஆகிய நாடுகளும் இதையே விரும்புகின்றன என்று கூறிய அவர்,
இந்த இரண்டு நாடுகளுக்கும் இடையில் போர் மூண்டால், அது அந்த நாடுகளை மட்டும் பாதிப்பதுடன் நின்றுவிடாது. முழு உலகையும் ஏதாவது ஒரு வகையில் பாதிக்கும் என்றார்.




# சூரியனில் இருந்து கரும்புள்ளிகள் மறைகின்றன சக்தி வெளியேறிப் பாதிப்புகள் ஏற்பட வாய்ப்பு

நாசா தெரிவிப்பு

நியூயோர்க்.ஜூன் 11
தெடர்ச்சியாக 16 நாள்கள் வரையில் எதுவித கரும் புள்ளிகளும் இல்லாத நிலை சூரியனில் தோன்றினால், அது சூரியனிலிருந்து சக்தி வெளிப்பாடு ஆரம்பமாகியுள்ளமைமையைக் குறிக்கும் எனச் சுட்டிக் காட்டுகின்றனர் நாசா விஞ்ஞானிகள்.
11 வருடங்களுக்கு ஒரு முறை இடம்பெறும் இந்த நிகழ்வு தற்போது ஆரம்பமாகியுள்ளதாக அந்த விஞ்ஞானிகள் மேலும் தெரிவித்தனர். சூரியனின் இந்தச் சக்தி வெளியேற்றத்தால் விண்வெளியில் பல மாற்றங்கள் நிகழும். அதன்படி விண்வெளியில் பயணிக்கின்ற செய்மதிகளும் வானூர்திகளும் இதனால் பாதிப்படையும் என்று பூமியில் மின்சாரத்தின் செயற்பாடுகளுக்கும் இந்தச் சக்தி வெளியேற்றம் பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் நாசா விஞ்ஞானிகள் மேலும் தெரிவித்தனர்.

# அகதிகளைக் கட்டுப்படுத்த முன்வந்தது மெக்சிக்கோ அதன் மீதான வரித் தடையை நீக்கியது அமெரிக்கா



வோஷிங்டன்.ஜூன் 11
அமெரிக்காவுக்குள் சட்ட விரோதமாக நுழைகின்ற அகதிகள் தொடர்பாக மெக்சிக்கோவுக்கும், அமெரிக்காவுக்கும் இடையில் ஒரு தீர்க்கமான முடிவு எட்டப்பட்டுள்ளதாகப் பன்னாட்டு ஊடகங்கள் சுட்டிக்காட்டின. மெக்சிக்கோவிலிருந்து இறக்குமதி செய்கின்ற சகல பொருள்களுக்கும் 5 வீத வரி உயர்வு விதிப்பதாக அதிரடியாக அறிவித்தார் அமெரிக்கா அதிபர் ட்ரம்ப். இதன் எதிரொலியாக மெக்சிக்கோவின் அயலுறவு, அமைச்சர் மார்சலோ ஏப்ராட் தனது குழுவினருடன் வோஷிங்டனில் அமெரிக்க அரச அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினார். அதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத்தெரிவித்த அவர் ' இந்த விடயத்தில் ஒரு சுமூகமான தீர்வு எட்டப்பட்டுள்ளது. மெக்சிக்கேவின் தென்பகுதி எல்லையான கவுதமாலாவின் எல்லைப்பகுதியில் பாதுகாப்பை அதிகரித்து அதனூடனாக அகதிகள் அமெரிக்காவுக்குள் நுழைவதை நிறுத்துவதாக நாங்கள் ஒப்புக் கொண்டுள்ளோம்' என்றார். அதன் பின்னர் ட்ரம்ப் தனது கீச்சகத்தில், 'மெக்சிக்கோ மீது விதிக்கப்பட்ட சகல வரிகளையும் கால வரையின்றி நீக்கியுள்ளேன்' எனப் பதிவிட்டார். தனது நாட்டிலிருந்து வெளியேறி அமெரிக்காவுக்குள் நுழைகின்ற அகதிகளை மெக்சிக்கோ கட்டுப்படுத்த முன் வந்துள்ளதால் மெக்சிக்கோவின் இந்தச் செயலுக்குச் சலுகையளிக்கும் விதமாக அமெரிக்கா அதன் மீதான வரித் தடைகளை நீக்கியுள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

**பின்னணி**
மெக்சிக்கோவின் எல்லை ஊடாக சட்டவிரோதமாக அமெரிக்காவுக்குள் நுழைபவர்களின் தொகை அதிகரித்து வருகிறது. இது அமெரிக்க அதிபர் ட்ரம்ப்புக்குப் பெரும் பிரச்சனையாகிவிட்டது. அவர் தேர்தலில் போட்டியிட்டபோது இந்த எல்லை மீறும் குடி யேற்றத்தை நிறுத்துவேன் என்று கூறியிருந்தார். தேர்தல் பரப்புரையின்போது ட்ரம்ப் முன் வைத்த வாக்குறுதிகளில் இதுவும் ஒன்றாகும்.
இதனால் அகதிகள் நுழைவதைத் தடுப்பதற்காக அமெரிக்கா-மெக்சிக்கோவின் எல்லையில் சுவர் கட்டுவதற்குத் திட்டமிட்டார். ஆயினும் இதற்கான முழுமையான நிதியை ஒதுக்குவதற்கு அமெரிக்க அமைச்சரவை அங்கீகாரம் அளிக்கவில்லை. இந்த நிலையில் விரைவில் அமெரிக்காவில் அடுத்த அதிபருக்கான தேர்தல் இடம்பெறவுள்ளது. அந்தத் தேர்தலில் போட்டியிட எண்ணியிருக்கும் ட்ரம்ப்புக்கு இந்த விவகாரம் ஒரு சவாலாக இருக்கும் என்று குறிப்பிடப்படுகிறது.







லண்டனில் புதிய முறையில் கட்டப்படவிருக்கிற நீச்சல் தடாகம் ஒன்று பேசுபொருளாகியுள்ளது. 55மாடிகளைக் கொண்டமைய விருப்பதாக விளம்பரப்படுத்தப்பட்ட தனியார் நிறுவனக் கட்டடம் ஒன்றின் உச்சியில் 6இலட்சம் லீற்றர் தண்ணீர் கொள்ளத்தக்க விதத்தில் இந்த நீச்சல் தடாகம் அமைகிறது. 220 மீற்றர் உயரமான குறித்த கட்டடத்தின் உச்சியில் முற்றிலும் கண்ணாடியால் அமையும் இந்த நீச்சல் தாடாகத்தில் நீராடுபவர்களுக்கு 360 டிகிரி கோணத்தில் நீராடுவதைப்போன்ற அனுபவம் கிடைக்கும் என்றும், வானில் மிதந்தவாறு லண்டன் நகரின் அழகை இரசித்துக் கொண்டு குளிக்க முடியம் என்றும் கூறுகிறார் இதை வடிவமை கட்டட நிபுணர்.

## 84 லட்சத்துக்கு ஏலம்போன துரியன் பழம்

பாங்கொக், ஜுன் 11
தாய்லாந்தில் நடைபெற்ற பழங்களின் ஏல விற்பனை ஒன்றில் பழங்களின் அரசன் என்றழைக்கப்படும் துரியன் பழம் (துரியான், முள்நாறி என்றும் அழைக்கப்படுகிறது) 84 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போயுள்ளது.

ஆசியநாடுகளில் போட்டிமிக்க சந்தையைக் கொண்டுள்ள துரியன் பழங்கள் அவற்றின் வாசனை காரணமாகப் பொதுப்போக்குவரத்து, உணவகங்கள், வானூர்திகளில் எடுத்துச் செல்வது தடை செய்யப்பட்டிருக்கின்றது. இந்த நிலையிலேயே தாய்லாந்தில் நடைபெற்ற 'கிங் ஒவ் துரியன் பெஸ்டிவல்' எனும் நிகழ்வின் ஒருபகுதியாக நடத்தப்பட்ட இந்த ஏலத்தில், மரத்திலிருந்து பறிக்கப்பட்டு ஒரே நாளான குறித்த துரியன் பழம் 84 லட்சம் ரூபாய்க்கு விற்பனையாகியுள்ளது.



## நாடக எழுத்தாளரும் திரைக் கலைஞருமான கிரிஷ் கர்னாட் மறைவு



புதுடெல்லி, ஜுன் 11
தென்னிந்திய எழுத்தாளரும், நாடக, திரைப்படக் கலைஞருமான கிரிஷ் கர்னாட் நேற்றுக் காலமானார். அவருக்கு வயது 81.

நடிகர், இயக்குநர், எழுத்தாளர் என நாடக, திரைப்பட உலகில் முத்திரை பதித்த அவர், உடல்நலக்குறைவால் இயற்கை எய்தினார். அவரது மறைவுக்கு திரைப்படப் பிரபலங்கள், கலைஞர்கள், பல்வேறுதுறைசார்ந்தவர்கள் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

கர்நாடகாவைச்சேர்ந்த கன்னடமொழி எழுத்தாளரான இவர் பிரித்தானியாவின் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்றபோது 'யாயதி' என்கிற நாடகத்தை எழுதினார். அந்த நாடகத்துக்கு பெரும் வரவேற்பு கிடைத்தது. 40 ஆண்டுகளாக நாடகங்களை இயக்கி வந்த இவர் 1970 ஆம் ஆண்டு 'சம்ஸ்காரா' என்கிற கன்னடத் திரைப்படத்துக்குத் திரைக்கதை எழுதினார். தமிழில் 'காதலன்', 'ரட்சகன்', 'ஹேராம்', '24' ஆகிய படங்களில் குணச்சித்ர, வில்லன் கதாபாத்திரங்களில் நடித்தார். கன்னடத்திற்கான ஞானபீட விருது பெற்ற ஏழு நபர்களில் இவரும் ஒருவர். பத்மஸ்ரீ, பத்ம பூஷண் போன்ற விருதுகளும் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பேருந்தில் பயணித்த பெண்கள் மீது லண்டனில் இளைஞர்கள் தாக்குதல்

### தன்பாலின உறவில் ஈடுபடும் பெண்கள் என்று தெரிவிப்பு

லண்டன், ஜுன் 11
பிரிட்டனின் தலைநகர் லண்டனில் பேருந்து ஒன்றில் பயணம் செய்து கொண்டிருந்த பெண்கள் இருவர் இளைஞர்கள் சிலரால் தாக்கப்பட்டனர். ஒருவரை ஒருவர் முத்தமிடச் சொல்லி வற்புறுத்திய இளைஞர்கள் அதன் பின்னர் அந்தப் பெண்களைச் சராமாரியாகத் தாக்கினர். இந்தச் சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் என்ற சந்தேகத்தின்பேரில் 15 முதல் 18 வயதுக்குட்பட்ட ஐந்து இளைஞர்களை லண்டன் பொலிஸார் கைது செய்தனர்.

கடந்த 30ஆம் திகதியன்று இரவு லண்டன் நகரில் பேருந்து ஒன்றின் மேல் தட்டில் பயணித்துக் கொண்டிருந்தபோது, தன் மீதும் தனது இணையான கிறிஸ் மீதும் இந்த இளைஞர்கள் தாக்குதல் நடத்தியதாகத் தாக்கப்பட்டவர்களில் ஒருவரான மெலானியா கெய்மோனட் (வயது -28) என்பவர் தெரிவித்தார்.



இந்தப் பெண்கள் இருவரும் ஒருபாலுறவு இணையினர் என்பதைத் தெரிந்துகொண்ட அந்தப் பதின்மவயது இளைஞர் குழுவினர், இவர்களை நோக்கிப் பாலியல் ரீதியாகக் கொச்சைப்படுத்தும் சைகைகளைக் காண்பித்ததுடன், தாக்கியும் இருக்கின்றனர் என்று இதுகுறித்த விசாரணைகளை முன்னெடுத்து வருகின்ற லண்டன் பொலிஸார் தெரிவித்தனர். இந்தப் பெண்கள் தாக்கப்பட்டமைக்குப் பலரும் தமது எதிர்ப்புகளை வெளிப்படுத்தி வருகின்றனர்.

## இன்றைய நாள்

**மேடம்:** சுற்றுப்புறச் சூழ்நிலை தொந்தரவு தரலாம். பின்விளைவு உணர்ந்து செயல்படுவது நல்லது. உடன்பிறந்தோர் உதவிகரமாக நடந்து கொள்வர். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும்.

**இடபம்:** சிலர் உங்களிடம் உதவி கேட்பர். இயன்ற அளவில் உதவி புரிந்து நற்பெயரை பாதுகாத்திடுவீர்கள். தொழில், வியாபாரம் செழிக்க கூடுதல் உழைப்பு அவசியம். நிலுவைப்பணம் வந்து சேரும்.

**மிதுனம்:** கடந்த நாள்களில் இருந்த சிரமம் விலகும். செயல்களில் உத்வேகமுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப்பணி இனிதே நிறைவேறும்.

**கடகம்:** எதார்த்தமாகப் பழகுவீர்கள். நண்பரின் கருத்தை விமர்சிக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலமான விடயங்களை பாதுகாக்க வேண்டும். பெண்கள் தாய் வீட்டு உதவி கிடைக்கும்.

**சிம்மம்:** சந்தோஷ எண்ணங்களால் உற்சாகம் பெறுவீர்கள். பிறருக்கு இயன்ற அளவில் உதவுவீர்கள். தொழில், வியாபாரம் செழிக்கப் புதிய அனுகூலம் உருவாகும்.

**கன்னி:** குடும்ப விடயம் பிறரிடம் பேச வேண்டாம். தெய்வ நம்பிக்கையுடன் செயல்படுவது நன்மை தரும். தொழில், வியாபாரத்தில் சிரமம் ஓரளவு குறையும். அளவான பணவரவு கிடைக்கும்.. ரான ஓய்வு உடல்நலம் பாதுகாக்கும்.

**துலாம்:** சமூகப்பணியில் ஆர்வம் கொள்வீர்கள். செயல்களில் உங்களின் தனித்திறமை வெளிப்படும். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டி குறையும். நிலுவைப் பணம் வசூலாகும்.

**விருச்சிகம்:** நண்பரின் மனம் நிறைந்த வாழ்த்து கிடைக்கும். செயல்களை எளிதாக நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் கூடுதல் வளர்ச்சி ஏற்படும். தாராள பணவரவு உண்டு.

**தனுசு:** உங்களின் தன்மானத்து சோதனை வரலாம்; மனஅமைதியை பாதுகாப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் இடையூறுகளைச் சரி செய்வீர்கள்.

**மகரம்:** சிலர் உங்களை ஒரு கருவியாக பயன்படுத்த எண்ணுவர்; கவனமுடன் பேசுவதால் சிரமம் தவிர்க்கலாம். வாகனத்தில் மிதவேகம் நல்லது. ஈடுபடுவர்.

**கும்பம்:** உங்களின் திறமையை வளர்த்துக் கொள்வீர்கள். தாராள பணவரவு கிடைக்கும். மனைவி விரும்பிய பொருள் வாங்கிக் கொடுப்பீர்கள்

**மீனம்:** தாயின் அன்பில் ஆசியில் மனதில் உற்சாகம் ஏற்படும். சிறு செயலையும் நேர்த்தியுடன் செய்வீர்கள். தொழில், வியாபாரத் தொடர்பு பலம் பெறும்.

see more news in
NEWUTHAYAN.COM

## கிண்ணம் வென்றது இளந்தென்றல்

யாழ்ப்பாணம், ஜூன் 11
கிளிநொச்சி கரப்பந்தாட்டச் சங்கத்தின் அனுமதியுடன் கிருஸ்ணபுரம் விபுலனாந்தா விளையாட்டுக்கழகம் நடத்திய கரப்பந்தாட்டத் தொடரில் இளந்தென்றல் விளையாட்டுக்கழக அணி கிண்ணம் வென்றது.

கிருஸ்ணபுரம் விபுலனாந்தா விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இறுதியாட்டத்தில் இளந்தென்றல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆதவன் விளையாட்டுககழக அணி மோதியது.

இதில் 5 செற்களைக் கொண்டதாக இறுதியாட்டம் இடம்பெற்றது. முதலாவது செற் ஆட்டத்தை ஆதவன் விளையாட்டுக் கழக அணி 25:15 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. பதிலுக்கு தனது அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்திய இளந்தென்றல் விளையாட்டுக்கழக அணி



அடுத்த 3 செற்களை 25:22, 25:23, 25:21 என்ற புள்ளிகள் அப்படையில் கைப்பற்றியது. இறுதியில் 3:1 என்ற செற் கணக்கில் கிண்ணம் வென்றது இளந்தென்றல் விளையாட்டுக்கழக அணி. (23)




# மன். பிரதேச செயலக அணி சம்பியனானது

மன்னார் மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான விளையாட்டு விழாவில் மன்னார் பிரதேச செயலக அணி சம்பியனானது.

மன்னார் மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான விளையாட்டு விழாவின் நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை அடம்பன் மகா வித்தியாலய பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் மன்னார் பிரதேச செயலக அணி 169 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும், மாந்தை மேற்கு பிரதேச செயலகம் 129 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும், முசலிப் பிரதேச செயலக அணி 58 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்தையும் பெற்றன.

விளையாட்டுக்குழுவின் தலைவர் மாந்தை மேற்கு பிரதேச செயலர் எஸ்.கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக மன்னார் மாவட்ட செயலர் சி.ஏ.மோகன்றாஸ் கலந்து கொண்டார்.



சிறப்பு விருந்தினர்களாக மேலதிக மாவட்ட செயலர் எஸ்.குணபாலன், வடமாகாண விளையாட்டுத்துறை பணிப்பாளர் ஆர்.குருபரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதில் மன்னார், நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு, மடு ஆகிய ஐந்து பிரதேச செயலகங்கள் சார்பாக விளையாட்டு வீரர்கள் கலந்து கொண்டிருந்தனர். (56)

## ஞானமுருகன் அணி அரையிறுதிக்கு தகுதி

யாழ்ப்பாணம், ஜூன் 11
குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகத்தின் அனுசரனையுடன் சூசையப்பர் விளையாட்டுக்கழகம் நடத்தும் தூயஒளி வெற்றிக்கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணி அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. குருநகர்பாடும்மீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற காலிறுதியாட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் அணியை எதிர்த்து நாவற்குழி அன்னை அணி மோதியது. இதில் ஞானமுருகன் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (23)

## செந்தமிழ், சுப்பர்றாங் இறுதிக்கு முன்னேற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 11.
ஆழியவளை அருணோதயா விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 11 பேர் பங்கு பற்றும் கால்பந்தாட்டத் தொடரில் செந்தழிழ் விளையாட்டுக்கழகம், புதுக்குடியிருப்பு சுப்பர்றாங் விளையாட்டுக்கழகம் ஆகிய அணிகள் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றன.

ஆழியவளை அருணோதயா விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற முதலாவது அரையிறுதியாட்டத்தில் செந்தழிழ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மெசியா விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் செந்தழிழ் விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

இரண்டாவதாக அரையிறுதியாட்டத்தில் புதுக்குடியிருப்பு சுப்பர்றாங் அணியை எதிர்த்து உடுத்துறை பாரதி அணி மோதியது. இதில் புதுக்குடியிருப்பு சுப்பர்றாங் அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (23)



# திருநெல்வேலி துடுப்பாட்ட வி.க. ஏபி அணியை வீழ்த்தி வெற்றி

யாழ்ப்பாணம், ஜூன் 11
ஞானம்ஸ்பெயின்ற், யாழ்ப்பாணம் மாவட்ட துடுப்பாட்டச்சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட அழைக்கப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையில் நடத்தும் விஜயரெட்ணம் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான ரி/ 20 துடுப்பாட்டதொடரில் திருநெல்வேலி துடுப்பாட்ட விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் ஏபி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து திருநெல்வேலி துடுப்பாட்ட விளையாட்டுக்கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஏபி விளையாட்டுக்கழக அணி 19.4 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 109 ஓட்டங்களை பெற்றது. இதில் ஆதித்தன் 30 ஓட்டங்களையும், பார்த்தீபன் 24 ஓட்டங்களையும், உத்தமன் 17 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் சுரேஸ் 4 இலக்குகளையும், பிரபவன் 3 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களம் இறங்கிய திருநெல்வேலி துடுப்பாட்ட விளையாட்டுக்கழக அணி 19.1 பந்துப்பரிமாற்றங்களில் 3 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

அணி சார்பாக தர்சிகன் 52 ஓட்டங்களையும், பிரபவன் 28 ஓட்டங்களையும், லவக்காந் 18 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் உத்தமன் 2 இலக்குகளையும், விஸ்ணு 3 இலக்குகளையும் கைப்பற்றினர். (23)









# இந்திய அணி அபார வெற்றி

வர்ணணையாளர்கள் மழை வருவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன என்று சொல்லிக் கொண்டுடிருந்ததை ஆஸ்திரேலியா அணி வீரர்கள் செவிமடுத்து எந்தவொரு இலக்கையும் இழக்காது 20 பந்துப்பரிமாற்றங்கள் வரை தாக்குப் பிடித்து, மழை பெய்தால் வெற்றி என கணக்கிட்ட ஆஸ்திரேலியா அணி ஓட்டக் குவிப்பை விடுத்து இலக்குகளை இழக்காமல் தக்க வைப்பதை விரும்பி இறுதியில் வெற்றியைக் கோட்டை விட்டது.

நடப்பு உலகக் கிண்ணத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற போட்டியில் இந்தியா- ஆஸ்திரேலியா அணிகள் மோதின. இதில் இந்திய அணி 36 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அணியின் ஆரம்பும் பலமாக அமைந்தது. அணி 127 ஓட்டங்களைப் பெற்ற போதே முதலாவது இலக்கு இழக்கப்பட்டது. தவான் சிறப்பாக ஆடி நடப்பு உலகக் கிண்ணத்தில் தனது முதலாவது சதத்தைப் பூர்த்தி செய்தார். கோக்லியும் தன் பங்குக்கு அதிரடியை வெளிப்படுத்தியிருந்தார். இது போதாதென்று டோனி இறங்க வேண்டிய இடத்தில் பாண்டியாவைக் களமிறக்கியது அணி. அவர் இறங்கி வாணவேடிக்கையை காட்ட ஆரம்பித்தார். எனினும் அவர் தனது அரைச் சதத்தை தவற விட்டு ஆட்டமிழந்தார். அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப்பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 352 ஓட்டங்களைப் பெற்றது. போட்டி நடைபெற்ற இந்த ஓவல் மைதானத்தில் 250 ஓட்டங்கள் எனில் துரத்தியடிப்பது இலகு ஆனால் இந்திய அணி அதற்கு மேலான ஓட்டங்களைக் குவித்திருந்தது.

பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலியா அணியின் துடுப்பாட்ட வீரர்கள் மெதுவான ஆட்டத்தையே வெளிப்படுத்தினர். எல்லோரும் எதிர்பார்த்த வீரர் வோர்னர் பந்துகளை வீணடித்துச் சென்றிருந்தார். ஸ்மித் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி எல்.பிடபிள்யு முறையில் ஆட்டமிழந்தார். இறுதியில் அலெக்ஸ் கேரே அதிரடியாகத் துடுப்பெடுத்தாடியிருந்தார். இறுதியில் அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 36 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

பந்து வீச்சில் பும்ரா, புவனேஸ்குமார் அசத்தியிருந்தனர். ஆட்டநாயகனாக இந்திய அணி வீரர் தவான் தெரிவு செய்யப்பட்டார்.

# தனக்கு எதிராக சதி

## ஆப்கான் வீரர் ஷசாத் பரபரப்புக் குற்றச்சாட்டு

ஆப்கானிஸ்தான் இலக்குக் காப்பாளரும், ஆரம்பத் துடுப்பாட்ட வீரருமான மொகமது ஷசாத் சில நாள்களுக்கு முன்னர் உலகக் கிண்ணப் போட்டியில் இருந்து காயம் காரணமாக விலகினார் என்று அறிவிக்கப்பட்டது, ஆனால் அதில் உண்மையில்லை தனக்கு எதிராக ஆப்கான் கிரிக்கெட் சபை அதிகாரிகள் சதி செய்கின்றனர் என்ற பரபரப்புக் குற்றச்சாட்டை எழுப்பியுள்ளார்.

பாகிஸ்தானுக்கு எதிரான பயிற்சி ஆட்டத்தில் முழங்கால் பிரச்சினை இவருக்கு ஏற்பட்டது. ஆனால் ஆஸ்திரேலியா, இலங்கை அணிகளுக்கு எதிராக சிறப்பாக ஆடினார். ஆனால் நியூஸிலாந்துக்கு எதிரான ஆட்டத்துக்கு முன்பாக ஷசாத் காயம் காரணமாக உலகக் கிண்ணத்தில் இருந்து விலகுவதாக அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் மொகமது ஷசாத் தெரிவிக்கையில்;

நான் விளையாடத் தகுதியான உடல் நிலையில் இருக்கும் போது நான் எவ்வாறு தகுதியிழப்புச் செய்யப்பட்டேன் என்று தெரியவில்லை. ஆப்கான் கிரிக்கெட் சபையில் உள்ள சிலர் எனக்கு எதிராக சதிவேலையில் ஈடுபட்டுள்ளனர். வைத்தியர், அணித் தலைவர் ஆகியோருக்கு மட்டுமே எனக்குப் பதில் வேறு ஒருவர் அணியில் இணைக்கப்படுகின்றார் என்று தெரியும். பயிற்சியாளர் பில் சிம்மன்ஸுக்குக் கூட பின்னர்தான் தெரியும். நியூஸிலாந்துக்கு எதிரான போட்டிக்கு பயிற்சியை முடித்து விட்டு கைத்தொலைபேசியைப் பார்த்தேன், நான் உலகக் கிண்ணத்திலிருந்து விலகிவிட்டேனாம். அணி வீரர்களுக்கும் இது தெரியவில்லை. அவர்கள் கடும் அதிர்ச்சியில் உறைந்தனர்.

இது தொடர்பாக ஆப்கான் கிரிக்கெட் சபை தலைமைச் செயலர் தெரிவிக்கையில்;

ஷசாத் கூறுவது முற்றிலும் தவறு. முறையான மருத்துவ அறிக்கை பன்னாட்டு கிரிக்கெட் சபையிடம் அளிக்கப்பட்டுள்ளது. உடற்தகுதி இல்லாத ஒரு வீரரை அணியில் எப்படி தொடர அனுமதிக்க முடியும்? உலகக் கிண்ணத்தில் இனி ஆட முடியவில்லையே என்ற ஆதங்கமும் ஏமாற்றமும் அவருக்கு உள்ளதைப் புரிந்து கொள்கிறேன். ஆனால் உடற்தகுதி விவகாரத்தில் சமரசம் இல்லை- என்றார்.




இதற்கு ஷசாத் மீண்டு பதிலளிக்கையில்;

முழங்கால் பிரச்சினை இருந்தது. ஆனால் ஐஸ் வைத்து ஒருமாதிரி சரியாகிவிட்டது. நியூஸிலாந்து போட்டிக்குத் தயாராகவே இருந்தேன். ஆனால் திடீரென நான் இல்லை என்று அதிர்ச்சி அறிவிப்பு வருகிறது. ஒரு மூத்த வீரரை இப்படியா நடத்துவது? என்னை உடைத்து நொறுக்கி விட்டார்கள். இதேதான் மற்ற மூத்த வீரர்களுக்கும் நடக்கும்- என்றார்.

# மழையால் கைவிடப்பட்ட இரண்டாவது போட்டி

நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் 15ஆவது லீக் தென்னாபிரிக்கா - மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையேயான போட்டி கடும் மழை காரணமாகக் ககைவிடப்பட்டது.

போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணி முதலில் தென்னாபிரிக்கா அணியைத் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது. தென்னாபிரிக்க அணி துடுப்பெடுத்தாடிய போது 7.3 ஆவது பந்துப்பரிமாற்றத்தில் 2 இலக்குகளை இழந்து 29 ஓட்டங்களை பெற்றிருந்த போது மழை குறுக்கிட்டதால் போட்டி இடை நிறுத்தப்பட்டது. தொடர்ந்து கடும் மழை இடைவிடாது பெய்தமையால் போட்டி கைவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இதனால் இரு அணிகளுக்கும் தலா ஒவ்வொரு புள்ளிகள் வழங்கப்பட்டது.

கடந்த 11ஆவது லீக் போட்டியில் இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் இடம்பெறவிருந்த போட்டியும் மழை காரணமாகக் கைவிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.




## இன்றைய போட்டியில் நுவான் பிரதீப் இல்லை

இலங்கை கிரிக்கெட் அணியின் வேகப் பந்து வீச்சாளர் நுவான் பிரதீப் உபாதை காரணமாக பங்களாதேஷ் அணியுடனான உலகக் கிண்ண போட்டியில் விளையாட மாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று இடம்பெறும் உலகக் கிண்ணப் போட்டியில் இலங்கை - பங்களாதேஷ் அணிகள் மோதுகின்றன.

இந்த நிலையில் இந்தப் போட்டிக்கு தயாராகும் வகையில் இலங்கை அணி நேற்று பயிற்சிப் போட்டிகளில் ஈடுபட்ட போது கைகளினால் பந்தை தடுக்க முற்பட்ட நிலையிலேயே பந்து கை விரலில் தாக்கி காயம் ஏற்பட்டது.

பந்துதாக்கியபின்னர் நுவான் பிரதீப் வைத்திய உதவிகளுக்காக அழைத்துச் செல்லப்பட்டார். இந்த காயம் காரணமாக நுவான் பிரதீப் பங்களாதேஷ் அணிக்கு எதிரான போட்டியில் விளையாட மாட்டார் என இலங்கை கிரிக்கெட் அணியின் நிர்வாகம் அறிவித்தது.இவர்அணியில்இல்லாதது இலங்கை அணிக்கு பெரும் இழப்பாகும்.

# புண்படுத்தாதீர்கள்!! உற்சாகப்படுத்துங்கள்

## ரசிகர்களிடம் கோக்லி வேண்டுகோள்

உலகக் கிண்ணத்தில் இந்தியா- ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையில் இடம்பெற்ற போட்டியில் இந்திய அணித் தலைவர் விராட் கோக்லி துடுப்பெடுத்தாடிய போது, ஆஸ்திரேலிய வீரர் ஸ்மித் எல்லைக் கோட்டுக்கு அருகே களத்தடுப்பில் ஈடுபட்டிருந்தார். அப்போது போட்டியை காண வந்த இந்திய ரசிகர்கள் சிலர் ஸ்மித்தின் மனதை புண்படுத்தும் விதமாக கோஷமிட்டனர். இதை பொருட்படுத்தாத ஸ்மித் ஆட்டத்தில் கவனம் செலுத்தினார்.

இதனை கவனித்த கோக்லி, ரசிகர்களை நோக்கி ஸ்மித்தை கைதட்டி உற்சாகப்படுத்துமாறு கேட்டுக்கொண்டார். இதனையடுத்து ரசிகர்கள் அவ்வாறு கூச்சலிடுவதை நிறுத்தினர். கோக்லியின் மனிதநேயமிக்க இந்தச் செயலைக் கண்ட ஸ்மித், அவரை தட்டிக்கொடுத்து நன்றி தெரிவித்தார்.

இது குறித்து கோக்லி தெரிவிக்கையில்;

ரசிகர்களின் இத்தகைய செயலுக்காக நான் மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன். இந்திய ரசிகர்கள் மோசமான முன்னுதாரணமாக இருந்துவிடக் கூடாது என்ற நோக்கில் அவர்களிடம் ஸ்மித்தை கைதட்டி உற்சாகப்படுத்துமாறு கேட்டுக்கொண்டேன். ஆஸ்திரேலியா விளையாடிய முன்னைய போட்டியிலும் இவ்வாறு நடந்ததாக கேள்விப்பட்டேன். என்னுடைய பார்வையில் இது ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல.

வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை
இப்பொழுது!!!
மிக குறைந்த கட்டணத்தில்
UK - 350/-
France
Germany
Italy
Denmark
500/=
திருமுருகன் கொம்நெற்
321, K.K.S. Road, Jaffna. 0777 554 528




அனைவருக்கும் ஏற்ற DFCC வங்கி


வங்கியென்றால் அது அனைவருக்கும் ஏற்ற வங்கியாக இருக்கவேண்டும். சேமிப்புக் கணக்கு, நடைமுறைக் கணக்கு, நிலையான வைப்பு, கிரடிட் காட், லீசிங், வீட்டுக் கடன், தனிப்பட்ட கடன், வேர்ச்சுவல் வொலட், வியாபார நிதிச் சேவைகள் உட்பட அனைத்து வங்கிச் சேவைகளையும் வழங்கும் வங்கிதான் DFCC வங்கி.

24 மணிநேர அழைப்பு நிலையம்: 0112 350000
www.dfcc.lk

DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

பிரெஞ்சு ரென்னிஸ் தொடரை 12ஆவது தடவையாக

# கிண்ணத்தை வென்று நடால் சாதனை



கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற பிரெஞ் பகிரங்க ரென்னிஸ் போட்டி பாரீஸ் நகரில் நடைபெற்று வந்தது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவின் இறுதிப் போட்டி இடம்பெற்றது. நடப்பு சம்பியனும், 2ஆம் நிலை வீரருமான ரபேல் நடாலும், 4ஆம் நிலை வீரர் டொமினிக் திம்மும் பலப்பரீட்சை நடத்தினர்.

இதில் ரபேல் நடால் ஏற்கனவே இந்தத் தொடரில் 11 முறை வெற்றி பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. 12 ஆவது போட்டியிலும் நடால்'களிமண் தரை' போட்டிகளில் நானே ராஜா என்பதை மீண்டும் ஒரு முறை. நிரூபித்து காட்டினார்.

டொமினிக் திம்மால், நடாலுக்கு சவால் கொடுக்க முடிந்ததே தவிர அவரது ஆதிக்கத்தை தடுத்து நிறுத்த முடியவில்லை. இந்த மோதலில் நடால் 6:3, 5:7, 6:1, 6:1 என்ற செற் கணக்கில் டொமினிக் திம்மை வீழ்த்தி 12ஆவது முறையாக பிரெஞ் பகிரங்க ரென்னிஸ் பட்டத்தை வென்றார்.

இந்தப் பட்டத்தையும் வென்று அதிக முறை இந்தப் பட்டத்தை வென்ற நபர் என்ற புதிய சரித்திரத்தையும் படைத்தார். இதற்கு முன்பு ஆஸ்திரேலிய வீராங்கனை மார்கரெட் கோர்ட் ஆஸ்திரேலிய பகிரங்க ரென்னிஸை 11 முறை வென்றதே அதிகபட்சமாக இருந்தது. நடால் இந்த மைதானத்தில் 95 ஆட்டங்களில் ஆடி அதில் 93 ஆட்டங்களில் வெற்றி பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. டொமினிக் திம் கடந்த ஆண்டும் நடாலிடம் தான் இறுதி ஆட்டத்தில் தோற்று இருந்தமை குறிப்பிடத்தக்கது.

வெற்றிக்கு பிறகு நடால் தெரிவிக்கையில்; முதலில் டொமினிக் திம்முக்கு வாழ்த்து சொல்ல விரும்புகிறேன். அவருக்காக நான் வருந்துகிறேன். ஏனெனில் அவர் இங்கு பட்டத்துடன் நிற்பதற்கு தகுதியானவர். அவர் கடின உழைப்பாளி. எதிர்காலத்தில் நிச்சயம் இந்தக் கிண்ணத்தை வெல்வார் என்று நம்புகிறேன்.

மீண்டும் ஒரு முறை பட்டம் வென்றதை நம்ப முடியவில்லை. எனது உணர்வுகளை விவரிக்க வார்த்தைகள் இல்லை. 2005ம் ஆண்டு இங்கு முதல் முறையாக விளையாடிய போது அது எனது கனவாக இருந்தது. ஆனால் 2019 ஆம் ஆண்டு வரை தொடர்ந்து விளையாடுவேன் என்று ஒரு போதும் நினைத்ததில்லை. இது மிகவும் சிறப்பு வாய்ந்த தருணம் - என்றார்.

விசேட
இறுதிக்கருத்தரங்கு
சிறைக்காவலர்
ஜேலர் - II
புனர்வாழ்வு உத்தியோகத்தர்
செவ், புதன், வியாழன்
பி.ப 3.30 - 6.30
வடமாகாண முகாமைத்துவ
உதவியாளர்
செவ்வாய், வியாழன்
பி.ப 4.00 - 6.30
076 688 3394
(யாழ். ஆஸ்பத்திரி வீதியில பஸ்நிலையத்திலிருந்து 100M தூரத்தில்)

மருந்தக உதவியாளர் தேவை
குருநகரில் உள்ள மருந்தகம் (பாமசி) ஒன்றுக்கு கணினி அறிவும் அத்துடன் மருந்தகத்தில் கடமையாற்றிய அனுபவம் உள்ள ஒருவர் தேவை.
(மாநகரசபை எல்லைக்குள் உட்பட்டவர்கள்)
070 191 7630

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.06.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.